நன்றி - நூலகத்திட்டம்

சரிநிகர்
SARINIHAR
# சரிநிகர்
சரிநிகர் சமானமாக வாழ்வ்மிந்த நாட்டிலே - பாரதி

சாமியே சரணம்...!



சாமியார் கால்பிடித்துச் சந்திரனார் வெளிவந்தார்
பூமியிலே ஈதொன்றும் புதுமையில்லை- நாமிருக்கும்
நாட்டினிலே நல்லவர்க்குச் சிறைநீதி; நக்குகின்ற
கூட்டத்திற் கல்லவோ குடை.

- ஈழமோகம்

இதழ் 44 ஏப்.7 - ஏப்.20 1994 விலை 7/=

## மன்னார்:

# காணாமல் போகும் இளைஞர்கள்!

## இராணுவ சிவில் நிர்வாகத்தின் கைங்கரியம்?

பூரண இராணுவக் கட்டுப்பாட்டிற்குள் இருப்பதாகக் கூறப்படும் மன்னார்த் தீவில் அடிக்கடி இளைஞர்கள் காணாமல் போகிறார்கள்; இராணுவ மற்றும் பொலிஸ் நிலைகளை அண்மித்துப் போகும்போது கைது செய்யப்படும் இளைஞர்களிலும் வீடுகள் சோதனையிடப்படும்போது கைதாகும் இளைஞர்களிலும் பலர் மீளவிடுவிக்கப்படுவதே இல்லை என அறிவிக்கப்படுகிறது. பொலிஸ் நிலையங்களுக்கு வந்து கையொப்பமிடுமாறு பணிக்கப்பட்டவர்களில் சிலர் திரும்பி வரவே இல்லை என்றும் கூறப்படுகிறது. அகதிமுகாமொன்றிலிருந்து கையொப்பமிடச் சென்ற சித்திலிங்கம், புவனேஸ்வரன் ஆகிய இருவரும் இவ்வாறு அண்மையில் காணாமல் போனவர்கள் ஆவர்.

மன்னார்த் தீவில் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டினுள் நடக்கும் சிவில் நிர்வாகத்தின் கீழ் அங்குள்ள மக்கள் அனுபவிக்கும் துயரங்களில் மிகவும் மோசமானது இதுவே என்று தெரிவிக்கப்படுகிறது. இலங்கை அரசாங்கத்தின் சிவில் நிர்வாகத்தின் கீழ் அல்லல்படும் இம் மக்களது நிலைமைகள் வெளியாரது கவனத்தை ஈர்க்காவண்ணம் இருட்டினுள் விடப்பட்டிருக்கின்றன; வவுனியா, மட்டக்களப்பு திருமலை பகுதிகள் பற்றி வரும் செய்திகள் அளவுக்குத்தானும் மன்னார் பற்றிய செய்திகள் வெளிவருவதில்லை என்று அங்கலாய்க்கிறார் அங்குள்ள அரச ஊழியர் ஒருவர்.

மேலதிக விபரங்களுக்கு பார்க்க பக். 8,9,10

### அரசு மனித உரிமைகளை மதிக்கிறதாம் !

நாங்கள் ஜனாதிபதியின் பிரதிநிதிகள் என்ற அறிமுகத்துடன் ஐ.நா பிரதிநிதிகளை சந்தித்த குழு ஒன்று இலங்கையின் மனித உரிமை மீறல்கள் பற்றிய பிழையான தகவல்களைக் கொடுத்துள்ளார்கள் எனத் தெரியவருகிறது.

1994 மார்ச் 7ம் திகதி ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் சங்கத்தின் 50வது ஆண்டு பூர்த்தி விழாவின் போது நீதிபதி திலக் மாரபன தலைமையில் கலந்து கொண்ட குழுவினரே இவ்வாறு தெரிவித்திருந்தார்கள்.

வதை, இம்சை என்பவற்றிற்கெதிரான ஐ.நாவின் கொள்கைகளை இலங்கை அங்கீகரிக்கிறது.

1991க்கு முன்னர் காணாமல் போன மற்றும் இறந்தவர்கள் தொடர்பாக விசாரணை நடாத்துவதற்கான கமிட்டி ஒன்றினையும் அமைத்துள்ளது.

கைது செய்து தடுப்புக் காவலில் வைப்பதற்கான அவசரகாலச் சட்டம் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

ஐ.நாவின் 'காணாமல் போனோர்' பற்றிய கமிட்டியின் பிரேரணைகள் இலங்கையில் செயற்படுத்தப்படுகின்றன.

மனித உரிமைகளை மீறியோருக்கு எதிராக வழக்குகள் பல தொடுக்கப்பட்டுள்ளன.

மேற்குறித்த அம்சங்களை இலங்கை அரசாங்கம் நடைமுறைப்படுத்துவதாக நீதிபதி திலக் மாரபன கூறியுள்ள போதும், இவை முற்றிலும் பொய்யான தகவல்கள் என்றும், அரசு மனித உரிமைகளை மதித்து நடப்பதில்லை என்றும் மனித உரிமைவாதிகள் கருத்துத் தெரிவிக்கிறார்கள்.

கடந்த காலங்களிலும் இன்றும் பொலிஸ் மற்றும் முப்படைகளின் மனித உரிமை மீறல்கள் நடந்திருக்கிற போதும் அவை பற்றி அரசு அக்கறைப் படுவதில்லை. குறிப்பாக சூரியகந்தை, மைலந்தனை சம்பவங்கள் மனித உரிமைக் கமிட்டியின் முன்னிலையில் கொண்டு வரப்பட்ட போதும் அவற்றை மூடி மறைப்பதில் அரசு கவனம் செலுத்தியதே தவிர அவற்றின் உண்மைகளை வெளிக் கொண்டுவருவதில் டி.பி.விஜேதுங்க அரசு ஒருபோதும் அக்கறை காட்டியதில்லை என்றும் அவர்கள் தெரிவித்தார்கள்.

## ஹிஸ்புல்லா சுதந்திரக் கட்சியில்!

மட்டக்களப்பு மாவட்ட முஸ்லீம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் ஹிஸ்புல்லா ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியுடன் சேருவதற்கான பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த பொதுத்தேர்தலில் காத்தான்குடி, ஓட்டமாவடி, ஏறாவூர் ஆகிய மூன்று முஸ்லீம் பிரதேசங்களையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற வேட்பாளராக ஹிஸ்புல்லாவை முஸ்லீம் காங்கிரஸ் நியமித்திருந்தது. எனினும் இம் மூன்று பிரதேசங்களுக்கும் இரண்டு வருடங்களுக்கொரு முறையாக சுழற்சிமுறையில் பிரதிநிதித்துவம் வழங்கப்படும் என்ற உறுதி மொழியின் பெயரிலேயே முதலாம் நபராக ஹிஸ்புல்லா நியமிக்கப்பட்டார். ஆனால் இப்போது தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை ஏனைய பிரதேசங்களின் உறுப்பினர்களுக்கு விட்டுக் கொடுக்க மறுப்பதால் முஸ்லீம் காங்கிரசிற்கும் இவருக்குமிடையிலான முரண்பாடு அதிகரித்துச் செல்வதாகவும் நடந்து முடிந்த வருடாந்த மகாநாட்டில் இவருக்குரிய அந்தஸ்து கொடுக்கப்படாமல் ஒதுக்கப்பட்டதாகவும் பேசப்படுகிறது. கூடவே ஏறாவூர், ஓட்டமாவடி பிரதேசசபைகளின் தோல்விக்கும் ஹிஸ்புல்லாவே காரணம் எனவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இந்த முரண்பாடுகளினாலும் நடந்த முடிந்த உள்ளூராட்சிச் சபைத் தேர்தலிலும், தென்மாகாணசபைத் தேர்தலிலும் ஐ.தே.கட்சி சரிவுப்பாதையை நோக்கிச் செல்வதனாலும் எதிர்வரும் → 16

### செட்டி நட்டம் ஊர் மேலே!

தென் மாகாண சபையில் வெற்றிபெற்றதோடு சந்திரிகா குமாரணதுங்கவே அடுத்த ஜனாதிபதி வேட்பாளர் என்ற ஆரவாரம் வலுத்துவிட்டது.

சந்திரகா தனது தேர்தல் மேடைகளிலெல்லாம் இடதுசாரிக் கட்சிகளுடன் சேர்ந்து இலங்கையின் திறந்த பொருளாதாரக் கொள்கைஸ்ய தீவிரமாக விமர்சித்தார்.

ஆனால், தேர்தலில் வெற்றி பெற்ற கையோடு, இலங்கையில் பிரபல தொழில் அதிபர்களையும் பிறநாட்டு தூதுவர்களையும் ஐந்து நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் விருந்துக்கழைத்து தனது அற்புதமான பொருளாதாரத் திட்டத்தைப் பற்றிய முகவுரையை விளக்கியுள்ளார்.

அதாவது அவரது பொருளாதாரம் 'மனிதத்தன்மை" வாய்ந்த ஒரு திறந்த பொருளாதாரக் கொள்கையாம்!

திறந்த பொருளாதாரத்துக்கும் மனிதாபிமானத்துக்கும் முடிச்சுப்போட முன்னாளில் 'சோசலிச'வாதிகள் எனத் தம்மைக் கூறிக் கொண்ட இவர்களுக்கு மட்டும்தான் முடியும்.

மனிதாபிமானம் கலக்கப்பட்ட புதிய திறந்த பொருளாதாரக் கொள்கை என்ற சாம்பார்தான் இவர் இப்போது ஐ.தே.கவுக்கு மாற்றாக அறிவித்துள்ள கொள்கை!

'சாம்பார்' அரசியலுக்கு பேர்போன சுதந்திரக் கட்சிக்கு வாய்த்திருக்கிறார் ஒரு பொருத்தமான தலைவி.

தேர்தலில் வெற்றி பெற முதலாளிகளின் தயவு அவசியம் என்பதையும் மறுபுறத்தில், போலியாகவேனும் 'சோசலிசக்' கருத்துக்களை உச்சரிப்பது அவசியம் என்றும் புரிந்துவைத்திருக்கிறார்.`
பிழைக்கத் தெரிந்தவர்.

கூடவே இன்னொன்றையும் கூறியுள்ளார் அவர்:

ஈழம்வாதிகள் அற்ற நிலைமையை அவர் தோற்றுவிப்பாராம்.

ஆக, எல்லாம் ஒன்றுதான்.

விஜயதுங்க போன்ற ஒரு நேரடியான இனவாதிக்குப் பதில், இனவாதத்தை புதிய பரிமாணங்களுடன் நடைமுறைப்படுத்தவுள்ள ஒரு தலைவரை சிறுபான்மையினர் சந்திக்கப் போகிறார்கள்.

செட்டி நட்டம் ஊர் மேலே என்பார்கள். சிறுபான்மையினர் தலையில் தான் எல்லாம் விழும் என்பது இந்நாட்டு விதிபோலும்!

### கறுப்புப் பொட்டும் கரிய நிறமும்

மட்டக்களப்பில் தேர்தல் காலத்தில் ஓய்ந்திருந்த சுற்றிவளைப்புகளும் கைதுகளும் மீளவும் ஆரம்பமாகியுள்ளன. கடந்த வாரம் ஆரையம்பதி அதிரடிப்படை முகாம் செக்பொயின்றில் வைத்து விசேட அதிரடிப் படையினரால் இளம் யுவதி ஒருவர் பஸ்ஸிலிருந்து இறக்கிக் கொண்டு செல்லப்பட்டார். அவருக்கு இதுவரை என்ன நடந்தது என்றே தெரியவில்லை.

குறிப்பாக இரட்டைப் பின்னல், கறுப்புப் பொட்டு, கரிய நிறத் தோற்றமுள்ள இளம் பெண்கள் 'சுதந்திரப் பறவைகள்' என்றதன் பெயரில் படையினரால் கைது செய்து கொண்டுசெல்லப்படுகிறார்கள். இதனால் இளம் பெண்கள் 'இரட்டைப் பின்னல் போடுவதையும் கறுப்புப் பொட்டுப் போடுவதையும் தவிர்த்து வருகிறார்கள். ஆனால் கரிய நிறத் தோற்றமுள்ளவர்கள் என்ன செய்வது எனத் தெரியாது தவிக்கிறார்கள்!

## ஆயுத பயணி?

புகையிரத நிலைய அதிபர்கள் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக மதவாச்சியில் பணிபுரியும் புகையிரத நிலைய அதிபர் நெல்சன் அவர்கள் 26ம் திகதி இரவு தபால் புகையிரதத்தில் கொழும்புக்குப் பிரயாணம் மேற்கொண்டார்.


ஏறகனவே பதிவு செய்யப்பட்டிருந்த இரண்டாம் வகுப்பு எட்டாம் இலக்க உறங்கல் ஆசனத்தில் (Second class Berth) பயணம் செய்வதற்காக மதவாச்சியில் ரயிலில் ஏறினார். இருவர் பிரயாணம் செய்யக்கூடியதாக அந்த அறையில் இவருக்கென ஒதுக்கப்பட்டிருந்த கீழ்ப் படுக்கையில் ஒருவர் பிரயாணம் செய்து கொண்டிருந்தார். தனது டிக்கெட்டைக் காட்டி அந்த படுக்கை தனக்குரியது எனக்கேட்டுள்ளார் புகையிரத அதிபர். அவருக்குரிய அந்த படுக்கை ஆசனத்தைத் தருவதற்கு அந்த பயணி மறுத்துவிட்டார். அவரை மேல் படுக் → 16

நன்றி - நூலகத்திட்டம்



# சந்திரசேகரன் விடுதலை: ஒரு ஆயுட்கால களங்கம்!

தலவாக்கலையான்



மலையக மக்களுக்கு துணிச்சலோடும் நேர்மையோடும் தலைமை தாங்கக் கூடிய புதிய மாற்றுத் தலைவன் என பரவலாக எதிர்பார்க்கப்பட்ட சந்திரசேகரனின் அரசியல் நேர்மை சந்தேகத்திற்குரிய ஒன்றாக மாறியிருக்கிறது.

இன்று அவர் அரசியல் வட்டாரங்களின் கடும் விமர்சனத்திற்கு உள்ளாகி வருகிறார். அடிக்கடி அரசின் அடக்கு முறைக்குள்ளாதலினால் மலையக இளைஞர்களின் ஆதர்ச வீரபுருசனாக மாறிப் பெரும் அனுதாப அலை ஒன்று உருவாகியிருந்த வேளையில் அவரது அரசியல் சறுக்கல் அம்பலத்திற்கு வந்து கொண்டிருக்கிறது.

சந்திரசேகரன் 1990இல் ஒரு தடவை திடீரென கைது செய்யப்பட்டார். அதற்கான காரணம் கூறப்படவில்லை. அதன் பின்னணியில் அரசியல் பழி வாங்கல் இருந்தது. மலையக மக்கள் முன்னணி, மக்களை அணிதிரட்டி அதற்கெதிராகப் போராடியது. எதிர் கட்சிகளும் ஜனநாயக பத்திரிகைகளும் சந்திரசேகரன் கைது செய்யப்பட்டதைக் கண்டித்தன. இதன் பயனாக ஒரு வாரத்திற்குள்ளாகவே அவர் விடுதலையானார். அன்று ஏற்பட்ட பிரபல்யம் அவரை அரசியல் பிரமுகர் வரிசைக்கு உயர்த்தியது.

1991ல் மீண்டும் ஒருமுறை அவரும் மலையக மக்கள் முன்னணியின் மற்றுமிரு தலைவர்களான பி.ஏ.காதர், வி.ரி. தர்மலிங்கம் ஆகியோரும் கூட்டுப்படைத் தலைமையகக் குண்டு வெடிப்பு சம்பவத்தின் சூத்திரதாரி எனச் சந்தேகிக்கப்படும் வரதனுக்கு புகலிடம் வழங்கியதாகக் கூறி கொழும்பு பொலிஸாரினால் கைதை செய்யப்பட்டனர். மலையகத்தில் இக்கைது கண்டித்து வேலை நிறுத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. ஆரம்பத்தில் உண்மை நிலையறியாது தயக்கம் காட்டிய எதிர் கட்சிகள் கூட பின்னர் இவர்களது விடுதலைக்காக குரல் கொடுத்தன. சர்வதேச மன்னிப்புச்சபை போன்ற பலம் பொருந்திய மனிதாபிமான ஸ்தாபனங்கள் தலையிட்டன. எனினும் இவர்கள் விடுதலை செய்யப்படவில்லை. வழக்கு விசாரணை கூட துரிதப்படுத்தப்படவில்லை.

இவர்கள் மூவரும் தொடர்ந்த மனித உரிமைமீறல் வழக்கை விசாரித்த உயர் நீதிமன்றம் இவர்களைக் கைது செய்ததும் தடுப்பு காவலில் வைத்திருப்பதும் சட்டவிரோதமென தீர்ப்பளித்து நஷ்ட ஈடு செலுத்துமாறு கட்டளையிட்டது. அப்போதும் அவர்கள் விடுதலை செய்யப்படவில்லை.

கண்டி மேல் நீதிமன்றத்தில் இவர்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டது. இவ்வழக்கை கொழும்புக்கு மாற்றுமாறு இவர்களது சட்டத்தரணிகள் சட்ட மா அதிபரிடம் வேண்டுகோள் விடுத்தனர். பாதுகாப்பு காரணம் காட்டப்பட்டு இம்மனு நிராகரிக்கப்பட்டது.

கடந்த மாகாணசபை தேர்தலில் சிறையிலிருந்து கொண்டு போட்டியிட்டு சந்திரசேகரன் வெற்றி பெற்றார். இது ஒரு பாராளுமன்ற தேர்தல் அல்லாத போதும் தேர்தல் ஒன்றில் சிறையில் இருந்து கொண்டு போட்டியிட்டு வெற்றிபெற்றது இலங்கை வரலாற்றில் இதுவே முதற்தடவையாகும். இவரை சத்தியப்பிரமாணம் செய்வதற்கு அனுமதிக்குமாறு மேல் நீதிமன்ற நீதிபதி டி.பி.வீரசூரிய உத்தரவிட்டார். அதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது பாதுகாப்பு காரணங்களைக் காட்டி பாதுகாப்பு அமைச்சு மேல் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை வாபஸ் பெறச் செய்தது.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஒருவருக்கு சத்தியப் பிரமாணம் செய்யும் உரிமை மறுக்கப்பட்டதை எதிர்த்து எதிர்கட்சிகளும் வெகுஜன பத்திரிகைகளும் குரல் எழுப்பின. அரசு அசையவில்லை.

சந்திரசேகரன் இந் அநீதியை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார். பயனில்லை அரச தரப்பின் ஆட்சேபனையை மீறி உயர் நீதிமன்றம் கூட எதுவும் செய்ய முடியவில்லை.

ஆயினும் அதே அரசு சந்திரசேகரனின் தங்கையின் திருமணத்தை காரணங் காட்டி கடந்த 18.03.94ல் அவரை திடீரெனப் பிணையிலே விடுதலை செய்துள்ளது.

சுதந்திர கட்சி எம்.பியான மகிந்த ராஜபக்ஷ சிறையிலே இருக்கும் போது தான் அவரது தாயார் காலமானார். அவருக்குப் பிணை வழங்கப்படவில்லை. தடுப்புக்காவலில் இருக்கும் ஒருவரின் ரத்த உறவினர் ஒருவர் இறந்து விட்டால் கூடப் பாதுகாப்பு அமைச்சு அனுமதித்தால் மாத்திரமே அவரை அழைத்துச் சென்று பிரேதத்தைக் காட்ட முடியும். இதை காரணமாக வைத்து பயங்கரவாதத் தடை சட்டத்தின் கீழ் வழக்குத் தொடரப்பட்டிருக்கும் ஒருவரை பிணையில் செல்ல அனுமதிக்க முடியாது.

சட்டம் அப்படி இருக்க, சத்தியப் பிரமாணம் செய்வதை பாதுகாப்புக் காரணங்களைக் காட்டி, தடுத்த அதே அரசு சந்திரசேகரனை தங்கையின் திருமணத்திற்கு பிணையில் செல்ல அனுமதித்தது எப்படி?

1. சந்திரசேகரன் மீது ப.த.சட்டத்தின் 2ம் பிரிவின் கீழ் குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது. சாதாரண மொழியில் ''ராஜதுரோக'' குற்றச்சாட்டு என்பார்களே, அதற்கு நிகரான பாரதூரமான குற்றச்சாட்டு இது. (இக்குற்றத்தை அவர் புரிந்துள்ளாரா இல்லையா என்பது வேறு விடயம்) இக்குற்றச்சாட்டு நிரூபிக்கப்படுமானால் 5 வருடங்களுக்குக் குறையாத கடுங்காவல் சிறைத்தண்டனையே வழங்க முடியும். 20 வருட கடுங்காவல் தண்டனை வரை வழங்கலாம். அவரது சொத்துக்களை பறிமுதல் செய்யலாம். இப்பிரிவின் கீழ் குற்றஞ் சாட்டப்பட்டுள்ள ஒருவரை வழக்கு விசாரணை முடிவுற்று நீதிபதி அவரை நிரபராதியாகக் கண்டு விடுதலை செய்வதற்கு தனக்குள் தீர்மானித்து விட்ட நிலைமையில் நடைமுறை சிக்கல் காரணமாக காலதாமதம் ஏற்படுமென கருதும் போது மாத்திரமே பிணையில் செல்ல அனுமதிக்கலாம்.

சந்திரசேகரனின் வழக்கு விசாரணை முடியவில்லை. அவரது ''வொயர் டயர்'' விசாரணையே இன்னும் நடைபெறுகிறது. அதன் தொகுப்புரை கூட முடிவடையாத நிலையிலே நீதிபதி அவரை விடுதலை செய்வது பற்றி ஒரு முடிவுக்கு வந்திருக்க முடியாது. வரவும் கூடாது. இந்நிலையில் நீதிபதி தனது சிறப்பதிகாரத்தைப் பயன்படுத்தி பிணை வழங்க முடியாது.

2. நீதிபதி பிணை அனுமதி வழங்கிய பின்னரும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரால் பிறப்பிக்கப்பட்ட தடுப்புக்காவல் கட்டளை வாபஸ் பெறப்படும் வரை ஒருவர் விடுதலை பெற முடியாது. உதாரணமாக ஜே.ஓ.சி.வழக்கில் ப.த.சட்டத்தின் 5ம் பிரிவின் கீழ் குற்றஞ்சாட்டப்பட்டிருந்த என்.சண்முகநாதன் விசாரணை முடிவில் மேல்நீதிமன்ற நீதிபதி ஜெயசூரிய பிணை வழங்கிய போதும் அவர் மீதான தடுப்புக்காவல் கட்டளை பாதுகாப்பு அமைச்சின் செயலாளரினால் வாபஸ் பெறப்படும் வரை பல வாரங்கள் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

ஆனால் சந்திரசேகரனின் தடுப்புக்காவல் கட்டளை முறைப்படி ரத்து செய்யப்படாமலே உடனடியாக பிணையிலே செல்ல அனுமதிக்கப்பட்டிருக்கிறார்.

நீதிதவறாமைக்கும் மனிதாபிமானத்திற்கும் பிரசித்தி பெற்ற நீதிபதி டி.பி.வீரசூரிய அரசியல் நோக்கோடு இப்பிணையை வழங்கவில்லை. தான் முன்பு சந்திரசேகரனுக்கு சத்தியப்பிராணம் செய்வதற்கு வழங்கிய அனுமதி ரத்து செய்யப்பட்டதைச் சுட்டிக்காட்டி நீதிமன்றை கேலிகூத்தாக்க வேண்டாம் என ஆத்திரத்தோடு கூறிப் பிணை மீதான மனுவை ஆரம்பத்தில் ஏற்க மறுத்த அவர், இப்பிணை விவகாரத்தில் அரசு எதிராக செயற்படாது என அரச சட்டவாதி பாதுகாப்பு அமைச்சின் சார்பில் உறுதியளித்ததோடு பிணை வழங்கப்பட வேண்டுமென பிரதிவாதிகளின் தரப்பை விடப் பிடிவாதமாக வலியுறுத்திய வேளை பிரதிவாதிகளின் தரப்பில் சுட்டிக்காட்டப்பட்ட மனிதாபிமான அம்சங்களால் மனம் மாறி முழு பொறுப்பையும் அரச தரப்பின் மீது சுமத்தி விட்டுப் பிணைக்கான அனுமதியை பின்னர் தயக்கத்துடன் வழங்கினார் எனினும்,

அ) நீதிபதியின் இத்தீர்ப்பு சட்டரீதியானதல்ல. அதனை மனிதாபிமானத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட ''மீறல்'' என்றே வர்ணிக்க முடியும். ஏனெனில் இப்பிணைக்கு எந்த சட்ட அடிப்படையும் கிடையாது. அரசு ஆட்சேபிக்காது, எதிராக செயற்படாது என்ற ஒரு நிலைமையை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு இத்தீர்ப்பு வழங்கப்பட்டுளளது.

ஆ) சந்திரசேகரனுக்கு பிணை வழங்குவதை ஆட்சேபிப்பதில்லை அல்லது அவருக்கு பிணை வழங்கப்பட வேண்டும் என்ற தீர்மானம் அரசுதரப்பில் மேற்கொள்ளப்பட்டிராவிட்டால் சந்திரசேகரனுக்குப் பிணை கிடைத்திருக்காது. அப்படியானால் அண்மை காலம் வரை அவர் மீது அரசு கடைப்பிடித்து வந்த கடும்போக்கில் மாற்றம் ஏற்பட்டிருப்பது தெளிவாகின்றது. இந்த மன மாற்றம் இருதரப்பு அரசியல் உறவிலே ஏற்பட்டிருக்கும் மாற்றத்தையே குறிக்கிறது. சட்ட மா அதிபர் திணைக்களம் மீண்டும் ஒருமுறை அரசின் அரசியல் சதுரங்க விளையாட்டின் பகடைக்காயாக செயற்பட்டிருக்கிறது.

இப்படிச் சொல்லும் போது பயங்கரவாதத் தடைச்சட்டத்தை ஆதரிப்பதாக யாரும் கருதிவிடக்கூடாது. பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்பட வேண்டிய ஒன்றே. அதை நீக்குமாறு பலரும் வற்புறுத்தி வந்துள்ளார்கள்; வருகிறார்கள். தமது எதிரிகள் கூட அரசியல் காரணங்களுக்காக சிறைகளிலே தடுத்துவைக்கப்படுவதை ஒருவரால் அங்கீகரிக்க முடியாது. பிணையிலே விடுதலையாகி தனது தங்கையின் திருமணத்தில் கலந்து கொள்ளும் வாய்ப்பு சந்திரசேகரனுக்கு கிடைத்ததையிட்டு யாவருக்கும் மகிழ்ச்சியே. ஆனால் அந்த மகிழ்ச்சியை விட அவர் அரசிடம் மண்டியிட்டதை நினைக்கும் போது ஏற்படும் கவலையே அதிகரிக்கிறது.

சந்திரசேகரனும் ஏனைய ம.ம.முன்னணி தலைவர்களும் கைது செய்யப்பட்டமை, சுமார் மூன்று வருடகாலம் பிணை மறுக்கப்பட்ட நிலையில் தடுத்து வைக்கப்பட்டமை அனைத்துமே அப்பட்டமான அரசியல் பழி வாங்கல் நடவடிக்கைகள் என்பதை உலகறியும.

இதை நீதிமன்றம் கூட ஒத்துக் கொண்டிருக்கிறது. ம.ம.முன்னணி தலைவர்களில் ஒருவரான பி.ஏ.காதரின் ''வொயர் டயர்'' விசாரணையில் மிகவும் துணிச்சலான தீர்ப்பொன்றை வழங்கிய மேல்நீதிமன்ற நீதிபதி சீ.வி.விக்னேஸ்வரன் ''இவரது வழக்கில் அரசியல் பின்னணி ஒன்று இருப்பது தெளிவாகத் தெரிகிறது'' எனக் குறிப்பிட்டுள்ளார்.

இவர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட பழிவாங்கங்கலையும் அடக்கு முறையையும் கண்டித்து இவர்களின் விடுதலைக்காக தொடர்ச்சியாக குரல் கொடுத்து வந்துள்ளவர்கள் கூட தனிநபர் அபிமானமோ தனிப்பட்ட நட்போ காரணமாக தமது சமூகக் கடமையிலிருந்து திசை திரும்பிவிட மாட்டார்கள் என்பது வெளிப்படை.

எனவே சட்டத்துறை என்பது தனக்குச் சார்பாக நடந்து கொள்ளும் போது கருணை காட்டவும், தன்னை எதிர்த்து நியாயம் கேட்கும் போது பழி வாங்கவும் அரசின் கைக்கருவியாக மாறுவதை ஒவ்வொருவரும் கண்டிக்க வேண்டும். சந்திரசேகரன் மக்கள் போராட்டத்தால் அல்லது நீதிவிசாரணையின் பின்னர் விடுதலை பெற்றிருந்தால் அவரை வாழ்த்தி வரவேற்றிருக்கலாம். ஆனால் அவர் திரைமறைவிலே செல்லச்சாமி மேற்கொண்ட தரகு வேலையால் ஜனாதிபதி விஜேதுங்காவிடம் தாழ்படிந்து பிணையிலே விடுதலை பெற்றதை வெட்கக்கேடான சரணடைவு என வெளிப்படையாகக் கூற வேண்டியுள்ளது.

இன்று தென்மாகாண சபை தேர்தல் முடிவுகள் சந்திரசேகரன்- செல்லச்சாமி -அரசு உறவை மூடிமறைக்க வேண்டிய சூழலை இவர்கள் அனைவருக்குமே ஏற்படுத்தியுள்ளது. ஆயினும் இந்த களங்கத்தோடுதான் சந்திரசேகரன் தனது எஞ்சிய ஆயுட்காலம் முழுவதும் இனி வாழ்ந்தாக வேண்டும் என்ற பரிதாபகரமான உண்மையை இவ்விடத்தில் குறிப்பிட்டேயாக வேண்டும்.

## நடப்பிலுள்ள பயங்கரவாதத் தடைச்சட்டம்

இப்பிணை சட்டரீதியானதா எனப் பிரபல சட்டத்தரணி ஒருவரிடம் வினவிய போது பெயர் குறிப்பிட விரும்பாத அவர் கூறிய சட்ட விளக்கம் வருமாறு.

''தடுப்புக்காவலிலே இருவகை உள்ளது. ஒன்று -preventive detention -ஒருவர் குற்றச் செயலில் ஈடுபடாமல் தடுப்பதற்கானது, மற்றது punitive detention தண்டனை வழங்கப்பட்ட ஒருவரை தடுத்து வைப்பதற்கானது. அரசியல் குற்றங்களோடு தொடர்புடைய ஒருவரை நீதிமன்றம் தண்டிக்கும் வரை அல்லது விடுதலை செய்யும் வரை அவசரகால பிரமாணங்களின் கீழ் அல்லது பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் பாதுகாப்புக் காரணங்களுக்காக தடுத்து வைக்கலாம்.''

ஒருவருக்குப் பிணை வழங்க முடியுமா? முடியாதா? என்புது இத்தடுப்பு காவல் கட்டளைகள் ( Detention Order) வாபஸ் பெறப்படுமா? இல்லையா? என்பதையும் எந்த சட்டத்தின கீழ் வழக்கு தொடரப்பட்டுள்ளது என்பதனையும் பொறுத்து தீர்மானிக்கப்படுகிறது. உதாரணமாக, அவசரகாலச் சட்டவிதிகளின் கீழ் வழகக தொடரப்பட்டுள்ள ஒருவருக்கு மேல்நீதிமன்ற நீதிபதி பிணை வழங்க முடியும். ஆனால் அவசரகால பிரமாணங்கள் 17(1) விதியின் கீழ் பாதுகாப்பு செயலாளரால் பிறப்பிக்கப்பட்ட தடுப்புக்காவல் கட்டளையை ரத்து செய்யும் அதிகாரம் அந்நீதிபதிக்கு கிடையாது. எனவே மேல் நீதிமன்ற நீதிபதி பிணையில் ''செல்ல அனுமதித்தாலும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் தனது தடுப்புக்காவல் கட்டளையை வாபஸ் பெறா விட்டால் அவர் விடுதலை செய்யப்படமாட்டார்.

பயங்கரவாதத் தடைச்சட்டம் மிகவும் கடுமையானது. அதன் கீழ் வழக்குத் தொடரப்பட்ட ஒருவரை பிணையில் செல்ல அனுமதிக்கும் விதிகள் எதுவுமே கிடையாது. ப.த.சட்டத்தின் இருவிதிகள் இவ்விடயம் தொடர்பானவை. அவை வருமாறு.

1. ப.த.ச. 6(2) விதிகளின்படி இச்சட்டத்தின் கீழ் குற்றமிழைத்துள்ளதாகக் கருதப்படும் ஒருவர் விசாரணை முடிவுற்றதும் நீதிமன்றத்தின் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டு வழக்கு விசாரணை முடியும் வரை விளக்கமறியலில் (Remand) வைக்கப்படுவார். அதாவது பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், ஒருவரை தேசிய பந்தோபஸ்துக்கு ஆபத்தானவர் எனக்கருதி தடுப்புக்காவலில் (Detention) வைக்குமாறு கட்டளை பிறப்பித்திராத நிலையில் கூட அவரைப் பிணையில் விடுதலை செய்யும் அதிகாரம் எந்த நீதிமன்றத்துக்கும் கிடையாது. பயங்கரவாதத் தடைச்சட்டம் மனிதாபிமானத்திற்கு முரணான ஒன்று என ஜனநாயக சக்திகள் கண்டனம் தெரிவிப்பதற்கு இந்த பிணை மறுப்பு நிலையே பிரதான காரணமாகும்.

2. ப.த.ச. 19ம பிரிவின் கீழ் இச்சட்டத்தின் தண்டனை பெற்ற ஒருவர் அத்தீர்ப்பை எதிர்த்து அப்பீல் செய்துவிட்டு பிணை கோரலாம். அப்பீல் நீதிமன்றம் விசேட நிலைமைகளில் அப்போது பிணை வழங்கலாம்.

மற்றப்படி ப.த.சட்டத்தின் கீழ் வழக்கு தொடரப்பட்ட ஒருவரைப் பிணையில் செல்ல அனுமதிக்கும் விதிகள் கிடையாது.

நீதிபதிக்குரிய சிறப்பதிகாரத்தை ( Discretion) பயன்படுத்தி ப.த.சட்டத்தின் கீழ் குற்றம் சாட்டப்பட்டுள்ள ஒருவரை பிணையிலே விடுதலை செய்ய முடியுமா?

ஒரு குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில் மாத்திரம் முடியும். வழக்கு விசாரணை முடிவுற்றதும் நீதிபதி குற்றஞ்சாட்டப்பட்டவரை நிரபராதி என்க் கருதி விடுதலை செய்வதற்கு தீர்மானித்து விட்ட நிலையில் அல்லது சிறு தவறுதலுக்காக ( ப.த.ச. 5ம் பிரிவின் கீழ் அடங்கும் குற்றச் செயல்கள் இவ்வாறு கருதப்படுகின்றன. ஏனெனில் இப்பிரிவின் கீழ் வழங்கக் கூடிய அதிகபட்ச தண்டனை ஐந்து வருட கடூழியச் சிறைத்தண்டனையாகும்) சிறு தண்டனையோ ஒத்திவைக்கப்பட்ட சிறைத் தண்டனையோ வழங்குவதற்கு அவர் தீர்மானித்து விட்ட பின்னர் அத்தீர்ப்பை வழங்குவதில் நடைமுறைச் சிக்கல் காரணமாக காலதாமதமாகும் நிலை ஏற்படும் போது மேல்நீதிமன்ற நீதிபதி பிணை வழங்கலாம்.

நன்றி - நூலகத்திட்டம்



சரிநிகர்
4,ஜெயரட்ன மாவத்தை
திம்பிரிகஸ்யாய
கொழும்பு-05
தொலைபேசி:584380

பிரதம ஆசிரியர்:சேரன்

## மலையக மக்கள் நம்பியது

## மண் குதிரா?

மலையக மக்கள் முன்னணித் தலைவர் சந்திரசேகரன் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

அவருடன் சேர்த்துக் குற்றம் சாட்டப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ள இதர மலையக மக்கள் முன்னணித் தலைவர்களான திரு.காதர், திரு. தர்மலிங்கம் ஆகியோர் உள்ளே இருக்கும் போது, இவர் மட்டும் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார்.

எந்தச் சந்திரசேகரன் மத்திய மாகாண சபை உறுப்பினராக தெரிவு செய்யப்பட்ட போது, மக்களின் தீர்ப்பை மதித்து அவரை விடுவிக்க வேண்டும் என்று கோரப்பட்ட போதும், அவரைச் சத்தியப்பிரமாணம் செய்ய அனுமதிக்குமாறு கோரப்பட்ட போதும், அவருக்கு வெளியே உரிய பாதுகாப்பு கிடையாது என்று பிணையில் செல்லக்கூட அனுமதி மறுக்கப்பட்டாரோ அதே சந்திரசேகரன் தான் இப்போது விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

ராஜாங்க அமைச்சர் செல்லச்சாமி அவர்களது புண்ணியத்தில் சந்திரசேகரன் அவர்கள் இப்போது சகோதரியின் திருமணத்தில் கலந்து கொள்வதற்கு என்ற பேரில் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் சக்திமிக்கதொரு இளைஞர் சக்தியாக வளர்ந்து வந்தவர் சந்திரசேகரன் அவர்கள்.

தன்னை மிஞ்சி விடுவாரோ என்ற அச்சத்தால் தொண்டமான் அவர்களால் ஓரங்கட்டப்பட்டவர் சந்திரசேகரன் அவர்கள்.

அன்று சந்திரசேகரன் ஓரங்கட்டப்பட்ட போது கட்சியின முக்கிய பொறுப்பில் இருந்தவர்தான் ராஜாங்க அமைச்சர் செல்லச்சாமி.

நீதிமன்றம் விடுவிக்கத் தயார் எனக்கூறிய போதும் பாதுகாப்புக் காரணங்களைச் சுட்டிக்காட்டி அவரை உள்ளே வைத்திருக்க தமது அதிகாரங்களை இதே ராஜாங்க அமைச்சர் செல்லச்சாமி அவர்களும் சேர்ந்திருந்த இ.தொ.க தலைமையினர் தான் பயன்படுத்தியிருந்தார்கள்.

சந்திரசேகரன் விடுவிக்கப்பட வேண்டும் என்ற நியாயமான கோரிக்கையை அதிகார மமதையுடன் கேலி செய்வது போலப் பத்திரிகையாளர்களுடன் பாய்ந்து விழுந்தவர் அமைச்சர் தொண்டமான் அவர்கள்.

அதற்கெல்லாம் இதே செல்லச்சாமி அவர்களும் ஒத்துப்போனவர் தான். இப்போது அவருக்கு இவர்மீது திடீர் கரிசனை வந்து விடுவித்திருக்கின்றார். மலையக மக்கள், மலையக தேசிய வாதம் என்ற சொற்றொடர்களுடன் அறிமுகமான மலையக மக்கள் முன்னணியின் தலைவர் இப்போது அவருக்கு மிகவும் நெருங்கியவராகி விட்டார்!

வீட்டுக்கு அழைத்து விருந்து படைக்கும் அளவுக்கு!

இதெற்கெல்லாம் என்ன காரணம்?

மலையக மக்களின் தலைமைப் பொறுப்பு தம் கையை விட்டு கழன்று விடக்கூடாது என்பதில் தீவிரமாக இருக்கும் இ.தொ.கா தலைவர் தொண்டமானுக்குப் போட்டியாக அவரே இன்னமும் தமது தலைவர் என்று கூறும் -செல்லச்சாமி அவர்கள் உருவாக்க விரும்பும் அணியைப் பலப்படுத்த அவருக்கு சந்திரசேகரன் தேவைப்படுகின்றார்.

செல்லச்சாமி அவர்கள் புத்திசாலி.

எந்தக் காயை எப்படி நகர்த்துவது என்பதில் அவர் தெளிவாக இருக்கின்றார்.

ஆனால் சந்திரசேகரன்?

எந்தக் காரணத்திற்காக மலையக மக்கள் சந்திரசேகரனின் பின் அணிதிரள தயாராக இருந்தார்களோ; எந்தக் காரணத்துக்காக சிறையிலிருந்த போதே அவருக்கு வாக்களித்தார்களோ; எந்தக் காரணங்களுக்காகப் பல போராட்டங்களை நடாத்தினார்களோ அந்தக் காரணங்களுக்கெல்லாம் நேரெதிரான ஒருவரின் அரசியல் சூழ்ச்சிக்குப் பலியாகிப் போக அவர் முடிவு செய்துவிட்டார்!

சிறையிலிருந்து விடுபடுவது சந்தோஷமானதுதான்.

ஆனால் அதற்கு கொடுக்கும் விலை? எந்த அரசியல் அவரை ஒரு நல்ல அரசியல்வாதியாக மதிக்க வைத்ததோ, எந்த மக்களின் உணர்வு அவரை ஒரு தலைவராக்கியதோ அவற்றை விலை கொடுத்தா சந்திரசேகரன் தனது விடுதலையைக் கோரினார்?

கண்களை விற்று சித்திரம் வாங்கிய பேதமை இது.

ஆக, எல்லாப் பாராளுமன்றப் பாதையாளர்களதும் பாதையில் -அதே பிழைப்புவாதப் பாதையில் போக சந்திரசேகரனும் தீர்மானித்து விட்டாரா?

அப்படியானால்,

'கண்ணீர் விட்டே வளர்த்தோம் சர்வேசா இப்பயிரை கருகத்திருவுளமோ' என்று கதறும், அவரை நம்பிய மக்களை இடறிவிடுவதுதான் அவரது முடிவென்றால், அதை ஒரு தடவை பகிரங்கமாக அறிவித்து விடுவது நல்லது.

மண்குதிரையை நம்பிக் கடலில் இறங்குவது ஆகாது என்பதை மக்கள் மீண்டுமொருமுறை தெளிவாகவே புரிந்து கொள்ள அது உதவியாக இருக்கும்.

## தென்மாகாண சபை: தோற்றுப் போனவர்கள் மக்களே!

தென்மாகாண சபைத் தேர்தலில் எதிர்பாராத விதமாக ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி -இடதுசாரிக்கட்சிகளின் கூட்டணி வெற்றி பெற்றுவிட்டது.

'இதை எப்படி எதிர்பாராத வெற்றி என்று நீ கூறலாம்' என்று நீங்கள் கேட்பது கேட்கிறது. நியாயமான கேள்விதான். ஏற்கனவே இந்தக் கூட்டணி வெற்றி பெறும் என்று பல பத்திரிகைகள் ஆருடம் கூறியிருந்தும் நான் இப்படிக் கூறுவது வியப்பூட்டலாம் தான்.

ஆனாலும் வெற்றி எதிர்பாராததுதான்! பல எதிர்பாராத காரணிகளால் பெற்றுக் கொண்ட வெற்றியை எதிர்பாராத வெற்றி என்பதில் என்ன தப்பு இருக்க முடியும்?

யூ.என்.பியினர் தமது வழமையான 'வாக்களிப்பு' மோசடிகளை செய்து வழமை போலவே வெல்வார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது.

மேன்மை தங்கிய ஜனாதிபதியின் சிறுபான்மையின மக்களுக்கெதிரான இனவாதப் போர்க்குரலுக்கு ஆதரவு கிடைக்கும் என எதிர்பார்க்கப்பட்டது. அடிதடி, கடத்தல், மிரட்டல் போன்றவற்றிக்குப் பணிந்து போய் விடுவார்கள் மக்களும் எதிர்க்கட்சி வேட்பாளர்களும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

அனுராவை உடைத்தெடுத்ததில் ஸ்ரீ.ல.சு.க பலவீனமாகிவிடும் என எதிர்பார்க்கப்பட்டது.

காமினியைச் சேர்த்துக் கொண்டதில் ஜ.ஐ.தே.மு உடன் போனவர்கள் குழம்பிப் போவார்கள் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆக, மொத்தத்தில் எல்லா எதிர்பார்ப்புகளிலும் மண்ணை அள்ளித் தூவி விட்டு வெற்றி பெற்றிருக்கிறது பொதுசன முன்னணி.

ஆனால், இந்த வெற்றியை இந்த நிமிடம் வரை கொண்டாடிக் கொண்டிருக்கின்ற பலரும், ஐ.தே.க.வின் மீது மக்கள் நம்பிக்கை இழந்துவிட்டார்கள் என அரசியல் விமர்சனம் செய்து கொண்டிருக்கின்ற பலரும் இந்த வெற்றியின் பின்னால் எது தோற்கடிக்கப்பட்டிருக்க வேண்டுமோ, அது வெற்றி பெற்றுத் தான் இருக்கிறது என்பதைப் பார்க்கத் தவறி விடுகின்றார்கள் என்றே சொல்ல வேண்டும்.

கள்ள வோட்டுக்களால் வாக்குப் பெட்டிகளை நிரப்பிக் கொண்டு ஜனநாயகம் வாழ்வதாக மார்தட்டிக் கொள்கின்றவர்களை விழிப்புடன் இருந்து தடுத்தன் மூலமும், காடைத்தனம், மிரட்டல் போன்றவற்றை பதிலுக்குப் பதில் நாமும் செய்யத்தயார் என்று 'களத்தில்' இறங்கியதன் மூலமும், எது அங்குள்ள மக்களின் பிரச்சினையோ அதைத்தவிர மற்றெல்லாவற்றையும் பேசுவதே உண்மையான அரசியல் என்ற ஞான தீட்சையை இவர்களும் பெற்றுக் கொண்டதன் மூலமாகவும் இந்த ஸ்ரீலங்கா ஜனநாயக பாரம்பரியத்திற்கு நாம் ஒன்றும் அந்நியமானவர்கள் அல்லர் அதை அறியாதவர்கள் அல்லர் என்று பொதுசன முன்னணியும் நிரூபித்திருக்கிறது.

சிறுபான்மையினருக்கு எதிரான இனவாத வன்முறையை கக்கியவர்களுக்குப் பதிலாக சிறுபான்மையின மக்களின் பிரச்சினைக்கு தம்மிடமுள்ள தீர்வு என்ன என்பதை அது ஒரு போதும் தெரிவித்ததில்லை.

நாட்டைத் திறந்த பொருளாதாரம் என்ற பேரில் அனைத்துலகக் கட்டாக் காலிகளதும் மேய்ச்சல் நிலமாக்கி விட்டுள்ளதையிட்டு அது தெரிவித்த தெல்லாம் 'அது சரிதான், ஆனாலும் ஒரு சில கட்டுப்பாடுகள் தேவை' என்பதே!

ஆக, தோற்றது யூ.என்.பி, வென்றது பொதுசன முன்னணி என்ற வெளிப்படையான தோற்றப்பாடுகட்கு அப்பால், நடந்தது பூச்சியமே.

இது ஒன்றும் வரலாற்றில் புதிய விடயம் அல்ல!

எப்போதெல்லாம் ஆளும்கட்சியும் அதன் தலைவர்களும் தமது தொடர்ச்சியான அதிகார துஷ்பிரயோகங்களாலும் அடக்குமுறைகளாலும் செல்வாக்கிழந்து சரி[illegible] தொடங்குகிறார்களோ அப்போதெல்லாம் அணையுடைக்கத் தயாராக உள்ள வெள்ளத்தைச் சீராக ஓடவைக்க தமக்கேற்றபடி வசதியான விதத்தில் ஒரு மடை திறந்து விடுவது போல ஒரு புதிய தலைமையை உருவாக்குவது ஆளும் வர்க்கங்களின் இயல்பு.

சில காலங்களுக்கு முன்னர் பிலிப்பைன்சில் நடந்த உதாரணம் மிகவும் தெளிவான ஒரு உதாரணமாகும்.

மார்க்கோசுக்குப் பதில் ஒரு அக்கியுனோவை கொண்டுவந்து நிலைமையை சீர் செய்தது அமெரிக்க ஏகாதிபத்தியம்.

இன்று இங்கு நடந்து கொண்டிருப்பதுவும் அதுதான்!

சந்திரிகா தலைமையில் உருவாகி வரும் புதிய தலைமை ஒன்றும் யூ.என்.பிக்கு மாற்றான ஒரு அரசை அமைக்கப் போவதில்லை. மாறாக அதே அரசினை நிர்வகிக்கப் புதியவர்களாக வரப்போகிறார்கள்!


நன்றி: ராவய

மக்கள் மத்தியில் எழுந்துவரும் ஜனநாயக வேட்கை, விடுதலை உணர்வு, இன்றைய அரசினால் ஏற்படுகின்ற நெருக்குவாரத்தின் காரணமான உளக் குமுறல் என்பவற்றுக்கு சந்திரிகா ஒரு வடிகாலாக காட்டப்படுகின்றார். ஆனால் சந்திரிகா என்ற வடிகாலால் வடிக்கப்படப்போவது, மக்களது கொந்தளிப்பு மற்றும் ஜனநாயக விடுதலை பற்றிய உணர்வுமேயன்றி இங்குள்ள நிலைமைகள் அல்ல.

இங்குள்ள நிலைமைகளை மாற்றியமைப்பது தொடர்பாக இன்றைய ஏக்கத்தின் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கும் சந்திரிகா அணியினரிடம் இருப்பதெல்லாம் வெறும் வாய்ச்சவடால்களே அன்றி உருப்படியான திட்டங்கள் அல்ல!

அப்படி அல்லவென்றால், திட்டங்களை அவர்கள் மூடி மறைத்து வைத்திருந்து விட்டு பதவிக்கு வந்ததும் எடுத்துவிடும் எண்ணத்துடன் இருக்கிறார்கள் எனக் கொள்ள வேண்டும். அப்படியென்றால் இத்தகைய -ஜனநாயக நீதியற்ற சதிப்பாணியிலான திட்டங்கள் அவை எவ்வளவுதான் நல்லவையாக இருப்பினும் கூட விரைவிலேயே அவர்களை மக்களிடமிருந்து தூக்கியெறிந்துவிடும் என்பதில் ஐயமில்லை.

ஒரு ஐ.தே.கவிற்கு இருபது வருடகாலங்கள் எடுத்ததென்றால், முற்றாக ஒதுக்கப்பட்டுப்போக சந்திரிகா அணிக்கு இரண்டு வருடங்களே போதுமானதாகும்!

ஐ.தே.க 1977இல் அரசியல், பொருளாதார ரீதியில் திட்டவட்டமான ஒரு மாற்றுத் திட்டத்துடன் தான் தேர்தலில் நின்றது. அது முன்வைத்த திட்டத்தின் விளைவுகளை அன்று நம்பிய மக்கள் இன்றும் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆயினும் அதன் திட்டம் வெளிப்படையாக இருந்ததால், அதை நிறைவேற்றவெனப் பதவிக்கு வந்த கட்சி முற்றாக அந்நியமாகிப் போக இத்தனை காலம் எடுத்தது! இன்னும் சில நாள் எடுக்கவும் கூடும். ஆனால் எந்த மாற்றுத் திட்டமுமற்றவர்களால் எத்தனை நாட்களுக்குத்தான் நின்று பிடிக்க முடியும்?

பிரச்சினை ஐ.தே.க.வின் நிர்வாக, அதிகாரத்துவ முறையிலா அல்லது அதன் அரசியல் பொருளாதார கொள்கைகளிலா இருக்கிறது என்பதைத் தெளிவாக முன்வைத்து அரசியல் நடாத்தும் திராணியுடன் முன்வராத எந்தக் கட்சியும், புதிதாக எதையும் செய்யப் போவதில்லை. அதற்கு வாக்களிப்பதால் மக்கள் எதையும் புதிதாகப் பெற்றுவிடப் போவதும் இல்லை.

ஒரு ஜே.ஆருக்கு -ஒரு பிரேமதாசாவுக்கு அல்லது -டிங்கிரி பண்டா விஜேதுங்கவுக்கு அல்லது ஒரு வேளை இன்று ஐ.தே.கவுக்குள் நடப்பதாக கூறப்படும் சதியின் பிரகாரம் ரணிலுக்கு சந்திரிகா ஒரு மாற்றாக சில வேளை இருந்துவிட்டுப் போகலாம். ஆனால், மக்களுக்கு உண்மையில் தேவையானது அது அல்ல!

எது மக்களுக்கு தேவையோ அதை மூடிமறைக்கவே இதுதான் தேவை என்பது போல சில பத்திரிகைகளும் அரசியல் வாதிகளும் கூறி வருகின்றனர்.

இப்போது இதை நம்பினாலும், இது அல்ல உண்மையில் தேவை என்பதை மக்கள் விரைவில் உணரவே செய்வர். உண்மையில் அவர்களுக்கு தேவை ஆள்மாற்றம் அல்ல, அமைப்பிலேயே மாற்றம் தேவை என்பதைப் புரிந்து கொள்வர்.

ஓரிரு சின்னக் கேள்விகளுடன் இதை முடிக்கலாம் என நினைக்கிறேன்.

ஒருகால் சந்திரிகாவே ஜனாதிபதியாக வந்துவிட்டால், வடக்கு கிழக்கிலிருந்து இராணுவத்தை அவர் திருப்பி அழைப்பார் என்று யாராவது நம்புகிறார்களா?

- பேச்சுவார்த்தை மூலம் தேசிய இனப்பிரச்சினையை தீர்க்கலாம் என்ற அதே சப்பைக்கட்டை கட்டியபடி யுத்தத்தை தொடர்வதை விட அவர் வேறு ஏதாவது செய்ய முடியுமா?
- 'குறைந்த பட்சம் சுயநிர்ணய உரிமையை அவரால் அங்கீகரிக்க முடியுமா?
- வடக்கு கிழக்கு இணைப்பு.... வேண்டாம். இவையெல்லாம் சாத்தியமில்லாமல் போகலாம் என்று சொல்லுவோம்.
- அந்நியநாட்டு முதலீட்டாளர்களின் தொழிற் 'தொழுவங்களில்' சிக்கித் தவிக்கும் தொழிலாளர்களுக்கு தொழிற்சங்க உரிமையை யாவது அவர் வழங்குவாரா?
- அதுவும் வேண்டாம். 'உலக வங்கியே, நீ யார் எமக்கு நிபந்தனை போட?' என்று உரத்துக் கேட்பாரா?

கேள்விகள் இவைதான்; மக்களுக்குத் தேவையான தலைமையும் இதைச் செய்யக் கூடிய தலைமைதான்.

இப்பொழுது சொல்லுங்கள்; இந்த வெற்றியில் எதிர்பார்த்தோ பாராமலோ வெற்றி பெற்றவர் யார்?

நிச்சயமாக ஒன்றுமட்டும் உண்மை!

தோற்றுப் போனவர்கள் மக்களே!

நன்றி - நூலகத்திட்டம்



# இந்தியாவும் தமிழ்த் தேசியப் பிரச்சினையும்

டி.சிவராம்

இந்தியா தமிழ் மக்களுடைய நலன் தொடர்பாக எத்தகைய நிலைப்பாட்டைக் கொண்டிருக்கிறது என்பதில் பல்வேறு போராளிக் குழுக்கள், அரசியல் கட்சிகள் என்பவற்றிற்கிடையே வேறுபட்ட அபிப்பிராயங்கள் எப்போதும் இருந்து வந்திருக்கின்றன.

இங்கே இந்தியாவுக்கும் தமிழ்த் தேசியப் பிரச்சினைக்கும் இடையிலான தொடர்பு குறித்து ஆராய்கிறார் டி. சிவராம் அவர்கள்.

இந்தியாவிற்கும் அதனைச் சுற்றியுள்ள நாடுகளுக்கும் இடையிலான உறவு தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை தொடர்பாக இந்திய ஆளும் வர்க்கங்கள் கொண்டுள்ள நிலைப்பாடு, குறிப்பாகத் தமிழ்த் தேசியம் தொடர்பாக இந்திய ஆளும் வர்க்கத்தின் நிலைப்பாடு என்பனவற்றை இக் கட்டுரையில் விளக்கிச் செல்கிறார் அவர்.

டி.சிவராம். மட்டக்களப்பைச் சேர்ந்தவர். ஐலன்ட் பத்திரிகையில் 'தராகி' என்ற பெயரில் தமிழ் மக்களுடைய பிரச்சினைகள் தொடர்பாக எழுதி வருபவர்.

இவருடைய ஐலன்ட் கட்டுரைகள் பிரான்ஸிலுள்ள ஆசியா நிறுவனத்தால் புத்தகமாக தொகுத்து வெளியிடப்பட்டுள்ளது. பின்னர் இவை யாழ்ப்பாணத்திலும் தமிழில் மொழியாக்கம் செய்யப்பட்டு தொகுக்கப் பட்டுள்ளன.

ஆங்கிலத்தின் சிறந்த பத்தி எழுத்தாளர் என்றவகையில் இவரால் எழுதப்பட்ட பத்திகள் கொழும்பு பல்கலைக்கழகத்தில் பத்திரிகையியல் மாணவர்களுக்கான வழிகாட்டியாகச் சேர்க்கப் பட்டுள்ளது.

ஆ-ர்

## அறிமுகம்

இந்திய மத்திய அரசினுடைய நேரடிப் பங்களிப்பும் உதவியும் இன்றி இலங்கைத் தமிழர் தம் உரிமைகளை நிலைநாட்ட முடியாது "என்ற கருத்து இன்றும் வலுப்பெற்ற ஒன்றாகப் பலரிடையே காணப்படுகிறது. 1983-1987 காலகட்டத்தில் இந்தியாவினுடைய உதவியுடன் மட்டுமே தமிழருக்கு தனிநாடு கிடைக்க முடியும் என்ற நம்பிக்கை பல தமிழரிடையேயும், ஒரு சில இயக்கங்கள் மத்தியிலும் காணப்பட்டது.

இந்திய மத்திய அரசானது இலங்கை அரசுடன் சேர்ந்து ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துமுகமாக தமிழர் விடுதலை அமைப்புக்களின் ஆயுதங்களைக் கீழே போடுமாறு பணித்த பின்னரும், மாகாணசபை அமைப்பினுள் ஐக்கியப்பட்ட இலங்கைக்குள் வாழுங்கள் என அவர்களுக்கு ஆணித்தரமாக எடுத்துரைத்த பின்னரும், இந்தியா நமக்குத் தனிநாடு அமைக்க உறுதுணை செய்யும் என மக்கள் மத்தியிலும் இயக்க உறுப்பினர் மத்தியிலும் பரப்பப்பட்டிருந்த நம்பிக்கை மெதுவாகக் கைவிடப்பட்டு மறக்கடிக்கப்பட்டது. அதனிடத்தில், இந்திய மத்திய அரசு நமக்கு என்றும் பக்க பலமாக நின்று இலங்கை அரசுடன் பேரம் பேசி உரிமைகளை வென்றெடுக்க உதவுமெனவும், தமிழருக்கு வட-கிழக்கில் இன்னல் நேரும் போது சிங்களத் தலைவர்களைத் தவறாது தட்டிக் கேட்டு அவர்களின் இனவாத நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தும் எனவும் ஒரு நம்பிக்கை உண்டாக்கப்பட்டது.

இன்று ஒரு இன அழிப்பு யுத்தம் என்று சொல்லக்கூடிய முறையில் அமைந்த ஒரு போரை இலங்கை அரசு வட-கிழக்குத் தமிழர் மீது கட்டவிழ்த்து விட்டுள்ளது. வடமாகாணத்தின் மீது கொடூரமான பொருளாதாரத் தடையும், கண்மூடித்தனமான குண்டுவீச்சுகளும் இடம்பெற்ற வண்ணம் உள்ளன. அரசு வெளிப்படையாகவே இனவாத நஞ்சைக் கக்குகின்றது. கிழக்கில் சிங்களக் குடியேற்றங்கள் நடந்த வண்ணம் உள்ளன. இந்திய மத்திய அரசு இன்று இவை எதையும் கண்டு கொள்வதேயில்லை.

அண்மையில் வட-கிழக்கு பிரிப்பை நடைமுறைப்படுத்த அரசு எடுத்துவரும் முயற்சியை தடுக்கும் கடமை இந்தியாவுக்கு உண்டு என்ற அடிப்படையில் சில தமிழ் அரசியல் த்லைவர்கள் இந்தியத் தூதுவரைச் சந்தித்துப் பேசினர். ''வட-கிழக்கு மாகாணத்தினைப் பிரிக்கும் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட முடியும் என இந்திய-இலங்கை ஒப்பந்தத்தில் ஒரு பிரிவு உள்ளது. ஆனால் அது நடைமுறைப்படுத்தப்படாமல் இந்தியா பார்த்துக் கொள்ளும் என எமக்கு ரஜீவ் காந்தி வாக்களித்ததாலேயே நாம் ஒப்பந்தத்தை ஆதரித்தோம்'' என தமிழர் விடுதலைக் கூட்டணி கூறியுள்ளமை தெரிந்ததே. ஆயினும், சம்பந்தப்பட்ட வாக்குறுதி தொடர்பாக இந்திய மத்திய அரசோ அதன் பிரதிநிதியாகக் கொழும்பிலுள்ள தூதுவரோ அக்கறை கொள்ள விரும்பவில்லை என்பதை பேசச் சென்ற தமிழ்த் தலைவர்கள் மிகத் தெளிவாக உணர்ந்து கொண்டனர். இதிலிருந்து அவர்களுக்கும் இன்னும் பலருக்கும் இன்று விளங்கிக் கொண்டு வரும் விடயம் என்னவென்றால், இந்தியா தமிழர் பிரச்சினை பற்றிப் பேசி கொழும்புடன் நெருக்கமாகி வரும் தன் உறவைக் கெடுத்துக் கொள்ள விரும்பவில்லை என்பதேயாகும்.

இந்தியாவின் மத்தியஸ்தம் இல்லாமல் தமிழர் பிரச்சினையை தீர்க்க முடியாது எனவும், இந்தியாவின் ஆதரவு எமக்கு உண்டு, எனவே தமிழர் தம்மைப் பின்பற்ற வேண்டும் எனவும் நேற்றுவரை கூறிவந்தவர்கள் கூட இன்று இந்தியா இலங்கை அரசுடன் மிகச் சுமூகமான நெருக்கமான உறவை வளர்த்துக் கொள்வதில் குறியாக இருப்பதை கவலை தோய்ந்த சஞ்சலத்துடன் நோக்குகின்றனர்.

இதில் நாம் கவனிக்க வேண்டியது என்னவெனில், இந்தியா கவனிக்க வேண்டும் என சில அமைப்புகள் கருதும் விடயங்கள் புலிகளுடன் எந்த சம்பந்தமுமில்லாதவையாகும். அவை புலிகளுக்கு அப்பால் ஒட்டுமொத்தத் தமிழர் சம்பந்தப்பட்டவையாகும். புலிகள் ரஜீவ் காந்தியைக் கொன்றனர். அதனால்தான் இன்று இந்தியா இலங்கைத் தமிழர் பிரச்சினையில் தலையிடத்தயக்கங்காட்டுகிறது எனக் கூறப்படுவது ஒரு நொண்டிச் சாட்டாகும். புலிகள் சமன் தமிழ் மக்கள் என இந்தியா கருதினால் மட்டுமே மேற்கண்ட வாதம் ஏற்புடையதாகும். ஆனால் புலிகள் சமன் தமிழ் மக்கள் அல்ல என்பதைத்தான் இலங்கை அரசும், இந்தியா சார்புத் தமிழ் அமைப்புகளும், இந்தியாவும் வலியுறுத்துகின்றன. எனவேதான் புலிகள் செய்த வேலையினால்தான் இந்தியா இப்போது தமிழர் பிரச்சினையைக் கவனிப்பதில்லை என்பது நொண்டிச்சாட்டெனக் கூறினோம்.

வட-கிழக்கு விரைவில் பிரிபடும் என்ற நிலையிலும், தமிழர் வாழுமிடங்கள் அதன் காரணமாகச் சின்னாபின்னமாகும் என்ற நிலையிலும், புலிகள் அல்லாத தமிழ் அமைப்புகள் தத்தளித்துக் கொண்டிருக்கும் வேளையில் இலங்கையுடன் வர்த்தக உறவுகளை விரிவாக்கவும் பலப்படுத்தவும் இந்தியா முயன்று வருகிறது.

1983இலிருந்து 1993 வரையிலான தமிழர் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தின் வரலாற்றை எடுத்துப் பார்ப்போமேயானால் அதில் ஈடுபட்ட பலரும் தம் சொந்த மண்மீதும் மக்கள்மீதும்



கொண்டிருந்த நம்பிக்கையை விட எங்கோ தொலைவில் டெல்லியில இருந்த இந்திய மத்திய அரசை நம்பித் தம் வாழ்நாளைக் கழித்துள்ளனர் என்பது புலனாகும். இன்றுவரை இந்நிலை தொடர்வதை மேற்கூறிய விடயங்கள் புலப்படுத்தும். எனினும் இந்தச் சூழலிலாவது -அதாவது புலிகள் ரஜீவைக் கொலை செய்ததற்கு அப்பால் தமிழர் பிரச்சினையிலிருந்து ஒதுங்கி இனவாத அரசுடன் நெருங்குவதற்கான அதிமுக்கியமான வேறு காரணங்கள் இந்தியாவிற்கு உண்டு என்பது புலப்படத் தொடங்கியுள்ள இந்தச் சூழலிலாவது- ஒரு வரலாற்றுரீதியான, அரசியல்ரீதியான புரிதலுக்கான விவாதத்திற்கு ஒரு சிறு முன்னுரையாக இக் கட்டுரை எழுதப்படுகிறது.

பெரும்பாலான தமிழ் விடுதலை இயக்கங்கள் இந்தியாவை நாடி வாழ்ந்த காலங்களில் -ஏன் இன்று கூட- இந்திய உபகண்டத்தில் வாழும் பல்வேறு தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை தொடர்பான இந்தியாவின் நிலைப்பாடு பற்றியோ, தென்னகம் வாழ் தமிழ்த் தேசிய இனத்தின் பிரச்சினை தொடர்பாக இந்திய மத்திய அரசு கொண்டிருந்த கருத்துகள் பற்றியோ இவை எவ்வாறு இலங்கைத் தமிழர் பிரச்சினையில் இந்தியாவின் அணுகுமுறையைத் தீர்மானித்தன என்பது பற்றியோ எந்த ஒரு விளக்கத்தையும் மக்கள் மத்தியில் முன்வைக்கவில்லை என்பதே உண்மை.

17லட்சம் தமிழர்களைத் தன்னகத்தே கொண்டிருக்கும் இலங்கை அரசு அவர்களது பிரச்சினையை எவ்வாறு அணுகிற்று என பக்கம் பக்கமாக எழுதித் தள்ளியவர்களும், நாட்கணக்கில் வகுப்பெடுத்தவர்களும் பலகோடித் தமிழர்களைத் தன்னகத்தே கொண்டிருந்த இந்திய அரசு அவர்களது பிரச்சினையை எவ்வாறு அணுகிற்று எனச் சற்றும் சிந்திக்கவில்லை எனக்கூறின் மிகையாகா.

N.L.F.T தனது ஆரம்ப காலத்தில் இது பற்றி சில கருத்துகளை முன்வைத்தது. P.L.O.T.E 'வங்கம் தந்த பாடம்' என்ற நூலை உரிமைகூறாமல் வெளியிட்டது. T.E.L.Oவை அழித்த போது இந்தியச் சதியை முறியடிக்க எடுத்த நடவடிக்கை எனக் கூறினர் புலிகள். அவ்வளவே. இன்று இந்தியாவுடன் முரண்பட்டு நிற்கும் புலிகள்கூட தமிழர் சுயநிர்ணய உரிமைப் போராட்டம் ஏன் இந்திய நலன்களுக்கு உடன்படா வண்ணம் இருக்க வேண்டியதாகிறது எனத் தெளிவுபடுத்தியதாகத் தெரியவில்லை. இந்தியா-தமிழர் உறவு சம்பந்தமான வரலாற்றுப் பின்னணியற்ற குழப்பகரமான நிலைப்பாடுகளால் ஏமாந்ததும், பாதிக்கப்பட்டதும், கூட்டணியாலும் இயக்கங்களாலும் வழிநடத்தப்பட்ட தமிழ் மக்களே. இக்குழப்பத்தின் சமீபகால எதிர்விளைவுதான் கிழக்கினைப் பிரிக்கும் சர்வஜன வாக்கெடுப்புத் தொடர்பாக தமிழரும், தமிழ் இயக்கங்களும், கட்சிகளும் எதிர் நோக்கும் திண்டாட்டம். இது அரசனை நம்பிப் புருசனைக் கைவிட்ட கதை மட்டுமல்ல; வரலாற்றைக் காண மறுத்ததால் ஏற்பட்ட வினை பற்றிய கதையுமாகும்

இக் கட்டுரைத் தொடரானது மூன்று விடயங்களின் அடிப்படையில் இந்தியா-தமிழர் தேசிய இனச் சிக்கல் பற்றி ஆராய்கிறது. முதலாவதாக, இந்தியாவிற்கும் அதைச் சுற்றியுள்ள நாடுகளுக்குமிடையிலான உறவு. இதில் எவ்வாறு இனப்பிரச்சினை மற்றும் சமூக முரண்பாடுகளை தனக்குச் சாதகமாக எப்போதும் ஒரு வரையறுக்கப்பட்ட முறையில் தன்நலன்களை அடையும் நோக்கில் இந்திய மத்திய அரசு பயன்படுத்திவந்துள்ளது என்பது பற்றி ஆராயப்பட்டுள்ளது.

இரண்டாவதாக, 'பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகள் இந்திய உபகண்டத்தில் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமைக்கு எதிராகவும், உழைக்கும் வர்க்கங்களின் உரிமைக்கெதிராகவும் உருவாக்கிய இராணுவ, அரசியல் கோட்பாடுகளை உள்வாங்கி எங்ஙனம் புதிய இந்திய ஆளும் வர்க்கம் செயல்பட்டது என்பது நோக்கப்பட்டுள்ளது. இதில் எவ்வாறு இந்திய ஆளும் வர்க்கம் உருவானது? அதன் சிந்தனைகள் என்ன? அவை எங்ஙனம் இந்தியா இன்று எதிர்நோக்கும் சிக்கல்களுக்கு வழிவகுத்தன? என்பது பற்றியும் காணலாம்.

மூன்றாவதாக, இந்திய உபகண்டத்தின் தென்பகுதியில் உள்ள தமிழ்த் தேசிய இனச் சிக்கல் பற்றி பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் கொண்டிருந்த நிலைப்பாடு, அதன் காரணமாக தமிழரின் சுயநிர்ணய உரிமைப் போராட்டம் தனிநாடு என்னும் கரு தளிரிலேயே முடங்க வேண்டி வந்தமை, அப்போராட்டம் காரணமாகவும், தமிழகத்தின் கேந்திர முக்கியத்துவம் காரணமாகவும் இந்திய ஆளும் வர்க்கம், சுதந்திரத்தின் பின்னர் தமிழ்த் தேசியத்தைப் பற்றி வகுத்துக் கொண்டுள்ள அணுகுமுறைகள் போன்றன ஆராயப்பட்டுள்ளன.

இவற்றினடிப்படையில் பொதுவாகத் தமிழ்த் தேசிய இனப்பிரச்சினையும் குறிப்பாக இலங்கைத் தமிழ்த் தேசிய சுயநிர்ணய உரிமைப் போராட்டமும், அவை அவாவி நிற்கும் இலட்சியங்களை அடைவதற்கு பிரதான இறுதி முட்டுக்கட்டை இந்திய மத்திய அரசே என்ற முடிவு முன்வைக்கப்பட்டுள்ளது. இக் கருத்து தவறு, தமிழர் சுயநிர்ணய உரிமைப் போரினை முன்னெடுக்கவும் தமிழர் தம் உரிமைகளைப் பெற்றிடவும் இந்திய அரசே உறுதுணை செய்ய வேண்டும், அதை அது இன்றில்லாவிடினும் என்றோ ஒருநாள் செய்யும் எனக் கூறி மேற்கண்ட முடிவை மறுதலிப்போர் உளராயின் அவர்கள் தம் கருத்துக்குத் தகுந்த வரலாற்று ஆதாரங்களையும், மற்றும் தற்கால அரசியல், இராணுவ, பொருளாதார, கேந்திர (strategic) யதார்த்தங்களையும் முன்வைப்பார்களேயானால் தமிழ்கூறு நல்லுலகிற்குப் பயனுண்டு.

இந்தியா பெரியநாடாக இருக்கலாம், ஆனால் நம் மக்களின் உரிமையை வென்றெடுக்கும் பாதையினை அதன் காரணமாக நாம் திசை திருப்பிடவும் முடியாது. முடிவிடவும் முடியாது என்பதை மட்டும் அவர்கள் மனதில் கொண்டால் போதும். இதில் இன்னொன்றையும் இங்கு சுட்டிக் காட்ட வேண்டியுள்ளது. அதாவது தமிழர் பிரச்சினை தொடர்பான இந்தியாவின் நிலைப்பாடுகள் பற்றித் தமக்குப் பாதகமான, சங்கடமான கருத்துகள் முன்வைக்கப்படுவதைக் கண்டதும், சில அசைக்க முடியாத இந்தியப் பற்றாளர் (கல்லானாலும் கணவன், புல்லானாலும் புருசன் என்ற மரபுப்படி வாழ்கின்றவர்கள்) உடனே பொங்கியெழுந்து சிந்திக்காமல் இந்திய எதிர்ப்பென்பது புலி ஆதரவு எனக் கூவலாம். அங்ஙனம் அவர் கூவினால் பிரபாகரன் பிறப்பதற்குப் பத்து வருடங்களுக்கு முன்னர் தமிழ்த் தேசிய அரசியலின் தந்தை எனக் கொள்ளப்படும் பெரியார் ஈ.வே.ராமசாமி அவர்கள் கூறியதை அவர்களுக்குச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

**''இந்தியர் என்பதை மறுக்கிறபடியாலும், இன உணர்ச்சியும் எழுச்சியும் பெற வேண்டுவதாலும் திராவிடர் என்ற பெயரைக் கொண்டோம்''**
(குடியரசு பத்திரிகையில் 9.12.1944)

**''இந்தியர் என்பது தப்பு மட்டுமல்ல வெறும் கற்பனையும்கூட''**
(குடியரசு பத்திரிகையில் 17.6.1944)

(வரும்)

நன்றி - நூலகத்திட்டம்



# மட்டக்களப்பில் அரசசார்பற்ற நிறுவனங்கள் தமிழ் மக்களை விற்று உயிர் வாழ்கின்றனவா?

1990ம் ஆண்டு மட்டக்களப்பு மாவட்டத்தில் புலிகளுக்கும், அரசுக்கும் இடையில் ஆரம்பிக்கப்பட்டு தற்போது தொடர்ந்து கொண்டிருக்கும் யுத்தத்தின், ஆரம்பக்கட்டத்தில், உண்மையில் மட்டக்களப்பு மாவட்டத்தின் மக்களைப் பாதுகாத்த பெருமை இங்குள்ள அரச சார்பற்ற நிறுவனங்களையே சாரும்.

அக்காலகட்டத்தில் இத் தாபனங்கள் அரசு செய்த அனைத்து அட்டூழியங்களையும் வெளிப்படையாகவே வெளியிட்டன. அதற்காக தங்களது பெறுமதியான உயிரைக்கூட இத் தாபனங்களின் தலைவர்கள் துறந்திருக்கின்றார்கள். இந்த வகையில் I.V.S என்னும் நிறுவனத்தின் தலைவர் மரியநாயகம் அவர்கள் இராணுவத்தினர் மக்களுக்குச் செய்த கொடுமைகளைச் சுட்டிக் காட்டியதை அடுத்து, அது தொடர்பாக சமாதான முறையில் பேசுவதற்காக இராணுவ முகாமிற்கு அவரை வரச்சொல்லி அங்கு வைத்து அவரைச் சுட்டுக் கொன்றனர். இது நடைபெற்றது 1990ம் ஆண்டில் வாகரை இராணுவமுகாமில்.

இவ்வாறான தம்முயிரையும் அர்ப்பணித்த துணிச்சலான நடவடிக்கைகள் மூலம் அரச சார்பற்ற தாபனங்கள் என்றாலே எல்லோரும் மிகுந்த மரியாதையுடன் பார்த்த அன்றைய நிலைமாறி இன்று மட்டக்களப்பில் உள்ள பெரும்பாலான அரச சார்பற்ற தாபனங்கள் இராணுவ அதிகாரிகளைத் திருப் திப்படுத்துவதற்காகவும், தங்களது சுய நலன்களை அடிப்படையாக வைத்துமே செயற்பட்டுக் கொண்டிருப்பதை நன்கு அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. இதற்கும் ஒரு படிமேல் சென்று மட்டக்களப்பு மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் பாரம்பரிய விவசாய முறைகளை இல்லாதொழிக்கும் நடவடிக்கையிலும் கூட இவை ஈடுபட்டிருக்கின்றன.

இந்த வகையில் CARE என்னும் சர்வதேச ஸ்தாபனம் விவசாய முயற்சிகளுக்குக் கடன் கொடுப்பதாகக் கூறிக் கொண்டு இங்குள்ள விவசாயிகளை மட்டக்களப்பின் சூழ்நிலைக்கு ஒவ்வாத பயிர்களையெல்லாம் பயிரிடும்படி கூறி அதற்கான கடன் உதவிகளையும் வழங்குகின்றது. இந்நடவடிக்கை இந்த ஸ்தாபனத்தினால் இங்கு மேற்கொள்ளப்படும் திட்டமிட்ட சதி நடவடிக்கை எனப் பல விவசாயத்துறை நிபுனர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். ஆனல் CARE ஸ்தாபனம் இங்குள்ள இராணுவ இணைப்பதிகாரியுடன் மிகவும் நெருங்கிய உறவைக் கொண்டுள்ள காரணத்தினால் இவர்களது செயற்பாடுகளை விமர்சிக்க ஏனையோர் தயங்குகின்றனர். இதேபோன்று மட்டக்களப்பில் செயற்படும் வேறு சில சர்வதேச தொண்டர் ஸ்தாபனங்களும் இங்குள்ள இராணுவ இணைப்பதிகாரியுடன் சேர்ந்து கொண்டு இங்கு செயற்படும் சிறிய உள்ளூர் தொண்டர் ஸ்தாபனங்களை அடக்கும் செயற்பாடுகளிலும் ஈடுபட்டிருப்பதையும் காணக்கூடியதாக இருக்கின்றது.

மட்டக்களப்பில் செயற்படும் உள்ளூர்த் தலைமையைக் கொண்ட தொண்டர் ஸ்தாபனங்கள் முற்றுமுழுவதுமான சம்பளமற்ற தொண்டர் சேவையை மேற்கொள்கின்றன. அத்தோடு தங்களிடம் உள்ள பணத்தைக் கொண்டு தங்களால் இயன்ற சேவையைச் செய்துவருகின்றன. ஆனால் சர்வதேசச் செயற்பாட்டைக் கொண்ட வேறு சில அரசசார்பற்ற ஸ்தாபனங்கள் தாங்கள் செய்யும் வேலைக்கு கைநிறையச் சம்பளமும் பெற்றுக் கொண்டு, புதிய புதிய வாகனங்களில் வலம் வந்து கொண்டும், பெருந் தொகைப் பணத்தைச் செலவிடுவதை அடிப்படையாக வைத்துக் கொண்டும் தாங்கள் தான் உண்மையான மக்களின் தொண்டர்கள் எனக்கூறிக் கொண்டு, சிறிய தொண்டர் ஸ்தாபனங்களை அடக்கும் நடவடிக்கைகளிலும், அரசின் உதவியோடு சிறிய தொண்டர் ஸ்தாபனங்களின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தும் செயற்பாட்டிலும் ஈடுபட்டிருக்கின்றன. இவர்களின். இவ்வாறான செயற்பாட்டினால் சிறிய தொண்டர் ஸ்தாபனங்கள் அனைத்தும் மிகவும் மனம் ஒடிந்து, போய் உள்ளன.

மட்டக்களப்பில் செயற்படும் சிறிய தொண்டர் ஸ்தாபனங்கள் அனைத்தும் E.R.O என அழைக்கப்படும் கிழக்கிலங்கைப் புனர்வாழ்வுக் கழகத்தின் அங்கத்தவர்களாக உள்ளன. E.R.O விடம் இருந்துதான் தமது செயற்பாட்டிற்கான பணத்தையும் பெறுகின்றன. இந்நிலையில் சர்வதேச ஸ்தாபனங்கள் தங்களை அடக்குவதை E.R.O பார்த்துக் கொண்டுதான் இருக்கின்றது என்றும் குற்றம் சாட்டுகின்றார்கள்.

இவ்வாறாக இங்கு செயற்படும் அரச சார்பற்ற ஸ்தாபனங்களுக்கிடையே ஏற்பட்டுள்ள சம்பவங்களினால் இவர்களுடைய செயற்பாடுகள் சரியாக மக்களைச் சென்றடைவது தடுக்கப்பட்டுள்ளது.

இதே வேளை கொழும்பில் உள்ள செல்வாக்கு மிக்க தமிழர்களும், சிங்களவர்களும் தங்களுக்கிடையே அமைப்புகளை ஏற்படுத்தி வடக்குக் கிழக்கு நிலையைக் காட்டி வெளிநாடுகளில் இருந்து பெருமளவு பணத்தினைப் பெற்று சொகுசான வாழ்க்கை நடாத்துகின்றனர். இவர்களால் வடக்குக் கிழக்குத் தமிழ் மக்களைக் காட்டியும், இங்குள்ள சூழலைக் காட்டியும் பெறப்படும் பணத்தில் சிறிது கூட சம்பந்தப்பட்டவர்களினால் வடக்குக் கிழக்கில் பாவிக்கப்படுவதில்லை. இதை மட்டக்களப்பிற்கு வருகை தந்த அவுஸ்ரேலிய உயர் ஸ்தானியராலயத்தின் அதிகாரி ஒருவர் வெளிப்படையாகக் கூறி மிகவும் மனவருத்தப்பட்டார்.

இந்த அரசுதான் தமிழ் மக்களை அடக்குகின்றது எனப்பார்த்தால், அரச சார்பற்ற ஸ்தாபனங்கள் கூட தமிழ் மக்களை விற்றே தாங்கள் உயிர் வாழ்கின்றன. இந்நிலையில் தமிழ் மக்கள் மீட்சி பெறுவது எப்படி?

அரச சார்பற்ற ஸ்தாபனங்கள் எப்போது அரசின் ஏஜென்டுகளாக செயற்படுவதில்லை என்று முடிவெடுக்கின்றனவோ அன்றுதான் இவற்றால் மக்களுக்கும் பலன் உண்டு. இல்லையேல் இவர்களும் வீடு கொளுத்துகிற ராசாவுக்கு கொள்ளி கொடுக்கிற மந்திரிகள் போலத்தான் இருக்கப் போகிறார்களா?

**சத்தியேந்திரா**

# வவுனியா: தோல்வியை நினைத்து கொதிக்கிறார் அமைச்சர்!



நடந்து முடிந்த வவுனியா நகரசபைக்கான தேர்தலில் ஆளும் கட்சியான ஐ.தே.கட்சியைப் புறக்கணித்து விலக்கி வைக்கும் வகையில் வவுனியா வாக்காளர்கள் வாக்களித்துள்ளதை சீரணிக்க முடியாமல் தடுமாறிக் கொண்டிருக்கும் கல்வி ராஜாங்க அமைச்சரும், அவரது தலைமையிலான கட்சி உறுப்பினர்களும் வவுனியாவில் உள்ள சில யதார்த்தமான உண்மைகளையும் நிலைப்பாடுகளையும் உணர்ந்து கொள்ள வேண்டிய கட்டாய நிலைமை ஏற்பட்டுள்ளது.

வவுனியாவில் அமைதி நிலைமையை ஏற்படுத்தினோம். பல அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்துகிறோம். அரசாங்கத்தைத் தூண்டி கல்வி வளர்ச்சிக்கும், புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்கும் கோடிக்கணக்கான பணத்தைக் கொழும்பிலிருந்து கொண்டு வந்து கொட்டினோம். ஆனால் தேர்தலில் தமிழ் மக்கள் நன்றி கெட்ட வகையில் எமக்கு விரோதமாக வாக்களித்து எமது கட்சியைத் தோற்கடித்து விட்டார்களே என்று அமைச்சர் அவர்கள் கொதித்துப் போயுள்ளது வெளிப்படையாகவே தெரிகிறது.

தமிழர்களைப் 'புல்லுருவிகள்' என்று வர்ணித்து இந்த நாட்டில் இனப்பிரச்சினை கிடையவே கிடையாது என சாதித்து வரும் ஒரு கட்சிக்கு வாக்களிக்கலாம் என்று அமைச்சர் அவர்கள் கருதுகிறார்கள். அபிவிருத்தியை நோக்கமாகக் கொண்ட அவரது நல்லெண்ணம் சரியானது என்றே கொள்ளலாம். ஆனால் அவர் மேற்கொண்டுள்ள அபிவிருத்தி நடவடிக்கைகளின் ஓட்டை லட்சணங்கள் அங்கு நடைபெறும் தில்லுமுல்லுகள் பற்றி அவருக்கு ஏதாவது தெரியுமோ என்னவோ?

அரசியல் முதிர்ச்சியும் போதிய அனுபவமும் அற்ற 'அரசியல்வாதியான' அமைச்சர் அவர்களைத் தவறான பாதையில் இட்டுச் செல்லும் இவரது உள்ளூர் சகபாடிகள் குறித்துக் கவனம் செலுத்த வேண்டியது அமைச்சரின் எதிர்கால நன்மைக்கு அவசியம்.

எதிர்க்கட்சி அரசியவாதிகள் என்ன செய்தாலும் நன்மையானதாக இருந்தாலும் கூட அதனைக் கட்டாயம் எதிர்த்துச் செயல்பட வேண்டும், முறியடிக்க வேண்டும் என்று அவர் செயல்படுவது எந்தவித நன்மைகளையும் தரப்போவதில்லை.

## வவுனியா நகரசபை

கடந்த 1990ம் ஆண்டு வவுனியாவில் ஏற்பட்ட யுத்த நிலைமைகளின் பின்னர் மீண்டும் சிவில் நிர்வாகம் ஆரம்பமாகிய போது நகர சுத்திகரிப்பு ஊழியர்கள் இருவரது பாக்கிச் சம்பளப் பணம் சந்தேகத்திற்கிடமான முறையில் அதிகாரிகளினால் பெற்றுக் கொள்ளப்பட்டது. நகரசபையின் அலுவலகக் கடமைகளுக்காக வழங்கப்பட்ட வாகனத்தை நகரசபைச் செயலாளர் கொழும்பில் தனது தனிப்பட்ட இடத்தில் வைத்து வாடகைக்கு ஓடி பணம் சம்பாதித்தது.

நகர வரியிறுப்பாளர்களது குறைகளை, அடிப்படைத் தேவைகளை அலட்சியப்படுத்தி எதேச்சதிகாரியைப் போல நகரசபைச் செயலாளர் நடந்து கொண்டமை போன்ற ஆதாரபூர்வமான குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் விசாரணைகள் நடைபெற்று செயலாளருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டது.

இதனை ஒரே நாளில் ரத்துச் செய்து அந்த அரச ஊழியரை சக்தி மிக்க ஒரு சர்வாதிகாரியாக செயற்பட வழிவகுத்தது அமைச்சரின் 'அரசியல் நடவடிக்கை'.

இராஜாங்க அமைச்சரின் ஆதரவு என்ற பலத்தைக் கொண்டு அவர் மேற்கொண்ட நியதிக்கு மாறான நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்டது அவரது அரசியல் எதிரிகள் அல்ல. பொது மக்களும், அவரது ஆதரவாளர்களும்தான் என்ற உண்மை அவருக்கு இப்போதும் கூட புரியவில்லை போலத் தெரிகிறது.

## பூந்தோட்டக் கல்வியியல் கல்லூரி

பல கோடிக்கணக்கான ரூபாய் செலவில் அமைக்கப்பட்டு வரும் பூந்தோட்டக் கல்வியியல் கல்லூரியின் முதலாம் கட்ட வேலைகள் முடிவடைந்ததும் கோலகலமாக அதனைத் திறந்து வைத்து கல்வி நெறியை ஆரம்பித்து வைத்தார் அமைச்சர். அது வரவேற்கப்பட்டது. மக்கள் மனம் மகிழ்ந்தார்கள்.

அரபு நாட்டு கட்டிடக் கலையைப் பின்பற்றி கூம்பு வடிவத்தில் அக்கட்டிடத்தின் கூரைகள் அமைக்கப்பட்டுள்ளன. அழகாக இருக்கின்றது. மரங்களினால் ஆன கூரைக்கான செலவிலும் பார்க்க மூன்றில் ஒரு பங்குதான் இதற்குச் செலவாகிறது.

கடந்து போன மாரிகால பருவமழையின் போது கொங்கிரீட்டினால் கட்டப்பட்ட கூம்பு வடிவக் கூரையில் நீர் கசிந்து அறைகளில் வெள்ளமாக தண்ணீர் தேங்கி நின்று அங்கிருந்த சுமார் 50 மாணவர்கள் குளிரினால் வாடியதை அமைச்சர் அவர்கள் அறிவாரோ?

நீர் கசிந்த கூம்புவடிவக் கூரைகளிலும் சுவர்களிலும் திட்டுத்திட்டாக ஆங்காங்கே பசுமைநிறத்தில் பாசி படர்ந்திருப்பதை இப்போது போனாலும் கண் குளிரக் காணலாம்.

சுமார் நானூறு மாணவர்கள் தங்கியிருந்து கல்வி கற்க வசதி செய்யப்பட்டுள்ள இந்த கல்லூரிக்கான சமையலறை கட்டப்பட்டுவிட்டது.

மரக்கறிவகைகளை வெட்டுவது அல்லது உணவுப் பொருட்கள், பாத்திரங்கள் என்பவற்றை வைப்பதற்குத் தேவையான மேசையோ அல்லது சுவருடன் இணைந்த கட்டிட அமைப்போ இல்லை. திறந்த வெளியரங்கு போல கட்டப்பட்டுள்ள அந்த சிறிய சமையலறை மண்டபத்தில் சமையற்காரர்கள் கீழே இருந்து நிலத்தில் வைத்துத்தான் காய்கறி நறுக்குகின்றனர். இரண்டே இரண்டு சிறிய கைகழுவும் தொட்டிகள் தான் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றைப் பயன்படுத்தி சமையல் செய்வதில் அங்குள்ள சமையற்காரர்கள் திணறுவதை கல்வி ராஜாங்க அமைச்சர் கட்டாயம் நேரில் சென்று பார்க்க வேண்டும்.

சோறுசமைப்பதற்கு நிரந்தரமான விறகு அடுப்புகள் எதுவுமில்லை. கொளுத்தும் வெய்யிலில் திறந்த வெளியில் வைத்துத்தான் சோறு சமைக்கப்படுகின்றது.

குளியல் அறைகள், மலசல கூடங்கள் என்பன கட்டப்பட்டுள்ள போதிலும் வடிகால் அமைப்புகள் எதுவுமே கிடையாது. இதனால் தற்போது மாணவர்களின் பாவனையில் உள்ள கட்டிடங்களைச் சுற்றிலும் கழிவுநீர் தேங்கி நின்று சிறு சிறு சாக்கடைகள் உருவாகியுள்ளன. அவற்றிலிருந்து துர்நாற்றம் வீசுகிறது. நுளம்புகள் தமது இனப்பெருக்க நிலையமாக அவற்றைப் ப..ன்படுத்துகின்றன.

இவ்வளவுக்கும் கல்வி அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ள வதிவிட கட்டிடப் பொறியாளர் அங்கு ''தங்கியிருந்து'' கட்டிட நிர்மாண வேலைகளை மேற்பார்வை செய்து வருகின்றார்.

வவுனியா மாவட்டத்தில் ஏனைய அபிவிருத்தி திட்டங்களும் நடைபெற்று வருகின்ற போதிலும், கல்வி அமைச்சின் இந்த அபிவிருத்தித் திட்டம் மாத்திரம் ஏன் இவ்வளவு 'சிறப்பும்' பெற்று விளங்குகின்றது என்பது தெரியவில்லை.

கல்வி ராஜாங்க அமைச்சரின் கவனத்திற்கு. அவர் சம்பந்தப்பட்ட சகல விடயங்களையும் வெளிக்கொணர வேண்டுமென்பதில்லை. இங்கு சுட்டிக்காட்டப்பட்டுள்ளவையும் மாதிரிக்கு ஒன்றிரண்டே தவிர முழுமையாகக் கூறவில்லை என்பதையும் கவனத்திற் கொள்ள வேண்டும்.

ஆகவே, தோல்வியடைந்ததும், காவல்துறையினர் உட்பட பொதுமக்களையும் கண்ணில் காண முடியாதவாறு சீறி விழுந்து வெறுப்பைக் காட்டாமல் மக்களுக்கு சேவை செய்ய வேண்டும் என்ற தார்மீகப் பொறுப்பை உணர்ந்து ராஜாங்க அமைச்சரும் அவரது சகபாடிகளும் செயற்பட வேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பாகும்.

**தம்பு திருநாவுக்கரசு**

நன்றி - நூலகத்திட்டம்



# ஊருக்கு நூறுபேர்

## எதிலிருந்து தொடங்குவது? -6

**அ.டேவிட் நந்தகுமார்**

ஊருக்கு ஒரு இளைஞனாவது கைது செய்யப்படும் நிலைமை இருந்தது. பகிஸ்கரிப்பு, ஹர்த்தால், கடையடைப்பு ஆகியவற்றில் முன்னின்றவர்கள், பஸ்ஸிற்குக் கல்லெறிந்தவர்கள், லொறியை முடக்கியவர்கள் எனப் பல்வேறு காரணங்களுக்காக கைதுகள் நடந்தன

அரசாங்க ஊழியர்கள் சிங்களப் பாடத்தை பரீட்சையில் எடுத்துப் பாஸ் பண்ண வேண்டும் எனும் சட்டம் காரணமாக, பரீட்சை எழுத மறுத்தவர்கள் வேலையிலிருந்து நீங்கினார்கள். அவர்களையும் 'எதுவோ' காரணம் சொல்லி பொலிஸ் கைது செய்தது.

**காசி ஆனந்தன், வண்ணை ஆனந்தன், நித்தியானந்தன், அளவெட்டி ஆனந்தன் என 'ஆனந்தன்கள்' அதிகம்.** வேறும் பல இளைஞர்கள். குறிப்பாகத் தமிழ் இளைஞர் பேரவையைச் சேர்ந்தவர்கள் இவ்வாறு கைது செய்யப்படுவது அதிகம்.

ஒரு முறை பொலிஸில் பிடிபட்டவர் எங்களுக்கு ஹீரோ. ஊருக்கும் அவர் தான் கதாநாயகன். பொலிஸில் இருந்து அவர் விடுபட்டு வருகிற போது வரவேற்பு விழா நடைபெறும்.

நம்மூரில் ஒருவரை நாம் வரவேற்கவே முடியாமல் போய்விட்டது. அவரது கதை வேறு. குணமண்ணை ஒரு தேத்தண்ணிக் கடையில் சாப்பிட்டுக் கொண்டிருந்த போது பொலிஸ் அவரைக் கைது செய்தது. இரண்டு, மூன்று நாள் பொலிஸ் சித்திரவதையின் பின் அவரைக் கைவிலங்குடன் ரயிலில் பொலிஸ் அழைத்துச் சென்றது. சாவகச்சேரிப் புகையிரத நிலையத்தில் இருந்து ரயில் புறப்படுகிற போது, தண்டவாளத்தின் அருகில் இருந்த மணல் கும்பிகளின் மேல் குணமண்ணை குதித்து விட்டார். பொலிஸ் திகைத்துப் பார்த்து நிற்க ரயில் பறந்து விட்டது. தானும் குதித்துத் தன் காலை ஒடித்துக் கொள்ள எந்தப் பொலிஸ்காரன் தான் தயார்?

இரவிரவாக அவர் தனக்குத் தெரிந்த வீடொன்றிற்குச் சென்று, வெட்டிரும்பால் விலங்கை அறுத்து, தப்பித்துக் கொண்டார்.

ஊர்வந்த போது, பூரண கும்பம் வைத்து, விழா எடுத்து எப்படி குணமண்ணையை வரவேற்க முடியும்?

வாசிகசாலையின் குந்தில் இருந்து, றோட்டின் இருபக்கமும் பொலிஸ்காரர் அல்லது ஜீப் வருகிறதா எனப்பார்த்துக் கொண்டு தன் கதையைக் கூறுவார். நாங்கள் கேட்டுக்கொண்டிருப்போம்.

ஜீப் வந்தாலும் அஞ்சத் தேவையில்லை. வாசிகசாலையின் குந்தைத் தாண்டிப் பாய்ந்தால் வாழைத்தோட்டம். அதனையும் தாண்டி ஓடினால் பனந்தோப்பு. பனந்தோப்பின் பக்கத்தில் சுடலையும், பற்றைக் காடுகளும்.

பொலிஸ் ஏலுமென்றால் தூரத்திப் பிடிக்கட்டும் பார்க்கலாம்.

எவ்வளவு நாள் இப்படி ஓடி இருக்கிறார் அவர்.

ஓடுகிற கதைகள்தான் அவருடையது. ஒவ்வொரு சம்பவத்திற்கு பின்னும் அவர் நிறைய ஓடி இருக்கிறார். ஓடுவது என்பது புறமுதுகு காட்டுவது அல்ல; பின்வாங்கல் அல்ல. வீரம் செறிந்த தந்திரம்.

கையில் துப்பாக்கி இல்லை; காலில் சப்பாத்து இல்லை. எதிரியிடம் இரண்டும் இருக்கிறது. கூடவே ஜீப்பும் இருக்கிறது.

நான் பாடசாலையில் ஓட்டத்தில் விண்ணன். ஓட்டத்தில் மாத்திரம்தான் விண்ணன். ஓடத்தெரியுமென்பதனால் அதேவேகத்தில் நீளமும் பாய்வேன். 100, 200, 400 மீற்றர் ஓட்டங்கள் எனக்குக் காற்றுப் போன்றது. துவக்கிலிருந்து விடுபடும் குண்டென, காற்றைக் கிழித்துக் கொண்டு பறப்பேன். என் இல்லம்சார்ந்த மாணவரும் ஆசிரியரும் என்னுடன் சேர்ந்து உற்சாகம் குதிபட ஓடிவர, சிட்டெனப் பறப்பேன். எனது கல்லூரி மைதானத்தில் ஒருவளையம், இரண்டு வளையம் சுற்றி வருகிறபோது... நான் முதலாமிடம்.

குணமண்ணை சொல்வார் "நல்லா ஓடு. அது நல்லது. நீ உயரம் பாய்தலிலும் கெட்டிக்காரனாக வந்தால் இன்னும் நல்லது."

குணமண்ணை எட்டப்பர்களின் வீடுகளிற்கு இரவில் கல்லால் எறிந்து விட்டு ஓடுவார்: ஓடு தெறிக்கும்.

நம்மூரில் பொலிஸ் இன்ஸ்பெக்ரர் ஒருவர் இருந்தார். அவர் வீட்டுக்குக் கல்லெறிவதும், வேலிக்கு நெருப்பு வைப்பதும், பிறகு ஓடுவதும் அவருக்கு மிகச் சாதாரணம்.

ஹர்த்தால் என்றால், நமது வீதியால் பஸ் போனால், போன பஸ் திரும்பி வருவதைப் பார்த்து கையில் இரு கல்லுடன் நிற்பார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகம் திறப்பதற்கு பிரதம மந்திரி சிறீமாவோ பண்டாரநாயக்கா வந்த போது, லொறி லொறியாகச் சனம் போய்க் கொண்டிருந்தது.

அன்று புரட்டாதிச் சனிக்கிழமை. நாங்கள் விரதம். மழைபெய்து கொண்டிருந்தது. குணமண்ணை எங்கள் வீட்டிற்குப் பக்கத்தில் சைக்கிளில் திரிந்து கொண்டிருந்தார்.

சிறிது நேரத்தில் லொறி ஒன்று பனைமரத்துடன் மோதி பெருஞ்சத்தத்துடன் நின்றது. எங்கள் வீட்டுக்குப் பக்கத்தில் அது நடந்தது. மழை இரைச்சலையும் மீறி சனங்களின் கூக்குரல் கேட்டது.

ஓடிச் சென்று பார்த்தோம். ஐயா குடையைக் கொண்டு ஓடி வந்தார்.

ஒ்றவரின் நெற்றியிலிருந்து இரத்தம் வடிந்தது. மழைநீர் இரத்தத்தை கழுவிக் கொண்டிருந்தது.

சனங்கள் லொறியால் குதித்துக் குதித்து அருகில் இருந்த கடைக்குள் ஒதுங்கினார்கள். லொறியின் முன்பக்கம் நெளிந்திருந்தது. தொப்பென்று பனம்பழம் ஒன்று லொறியின் கூரையில் விழுந்தது.

ஐயா, "பொலிஸ் வரும். வீட்டை வா..." என்று இழுத்துக் கொண்டு போனார்.

அடுத்த செவ்வாய்க்கிழமை இரவுதான் குணமண்ணை நடந்ததைச் சொன்னார். "லொறி வரேக்கை றைவருக்கு எறிஞ்சன். பிறகு ஓட்டம்தான்..."

றோட்டில் ஜீப் வருகிறதோ என்று பார்த்துக் கொண்டுதான் கேட்டேன். ஜீப் வருவதனைக் கண்டு பிடிப்பது சுலபம். முன்பக்க ஹெட்லைட் இரண்டும் ஒடுங்கி இருக்கும். மற்றைய வாகனங்களின் லைட் அவ்வாறல்ல. ஆனால் 'சோமசெற்' காரின் ஹெட்லைட்டும் ஜீப்பைப் போன்றதுதான். அதனால் பலதடவை ஏமாந்திருக்கிறோம்.

ஆனால் இப்படி வீரதீரச் செயல்கள் புரிகிற குணமண்ணையை பொலிஸாரால் பிடிக்க முடியவில்லை.

அடிக்கடி பொலிஸ் ஜீப் நம் வீதி தோறும் திரியும். ஒழுங்கையில் புழுதி பறக்க, ஜீப்பினைப் புழுதி மறைக்க, நீட்டிய துவக்குடன் ஜீப் திரியும்.

மாலை வேளைகளில் நாங்கள் விளையாடிக் கொண்டு நிற்கிற போது, சடக்கென ஜீப் வந்து நிற்கும். பொலிஸ்காரர் குதித்தோடி வருவார்கள். நம்மைச் சுற்றி வளைப்பார்கள்.

"குணம் வந்தானா? குணத்தைத் தெரியுமா? குணம் வந்தால் எங்களுக்கு அறிவிக்க வேணும்."

முதனாள் பின்னேரம் அவரைச் சந்தித்திருப்போம். குணம் எனும் ஒருவர் உலகத்திலேயே இல்லை என்பது போல நாங்கள் முகத்தை வைத்திருப்போம்.

குணமண்ணையின் வீரதீர செயலுக்கு முற்றுப்புள்ளி வைப்பது போல ஒரு சம்பவம் நடந்தது. துயரம் தோய்ந்த சம்பவம் அது.



நம்மூர் அம்மன் கோயிலை சிரமதானம் மூலம் திருத்திக் கொண்டிருந்தனர் தொண்டர் சபையினர். குணமண்ணையும் கோயிலில் அலவாங்கு எடுத்து சுவரைக் கொத்திக் கொண்டிருந்தார்.

ஒரு கார் மிளகாய் மூட்டைகளுடன் கோயிலடிக்கு வந்து நின்றது. மிளகாய் மூட்டைகளுடன் ஒருகார் கோயிலுக்கு ஏன் வரவேண்டும்? எனக் கேள்வி கேட்டுத் திகைப்பதற்குள் பொலிஸ்காரர் துவக்குடன் குதித்து விட்டனர்.

குணமண்ணையை சுற்றிவளைத்து விட்டனர். குணமண்ணைக்கு ஒன்றும் செய்ய முடியவில்லை. அலவாங்கைக் கீழே போட்டார்.

பின்னால் ஒரு ஜீப் வந்து நின்றது. குணமண்ணை நடந்து வந்தார். இன்ஸ்பெக்டர் கைத்துப்பாக்கியை எடுத்தார். அடிக்காலில் சுட்டார். மறுகாலிலும் ஒருசூடு. இரத்தம் சிதறியது.

குணமண்ணை குனிந்து பார்த்தார். முகம் கோணலாகியது. கண்கள் ஒருக்கால் சிவந்தது அல்லது கலங்கியது. கைவிலங்கு பூட்டப்பட்டது.

அம்மாள் கோயிலைத் திரும்பிப் பார்த்தார். அம்மன் இருட்டினுள் இருந்ததால் தெரியவில்லை.

கால் வலித்ததனால் குதிக்காலால் மெல்ல நடந்து சென்று ஜீப்பினுள் ஏறினார்.

தன்னுடன் சிரமதானம் செய்த தொண்டர் சபையினரைப் பார்த்துக் கொண்டு ஜீப்பினுள் இருந்தார். ஜீப் அசைந்தது.

# நாலு வார்த்தை எழுத விடு

**சூரியா**

## ஒரு கடிதம்

இதே பத்தியில் முன்னர் **'அவ்வப்போது பறித்த அக்கரைப் பூக்கள்'** எனும் தலைப்பில் எழுதியது தொடர்பாக நண்பர் **சிவசேகரம்** அவர்கள் ஒரு கடிதம் எழுதியிருந்தார். கடிதத்தை அப்படியே தருகின்றேன்.

"நாலுவார்த்தை எழுத விடு" (சரிநிகர் 42 மார்ச் 10-13, 1993) பகுதியில் "அவ்வப்போது பறித்த அக்கரைப்பூக்கள்" பற்றி எழுதியுள்ளவற்றில் சில விஷயங்கள் பற்றி ஐயங்கள்/விடுபடல்கள் தொடர்பாக எழுதுகின்றேன்.

கே.கணேஷ் தமிழாக்கிய ஹோ சி மின் "சிறைக் குறிப்புகள்" பற்றி அறிவேன். ஸான்டோர் பெற்றோபியின் "எத்தனை நாள் துயின்றிருப்பாய் எனதருமைத் தாய் நாடே" அவரது சமீபகால மொழி பெயர்ப்பு. மாஓ சேதுங் எழுதிய சில கவிதைகளை அவர் மொழிபெயர்த்தது பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன். அவை நூல் வடிவம் பெற்றதாக எனக்குத் தெரியாது. உறுதிப்படுத்தின் உதவியாயிருக்கும். எஸ்.வி.ராஜதுரை 1981 வாக்கில் மாஓ சேதுங் கவிதைகளைத் தமிழ்படுத்தி நூலாக வெளியிட்டார்.

பலஸ்தீனக் கவிதைகள் ஈழத் தமிழ்த்தேசிய விடுதலைக் கவிதைகள் மீது செலுத்திய தாக்கம், கவித்துவத்தின் அடிப்படையில் பார்க்கும் போது, போதாத தன்மையினதாகவே படுகிறது. தமிழிற் புதுக்கவிதை பற்றிய புரிதல் இப்போது தான் முதிரத் தொடங்கியுள்ளது. இன்னும் வெகுதூரம் போக வேண்டியுள்ளது. தமிழகத்தில் புதுக்கவிதைக்குப் பிறவியிலேயே பிடித்து விட்ட வியாதி இன்னும் தீரவில்லை. ஈழத்தில் அதன் முனைப்பு வேறுவிதமானது. விடுதலைப் போராட்டத்துக்கு முன்னமே சண்முகன் சிவலிங்கம் போன்றோரால் செழிப்பானதும் மரபுக்குப் புறம்பானதுமான கவிதை நடை உருவாக்கப்பட்டு விட்டது.

கவிதா நாடக நிகழ்வு பற்றிய குறிப்பில் ஜெயபாலனுடைய கவிதைகள் "எரிகின்ற எங்கள் தேசம்" நிகழ்ச்சியில் இடம்பெற்றதாகக் கூறப்பட்டுள்ளது. இது வரை அவரது கவிதைகள் சேர்க்கப்படவில்லை. அதற்கான காரணங்கள் நிகழ்ச்சியின் அமைப்புத் தொடர்பானவை என ஊகிக்கிறேன். ஜெயபாலனுடைய கவிதைகளின் முக்கியத்துவத்தினை அவை இடம்பெறாமை எவ்வகையிலும் மறுதலிக்காது. இனிவரும் நிகழ்ச்சியில் அவரது கவிதைகள் உள்ளக்கப்படுமென எதிர்பார்ப்போமாக. கவிஞர்கள் பட்டியலில் உள்ள சிலரது கவிதைகள் "துன்பக் கேணியிலே" என்னும் பெண்கள் நிலை தொடர்பான நிகழ்ச்சியில் இடம் பெற்றவை. (உதாரணமாக: சங்கரி, சிவரமணி, புவனம், மைத்ரேயி, மல்லிகா)

வஸ்லாவ் ஹாவெல் (தமிழில் -மணி) என்று வருகிறது. ஹாவெலுக்கு தமிழில் மணி என்று பேரா? அடைப்புக்குறி பின்னர் நாடகம் தொடர்பாகவும் தவறான இடத்தில் வருகிறது!

"தமிழ் நாட்டின் முற்போக்கு எழுத்தாளர்களில் ஒருவரான சுந்தர ராமசாமி" பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. இது முன்னணி எழுத்தாளர் என்ற கருத்தில் எழுதப்பட்டுள்ளதா? சுந்தர ராமசாமி தன்னை ஒரு "முற்போக்கு எழுத்தாளராக" கருதுகிறாரோ என்பது சிந்தனைக்குரிய விஷயம்."

இக்கடிதத்தில் மொழி பெயர்ப்புக் கவிதைகள் பலவற்றைக் குறிப்பிடாதது பற்றிக் குறிப்பிட்டிருந்தார். சில தெரியாதன. சில தெரிந்தும் விடுபட்டமைக்கு விஷேட காரணங்கள் எதுவுமில்லை. தகவல் தந்தமைக்காக சிவசேகரத்துக்கு சூர்யாவின் நன்றி.

பாலஸ்தீனக் கவிதைகள் ஈழத்தமிழ்த் தேசியக் கவிதைகள் மீது செலுத்திய தாக்கத்தின் போதாமை குறித்து எழுதியிருந்தார். அச் சூழலில் இருந்தவன் எனும் வகையில் எனது தாழ்மையான கருத்து **சேரனின் 'இரண்டாவது சூரிய உதயம்'**, யமன் ஆகிய கவிதைத் தொகுப்புகளும், பாலஸ்தீனக் கவிதைகளும் தான் அதிகம் தாக்கம் செலுத்தின. **புதுசு** சஞ்சிகையில் வந்த அதிகம் கவிதைகள் இத்தாக்கத்திற்குட்பட்டன. **மரணத்துள் வாழ்வோம்** தொகுப்பிலும் இதன் தாக்கத்தைக் கவனிக்கலாம். அப்போது அறிமுகக் கவிஞர்களாக இருந்த **துஷ்யந்தன், செழியன், சூரியன், தமயந்தி** போன்ற கவிஞர்களில் பலரில் இதனைக் காண முடிகிறது.

### டானியல் அன்ரனி

நண்பர் டானியல் **அன்ரனி** இறந்துவிட்டார். யாழ்ப்பாணத்திலிருந்து வந்த நண்பரொருவர் சொன்ன தகவல் இது. கொழும்பு ஆஸ்பத்திரி ஒன்றில்தான் இறந்திருக்கிறார். கொழும்பில் நாங்கள் இருந்து எங்களுக்குத் தெரியாமல் போய் விட்டது.

டானியல் அன்ரனி என் நண்பர் என்று சொல்வது எனக்குப் பெருமை. அவரை இருவகையில் ஈழத்து இலக்கிய உலகம் அறியும். எண்பதுகளில் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த **'சமர்'** எனும் சஞ்சிகையின் ஆசிரியர். அப்போது வெளிவந்த சஞ்சிகைகளில் **அலை,. சமர், புதுசு** முதலான்வை குறிப்பிட வேண்டியவை. சமர் ஒன்பது இதழ்களே வந்த போதும் அதில் வெளியான படைப்புகள் காத்திரமானவை.

வலை என்பது டானியல் அன்ரனியின் குறிப்பிடத்தக்க சிறுகதைத் தொகுப்பு. அவர் கதைகள் சில உன்னதமானவை. **கட்டுகள், வலை** முதலானவை.

அவரை நான் சந்தித்த இறுதி நாட்களில் அவர் உடல் தளர்ந்துதான் காணப்பட்டது. பேச்சில் நம்பிக்கை இருந்தது. மக்களை நேசிக்கத் தெரிந்தவர் டானியல் அன்ரனி.

அவர் இறப்பு துயர் அலையை எழுப்பிக் கொண்டிருக்கிறது.

நன்றி - நூலகத்திட்டம்



(சென்ற இதழ் தொடர்ச்சி)

## ''இலங்கையின் அரசியல் யாப்புச் சீர்திருத்தத்திற்கான ஓர் உருவரைவு'' என்ற தலைப்பில் நடைபெற்ற கருத்தரங்கின் மூன்றாவது அமர்வு பற்றிய குறிப்புகள் இவை

**எஸ்.சுந்தரலிங்கம்**

''அரசியலமைப்புக்கான 13வது திருத்தத்தின்படி மாகாண அரசுகளுக்கு வழங்குவதென மத்திய அரசு இணங்கிய விடயங்களில் பல சிக்கல்கள் உள்ளன. சில விடயங்களில் விளக்கமும் இல்லை. ஒருகையால் கொடுத்த அதிகாரங்களை மறுகையால் பறிக்கிற நடைமுறைகளும் உள்ளன.''

இவ்வாறு ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி உறுப்பினர் கோபால கிருஷ்ணன் அரசியல் யாப்புச் சீர்திருத்தக் கழகம் நடாத்திய ''இலங்கையின் அரசியல் யாப்புச் சீர்திருத்தத்திற்கான ஒரு உருவமைப்பு'' என்ற தலைப்பிலான கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றும்போது குறிப்பிட்டார்.

லங்கா ஒப்ரோய் ஹோட்டலில் நடைபெற்ற மேற்படி கருத்தரங்கின் மூன்றாவது அமர்வு வடக்கு கிழக்கு பிணக்கினைத் தீர்த்து வைக்கக் கூடிய ''அரசியல் யாப்புச் சீர்திருத்தமும் அரசியல் தீர்வும்'' என்ற உப தலைப்பில் நடைபெற்றது. இவ்வமர்வின் போதே கோபால கிருஷ்ணன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இக் கருத்தரங்கில் மேற்படி உரையை ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி செயலாளர் நாயகம் சுரேஷ் பிரேமச்சந்திரன் நிகழ்த்துவதாகத் துண்டுப் பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. என்ன காரணமோ தெரியவில்லை. அவருக்குப் பதிலாக அவரது சார்பில் அவர்களது அமைப்பைச் சேர்ந்த கோபாலகிருஷ்ணனே உரையாற்றினார்.

இவர் தனது உரையில் கூறியதாவது:

"இனப் பிரச்சினையை தீர்க்கின்ற வரலாற்றில் இறுதி அனுபவம் தான் இலங்கை-இந்திய உடன்படிக்கை. இதன் கீழ் மாகாண சபைகள் உருவாக்கப்பட்டன. சிங்களப் பேரினவாதம் விரும்பியோ விரும்பாமலோ இது ஏற்கப்பட்டது. பிரச்சினைக்கு உடனடியாக தீர்வொன்றைக் கொண்டுவராத போதிலும் எதிர்காலத் தீர்வுக்கான அடிப்படையை இவ்வொப்பந்தம் முன்வைத்தது.

இனப்பிரச்சனைக்குத் தீர்வு காண்பதற்கு இலங்கை ஒரு பல்லினச் சமூகங்களைக் கொண்ட நாடு என்பது ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். சமஷ்டி முறை ஒன்றின் கீழ் அதிகாரப் பரவலாக்கல் செய்யப்பட வேண்டும். அதிகாரப் பகிர்வு செய்யப்பட்ட விடயங்கள் திட்டவட்டமானவையாக இருக்க வேண்டும். இந்த அதிகாரங்களில் ஜனாதிபதியோ, அமைச்சரவையோ, பாராளுமன்றமோ தலையிடக்கூடாது.

சட்டம்-ஒழுங்கு, காணி ஆகிய விடயங்களில் அதிகாரங்கள் சமஸ்டி அரசிடம் இருக்க வேண்டும். மத்திய அரசுக்கு காணி அதிகாரங்கள் தேவையாயின் அது சம்பந்தமான ஏற்பாடுகள் அரசியலமைப்பில் இருக்கலாம். சமஸ்டி அமைப்பைப் பொறுத்தவரையில் வடக்கு கிழக்கு இணைந்த அலகாக அது இருக்க வேண்டும் இவ் அலகை உருவாக்குவதற்கு மாகாண எல்லைகளில் மாற்றங்கள் செய்யப்பட வேண்டும்."

இவ்வாறு கோபாலகிருஷ்ணன் குறிப்பிட்டார்.

மேற்படி கோபால கிருஷ்ணனின் உரை காலம் கடந்து ஞானம் வந்த உரையாகவே தென்பட்டது. ஏனென்றால் இனப்பிரச்சினைக்கு நீண்ட வரலாறு இருந்தும் பேரினவாதிகள் அரசியலமைப்பில் கூறப்பட்டவற்றையே தட்டிக் கழித்த வரலாறுகள் இருந்தும் அதிகாரங்கள் வரையறுக்கப்படாத இலங்கை இந்திய ஒப்பந்தத்தையும் அதிகாரங்கள் போதியளவு இல்லாத மாகாண சபைகளையும் இவர்களது அமைப்பு தான் அன்று ஏற்றுக் கொண்டிருந்தது. இப்போது வடக்கு - கிழக்கு நிரந்தமாக இணைக்கப்பட வேண்டும் என்கிறார்கள் இவர்கள். நல்லது! அப்போ முன்னர் ஏன் தற்காலிக இணைப்பை ஏற்றுக் கொண்டீர்கள். கிழக்கில் சர்வஜன வாக்கெடுப்பு நடாத்துவதற்கு ஏன் சம்மதித்தீர்கள். வடக்கு கிழக்கு டிக்கள் இலங்கை அரசுடன் இணைந்து வர விரும்புகிறார்களா? இல்லையா? என்பது தொடர்பாக ஒரு சர்வஜன வாக்கெடுப்பை நடத்திப் பாருங்கள் என ஏன் அரசைக் கேட்கவில்லை. அல்லது சிங்களக் குடியேற்றங்களை அகற்றி விட்டு சர்வஜன வாக்கெடுப்பை நடாத்திப் பாருங்கள் என ஏன் கேட்கவில்லை. தற்காலிக இணைப்பிற்கும் சர்வஜன வாக்கெடுப்பிற்கும் அரசியலமைப்புரீதியாக இடம் கொடுத்துவிட்டு இப்போது மாத்திரம் நிரந்தரமாக இணைக்கப்பட வேண்டும் என்று புலம்புகின்றீர்களே என்றெல்லாம் இவர்களைப் பார்த்து கேள்விகள் எழுப்பப்பட்டு விட்டபின், இப்போது வந்து இதைச் சொல்கிறார்கள்!.

13 வது திருத்தச்சட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட போது அதில் மாகாண சபைகளுக்கு போதியளவு அதிகாரங்கள் கொடுக்கப்படவில்லை என்றும் குறிப்பாக காணி, சட்டம் -ஒழுங்கு போன்ற விடயங்களில் போதியளவு அதிகாரங்கள் கொடுக்கப்படவில்லை என்றும் கொடுக்கப்பட்ட விடயங்களைக் கூட பறித்துக் கொள்வதற்கான வழிகள் அரசியலமைப்பில் உள்ளது என்றும் திருத்தம் வெளிவந்த போதே பலர் அபிப்பிராயங்களைத் தெரிவித்திருந்தனர். அவ்வாறிருந்தும் இவர்களது அமைப்பு அதனை அன்று ஏற்றுக் கொண்டது. ஏனைய தமிழ் கட்சிகள் பகிஸ்கரித்த போதும் பதவி ஆசையில் இந்திய இராணுவம் நடாத்திய போலித் தேர்தலிலும் இவர்கள் பங்கு கொண்டார்கள். இந்திய இராணுவத்தின் பாதுகாப்பில் மாகாண அரசிலும் குந்திக் கொண்டார்கள். அதிகாரப் பங்கீட்டில் ஓர் எல்லையையாவது இவர்களால் கடக்க முடிந்ததா என்றால் விடை பூச்சியமே. அப்போது திருத்தத்தை ஏற்று பதவியிலும் குந்தியிருந்து விட்டு இப்போது மட்டும் அதிகாரமும் போதாது கொடுத்தவற்றிலும் தெளிவில்லை என புலம்புவதில் என்னதான் அர்த்தம் இருக்கிறது? அப்போதெல்லாம் ஏன் இவை தெரியவில்லை. பதவி ஆசை கண்ணை மறைத்திருந்ததா? அல்லது இந்திய எசமானர்களது முகங்கறுப்பதை விரும்பவில்லையா?

விழுந்தும் மீசையில் மண்படாதது போல் இலங்கை இந்திய ஒப்பந்தமும் 13 வது திருத்தச் சட்டமும் எதிர்காலத் தீர்வுக்கான ஒரு அடிப்படையாக இருந்தது என்று வேறு குறிப்பிடுகின்றார் திரு கோபால கிருஷ்ணன்.

இது எந்த வகையில் சாத்தியமானதாக இருக்கும்? அதிகாரம் வரையறுக்கப்படாத இலங்கை -இந்திய ஒப்பந்தமும், அதிகாரம் போதியளவு இல்லாத 13வது திருத்தச்சட்டமும் எவ்வாறு இனப்பிரச்சினைக்கான தீர்வுக்கு அடிப்படையானதாக அமைய முடியும்? இதை விட 1957 இல் கைச்சாத்திடப்பட்ட பண்டா- செல்வா ஒப்பந்தம் உயர்ந்ததாக இருக்கவில்லையா? உண்மையில் நுணுக்கமாக அவதானிப்பின் அதனை விட மிகத் தாழ்ந்த நிலையிலேயே இலங்கை இந்திய ஒப்பந்தமும் 13வது திருத்தச் சட்டமும் அமைந்திருந்தது.

பண்டா- செல்வா ஒப்பந்தத்திலுள்ள குடியேற்றம் தொடர்பான ஏற்பாடுகள் மட்டும் குறிப்பிட்டாலே போதும்! அது குடியேற்றத்திட்டங்கள் தொடர்பாக பின்வருமாறு குறிப்பிடுகின்றது.

மாவட்ட சபைகளின் அதிகாரங்களுக்குக்குட்பட்ட பிரதேசத்தினுள் அமையும். குடியேற்றத்திட்டங்களில் காணிகளை ஒதுக்க வேண்டிய தகுதியானவர்களைத் தெரிவு செய்யும் அதிகாரம் குடியேற்றத்திட்டங்கள் தொடர்பாக மாவட்ட சபைகளுக்கு இருக்க வேண்டிய அதிகாரங்களாகும்.

1965 இல் கைச்சாத்திடப்பட்ட டட்லி- செல்வா ஒப்பந்தத்திலும் கூட இது தெளிவாக இருந்தது.

காணிகளைப் பங்கிடுதல் தொடர்பாக ஒப்பந்தத்தின் நான்காவது பிரிவு பின்வருமாறு குறிப்பிடுகின்றது.

காணி அபிவிருத்தி கட்டளைச்சட்டத்தின் கீழ் வடக்கு -கிழக்கு மாகாணங்களில் காணிகளைப் பகிர்ந்து கொள்ளல் பின்வரும் முன்னுரிமைப்படி அமுல் படுத்தப்படும்.

அ) வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள காணிகளில் அம்மாவட்டங்களில் வாழும் நிலமற்றவருக்கே முதலில் காணிகள் வழங்கப்பட வேண்டும்.

ஆ) இரண்டாவதாக வடக்கு கிழக்கு மாகாணங்களில் வசிக்கும் தமிழ் பேசும் மக்களுக்கு காணிகள் வழங்கப்பட வேண்டும்.

இ) மூன்றாவதாக இலங்கையின் ஏனைய பகுதிகளில் வசிக்கும் தமிழ்க் குடி மக்களுக்கு முதலிடம் கொடுத்து ஏனைய குடிமக்களுக்கும் காணிகள் வழங்கப்பட வேண்டும்.

இவ்விரு ஒப்பந்தங்களும் இப்படிக்கூறும் போது 13வது திருத்தச்சட்டம் காணிக் கொள்கையை மத்திய அரசு தீர்மானிக்கும் என்றும் அதனை நடைமுறைப்படுத்தும் பணியை மட்டுமே மாகாண அரசுகள் மேற்கொள்ளும் என்றும் குறிப்பிடுகின்றது.

ஆட்சி அலகைப் பொறுத்தவரையிலும் கூட மாவட்ட சபைகள் இணைந்து செயல்படுவதற்கு உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ளது.

இனப்பிரச்சினைக்கான தீர்வில் 1988ம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி முன்வைத்த சிபார்சுகளும் பாராளுமன்றத் தெரிவுக் குழுமுன் தொண்டமான் முன்வைத்த சிபார்சுகளும் இலங்கை இந்திய ஒப்பந்தத்தையும் 13வது திருத்தச்சட்டத்தையும் விட முன்னேற்றகரமானதாக இருந்தன. உண்மையில் இன்று பேச்சு வார்த்தைக்கான அடிப்படையாகக் கொள்ளக்கூடிய தகைமையை கொஞ்சமாவது கொண்டிருக்கின்றது என்றால் அது தொண்டமான் முன்வைத்த திட்டமென்றே சொல்ல வேண்டும்!

நான் இவ்வளவையும் ஏன் குறிப்பிடுகின்றேன் என்றால் 'நாம் விடுகின்ற ஒவ்வொரு அரசியல் தவறுகளுக்கும் (மக்களின்) இரத்தத்தால் பதில் சொல்ல வேண்டியிருக்கும்' என்ற மாவோவின் கருத்தை நினைவூட்டுவதற்காகும். மாகாண சபைகள் விடயத்தில் எமது தலைமைகள் தவறிழைத்தார்கள். விளைவு எமது மக்கள் இன்றும் இரத்தத்தால் பதில் கொடுத்துக் கொண்டு இருக்கின்றார்கள்.

உண்மையில் அரசியல் தவறுகள் சில வேளைகளில் தவிர்க்க முடியாமல், ஒரு கட்சியின் புரிதலுக்கு அப்பாற்பட்ட நிகழ்ச்சிகளின் தீவிர தாக்குதல்களினால் இடம்பெற்று வருவதும் உண்டு. ஆனால் வேண்டுமென்றே பிழைப்புக்காக அரசியல் வழிவிலகல்களை விரும்பி ஏற்கின்ற வரலாற்று துரோகங்கள் என்றென்றைக்கும் நீங்காத வடுவை மட்டுமல்ல, மக்களை தவிர்க்கமுடியாத யுத்த நெருக்கடிக்குள் வலிந்து தள்ளியும் விடுகின்றன. வடக்கு கிழக்கிற்கான ஒரு நியாயமான தீர்வை காண வேண்டும் என்று கருதுகிற எந்தச் சராசரி மனிதனும் கூட சில அடிப்படையான விடயங்களைத் தவிர்க்க முடியாதவையாகவே கருதுவான். சிக்கலின் பரிமாணத்தைப் புரிந்து கொள்ளாத பேதைகள் தான் வாய் வந்த போக்கில் தீர்வுகளைப் பற்றிப் பேசுவார்கள். இந்தக் கூட்டத்திற் கலந்து கொண்ட ஒரு சராசரி அரசியல் அக்கறை உள்ள ஒருவன் என்ற முறையில் எனக்குப் படுபவை இவைதான்.

முதலில் வடக்கு -கிழக்கு பிரச்சினையானது கருத்தரங்கு ஏற்பாட்டாளர்கள் தமது துண்டுப்பிரசுரத்தில் குறிப்பிட்டது போல பிணக்கு அல்ல. அது ஒரு தேசிய இனப்பிரச்சினை. அதற்கு ஒரு வரலாறு உண்டு; இவ்வரலாற்றினூடாக ஒடுக்கப்படும் தமிழ்த் தேசிய இனத்திற்கு சில வரலாற்று அனுபவங்களும் உண்டு. இவற்றையெல்லாம் கவனத்தில் எடுத்தே தீர்வுக்கான சிபார்சுகளை முன்வைக்க வேண்டும். இந்த வகையில் மூன்று விடயங்களில் கவனத்தை குவிக்க வேண்டும் எனக்கருதுகின்றேன்.

1) பல்லினத்தன்மை

2) சமஸ்டி அலகுகள், அதன் எல்லைகள்

3) சமஸடி அரசின் அதிகாரங்களும் அவற்றைப் பிரயோகித்தலுக்கான பாதுகாப்பும்.

முதலாவது விடயத்தைப் பற்றி கருத்தரங்குகளின் முதலாவது அமர்வு பற்றிய என் குறிப்புகளிலும் கூறியுள்ளேன்: இனப்பிரச்சினையின் தீர்வுக்கு இலங்கை ஓர் பல்லின நாடு என்பது ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். அதற்கு பல்லினத் தன்மைக்கு தடையாக உள்ள இலங்கை ஒற்றையாட்சி நாடு, பௌத்த மதம் அரச மதம், சிங்கள மக்களே நாட்டின் பிரதான குடிகள் எனும் அம்சங்கள் அகற்றப்பட்டு பல்லினத் தன்மைக்கு ஏற்றவாறு விடயங்கள் சேர்க்கப்பட வேண்டும். இவை பற்றி முதலாவது அமர்வு பற்றிய குறிப்புகளில் விரிவாக கூறியுள்ளமையால் இதில் தவிர்த்துக் கொள்கின்றேன்.

இரண்டாவது விடயம் சமஸ்டி அலகுகள் அதன் எல்லைகள் பற்றியது ஆகும். தமிழ்த் தேசிய இனத்தின் இருப்புக்கும் பாதுகாப்பிற்கும் அதன் தொடர்ச்சியான நிலப்பரப்பு பாதுகாக்கப்பட வேண்டும். இதனால் வடக்கு -கிழக்கு இணைப்பு என்பதை எந்தவித விட்டுக் கொடுப்பும் இல்லாமல் அங்கீகரிக்க வேண்டும். அவ்வாறு இணைக்கும் போது அங்குள்ள முஸ்லீம் மக்கள், சிங்கள மக்கள் பற்றிய பிரச்சினை வருகின்றது. அதற்கான தீர்வுகளையும் யாவும் முன்வைக்க வேண்டும்.

முஸ்லீம் மக்களைப் பொறுத்த வரை அவர்கள் தமிழைப் பேசுவதனால் அவர்கள் தமிழர்கள் அல்லர். அவர்கள் தனித்துவமான ஒரு தேசிய இனத்தவர்கள். அவர்களுக்கு என்ன தீர்வு வேண்டும் என்பதை அவர்களே தீர்மானிக்க வேண்டும். அவர்களுக்கான தீர்வினை தமிழர்கள் திணிக்க முடியாது. தற்போது அவர்கள் தனியான ஆட்சி அலகைக் கோருகின்றார்கள். எனவே அவர்களுக்கான ஆட்சி அலகை உருவாக்குதல் தொடர்பாகவும் கவனம் செலுத்துதல் வேண்டும். வடக்கு - கிழக்கில் முஸ்லீம்கள் செறிவாக வாழ்கின்ற பகுதிகளை இணைத்து அவர்களுக்கான ஆட்சி அலகு ஒன்றை உருவாக்குவது பற்றி ஆலோசிக்கலாம். இவர்களின் ஆட்சி அலகுக்கு தொடர்ச்சியான நிலப்பரப்பு இல்லாவிட்டாலும் கூட அதனை உருவாக்கலாம். இந்தியாவில் பாண்டிச்சேரி யூனியன் பிரதேசத்தை அவ்வாறு உருவாக்கி இருக்கின்றார்கள் ஏன் முன்னைய மேற்கு பாகிஸ்தான், கிழக்கு பாகிஸ்தான் இரண்டும் சேர்ந்து தொடர்ச்சியான நிலப்பரப்பு இல்லாதிருந்தும் கூட பாகிஸ்தான் என்ற நாடாக இருந்தது. தொடர்ச்சியின்மை காரணமாக நிர்வாக முரண்பாடுகள் ஏற்படின் இரு ஆட்சி அலகுகளும் சேர்ந்து அதனைத் தீர்த்துக் கொள்ளலாம்.

முஸ்லீம் மக்களின் ஆட்சி அலகு தமிழ் மக்களின் ஆட்சி அலகுடன் இணைந்திருக்க வேண்டுமா? இல்லையா? என்பது முஸ்லீம் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கு உட்பட்டவிடயமாகும். அதில் தமிழ்த் தேசிய இனம் நிர்ப்பந்தம் செலுத்த முடியாது. ஆனால் இரண்டு ஆட்சி அலகுகளும் இணைந்திருப்பது. இரண்டு தேசிய இனங்களுக்கும் பாதுகாப்பானதாக இருக்கும் என்ற கருத்தை முன்வைக்கலாம்.

சிங்கள மக்கள் வடக்கு- கிழக்கின் பாரம்பரிய மக்கள் அல்லர். பேரினவாதிகளால் குடியேற்றப்பட்டவர்கள் எனினும் நீண்டகாலமாக நிலை பெற்றுவிட்ட குடியேற்றங்கள் தொடர்பாக சில விட்டுக் கொடுப்புகளை செய்வது அவசியமானது ஆகும். இது தொடர்பாக தமிழ் மக்களின் நிலத் தொடர்ச்சியை சிதைக்காமல் சிங்கள மக்கள் செறிவாக உள்ள பகுதிகளில் இருவழி வகைகளைக் கையாளலாம் ஒன்று அவ் விடங்களில் சுயாட்சி உள் அமைப்புகளை உருவாக்கலாம். அல்லது அப்பிரதேசங்களை அருகிலுள்ள சிங்கள மாவட்டங்களுடன் இணைக்கலாம். குறிப்பாக அம்பாறை மாவட்டத்திலுள்ள அம்பாறை தொகுதியை மொனராகல மாவட்டத்துடன் இணைக்கலாம். திருக்கோணமலை மாவட்டத்தில் தமிழ் மக்களின் நிலத் தொடர்ச்சியினை சிதைக்காத பகுதிகளை பொலன்னறுவை மாவட்டத்துடன் இணைக்கலாம். வவுனியா மாவட்டத்தின் வவுனியா தெற்கு சிங்கள உதவி அரசாங்க அதிபர் பிரிவினை அனுராதபுரம் மாவட்டத்துடன் இணைக்கலாம். தமிழ் மக்களின் நிலத் தொடர்ச்சிக்குள் இருக்கும் சிங்கள மக்களைப் பொறுத்த வரை அவர்கள் விரும்பினால் சிறுபான்மை இன அந்தஸ்துடன் அங்கு வாழக்கூடிய ஏற்பாடுகளை செய்யலாம். விரும்பாவிட்டால் அக்குடியேற்றங்களை நீக்கி சிங்கள பகுதிகளில் அதனை உருவாக்கலாம்.


மூன்றாவது விடயமான சமஸ்டி அரசின் அதிகாரங்கள் அவற்றைப் பிரயோகித்தலுக்கான பாதுகாப்பு என்கின்ற விடயத்தில் மிகவும் அவதானம் அவசி

→ 15

**காலம் கடந்து வந்த ஞானம்தான் என்றாலும் விழுந்தும் மீசையில் மண்படவில்லையாம்**

நன்றி - நூலகத்திட்டம்








ஐந்து மணி நேர கடல் பிரயாணத்தின் பின், மன்னார்க் கடற்கரையில் எமது கால்களைப் பதித்தோம்.
உச்சி வெயில் எரித்துக் கொண்டிருக்க இராணுவம் எம்மை வரவேற்றது.

தனது வழமையான பரிசோதனைகளை நடத்தியது. [illegible] செய்வது போல் இருந்தது.
ஒரு நிம்மதிப் பெருமூச்சு.
பல இராணுவக் கவச வாகனங்களும் இராணுவத்தினரும் கூட்டம் கூட்டமாகக் குழுமியிருந்தனர்.
தாராள மனப்பான்மையுடைய [illegible] மனிதர் நகரத்திற்குச் செல்வதற்காக தனது வாகனத்தில் ஏற்ற [illegible] மன்னார் நகரம் நாம் இறங்கிய தாழ்பாட்டுக் கரையில் இருந்து ஐந்து மைல் தூரத்தில் இருந்தது. பஸ் இருக்கவில்லை.
நாம் சென்ற வீதிகளெல்லாம் வெறிச்சென்று சோபையிழந்து காணப்பட்டது. மக்கள் நடமாட்டம அரிதாகக் காணப்பட்டது.
நகரம்; ஆரவாரமின்றி மயான அமைதியில் இருந்தது.
அடிக்கடி வீதிகளில் ஓடிய இராணுவ கவசவாகனங்களின் சத்தம் மரண பயத்தை ஏற்படுத்திக் கொண்டிருந்தது.
முதல்நாள் ஒரு செத்தவீடு நடந்தது.
புலிகளினால் தலை வெட்டிக் கொண்டு செல்லப்பட்ட பொலிஸ்காரர் ஒருவரின் செத்தவீடே அது.
இரண்டு பொலிஸாரின் தலைகள், இப்படிப் புலிகளால் வெட்டிக் கொண்டு செல்லப்பட்டிருந்தது.
இப்பொழுது உள்ள பதட்டமான நிலைமைக்கு இதுதான் காரணம் எனவும், நீண்ட நாட்களுக்குப் பின் இப்படிப் பதட்டம் நிலவுகிறது எனவும் நகரவாசி ஒருவர் கூறினார்.

இதேநாள் நகரின் பல பகுதிகளிலும் ''எச்சரிக்கை'' என்ற தலைப்பில் இராணுவத்தினர் சுவரொட்டி ஒன்றை ஒட்டியிருந்தனர்.

''புதிதாக வீட்டுக்கு வருபவர்கள், உடனடியாகப் பொலிஸில் பதிவு செய்து, பதிவுச் சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும்'' எனக் கண்டிப்பான உத்தரவு அச்சுவரொட்டி மூலம் விடப்பட்டிருந்தது.

நிலைமை மோசம்!
நாம் உடனடியாக பொலிஸில் பதியச் சென்றோம். ஆனால், ''இன்றைக்குப் பதிவு செய்ய முடியாது. நாளை காலை வாருங்கள்'' எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

அதே நேரம் பல தாய்மாரும், வயோதிபர்களும் பொலிஸ் நிலைய வாசலில் குழுமியிருந்தனர். என்ன விடயம் என வினாவியபோது ''நாங்க கடைசிக் கப்பலிலதான் இந்தியாவில் இருந்து வந்தோம். அதற்கான அத்தாட்சிப் பத்திரம் எங்களிட்ட இருக்கிறது. பொலிஸிலும் பதிவு செய்வதற்கு விபரங்களைக் கொடுத்திருக்கிறோம். அது இன்னும் கிடைக்கவில்லை. அதுக்கிடையில ஆமி சுற்றி வளைச்சுப் பொலிஸில பதியவில்லை என்கிறதுக்காக எங்கட குமருகளையும், பொடியன்களையும் உடுத்த உடையுடன் கூட்டியந்துட்டாங்க'' என்றனர்.

நேரம் மூன்று மணி.
பசி எடுத்தது. சாப்பிடுவதற்காக சாப்பாட்டுக்கடை ஒன்றைத் தேடினோம். என்ன ஆச்சரியம்! மன்னார் நகரில் சாப்பிடுவதற்கு நல்ல சாப்பாட்டுக் கடை ஒன்றை எங்களால் கண்டு பிடிக்க முடியவில்லை. விசாரித்தோம். ஒருகடையைக் காட்டினார்கள். பாழடைந்து போன ஒரு பழைய கடை. சாப்பாட்டுக் கடைக்குரிய ஆரவாரமின்றி 'சப்' எனக் காணப்பட்டது. சாப்பிட்டோம்! நல்ல வீட்டுச் சாப்பாடு போல் இருந்தது. 35ரூபா எடுத்தார்.

நேரம் ஆறு மணி. நகரம் அடங்கிப் போனது. இல்லை. அடக்கப்பட்டு விட்டது.

கச்சேரிக்குச் சென்றோம். கச்சேரி மதில்களைச் சுற்றி பொலிஸார் முள்ளுக் கம்பி வளையங்களைக் கட்டிக் கொண்டிருந்தனர். தமது பொலிஸ் நிலையப் பாதுகாப்பிற்காக.
வானத்தில் இருள் மேகம் கவியத் தொடங்கியது. வீதிகளில் மின்சார விளக்குகள் எரியக் காணவில்லை. சுழற்சி முறையிலான மின்சார வழங்கலே இதற்குக் காரணம் என அறியக் கிடைத்தது.
கச்சேரியின் உள்ளே சென்றோம்.
அரச அதிபர் வேலை செய்து கொண்டிருந்தார்.
இரவு நேரம் வீட்டை விட்டு வெளியே வருபவர்கள் கையில் சிமினி விளக்கு வெளிச்சத்துடனேயே தமது அலுவல்களுக்காகச் சென்றனர்.
'டோச்' வெளிச்சம் தெரிந்தால் இராணுவம் சுடுமாம். இதுவும் இராணுவத்தின் ஒரு கட்டளையே.
சுழற்சி முறையில் கிடைத்த ஒரு மணித்தியால மின்சார வெளிச்சத்தில் இரவு உணவை முடித்துக் கொண்டு படுக்கைக்குச் சென்றோம். இரவு 10.30 அல்லது11.00 மணி இருக்கும். மின்சாரம் வந்தது. காலை 5.00 மணிவரை மின்சாரம் வழங்கப்படுமாம். இதுகூட் மக்களுக்காகக் கொடுக்கப்பட்டதல்ல. இராணுவம் தனது பாதுகாப்புக் கருதியே இந்த மின்சாரத்தை தொடர்ச்சியாக வழங்குகிறது என்றார் ஒருவர். ஒன்பதரை மணியில் இருந்து தூரத்தில் எங்கோ ஷெல் விழுந்து வெடிக்கும் சத்தம் கேட்டுக் கொண்டிருந்தது. நிச்சயமாக, கட்டுப்பாடற்ற பகுதிகளில் வாழும் மக்களை நோக்கி கண்டபடி ஏவப்பட்ட ஷெல்களே இவை என்பதில் மறுபேச்சு இருக்க முடியாது.



## மன்னார் மாவட்டம்

மன்னார் மாவட்டத்தில் ஐந்து உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் உள்ளன. அவையாவன: மன்னார், மாந்தை மேற்கு, நானாட்டான், மடு, முசலி ஆகியவையாகும். மன்னார் உ.அ.அ.பிரிவு தவிர்ந்த மற்ற அனைத்தும் இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாதவை. மன்னார் உ.அ.அ.பிரிவில் உள்ள 49 கிராமசேவையாளர் பிரிவுகளில் 14 கிராம சேவையாளர் பிரிவுகள் இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாதவையே.

இராணுவக் கட்டுப்பாடில்லாத பிரதேசங்களில் மின்சாரம் துப்பரவாக இல்லை. நல்லபாடசாலைகள் இல்லை. கட்டிடங்கள் இல்லை. ஆசிரியர்கள் இல்லை. ஆஸ்பத்திரி இல்லை. வைத்தியர்கள் இல்லை.

93ம் ஆண்டு, இந்த மாவட்டத்திற்காக 18,341,625ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதில் 16,228,477ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது.
இதில்,
கல்விக்காக 3,128,831 ரூபாவும்,
சுகாதார சேவைகளுக்கு 635,314 ரூபாவும்,
மின்சாரத்திற்கு 321,540 ரூபாவும்
வீதிப் புனரமைப்புக்கு 1,459,720 ரூபாவும்,
சுயவேலை வாய்ப்புத் திட்டத்திற்காக 839,862 ரூபாவும் செலவு செய்யப்பட்டுள்ளது. ஆனால் மேற்கூறப்பட்ட துறைகளுக்கு இவ்வளவு தொகை ரூபாய்கள் செலவு செய்தும் இத் துறைகள் அபிவிருத்தியடையாமல் பல கஷ்டங்களையும், பிரச்சினைகளையும் எதிர்நோக்குவதற்கான காரணங்கள் என்ன என்ற கேள்வி எழுவது தவிர்க்க முடியாத ஒன்றே.

இந்த வருடத்திற்கும் பன்முக நிதியிலிருந்தும் பிரமாண அடிப்படையிலான நன்கொடை நிதியிலிருந்தும் ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கும் பல இலட்ச ரூபாய்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. இவை இந்த மாவட்டத்தை புனர்நிர்மாணம் செய்யவும், பிரச்சினைகளை தீர்க்கவும், சரியான முறையில் [illegible] படுமா என்பதை இவ்வருட முடிவில்தான் கண்டு கொள்ளலாம் என அங்குள்ள மக்கள் கூறுகின்றனர்.

இந்த மாவட்டமானது வன்னி தேர்தல் தொகுதிக்குள் அமைந்துள்ளது. இந்தத் தேர்தல் தொகுதிக்கு ஐந்து பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனர். இந்தத் தேர்தல் தொகுதிக்கான நிதிகளுக்கு ஐ.தே.க பா.உ. இராஜமனோகரி புலேந்திரனே பொறுப்பாக உள்ளார். இவரது அனுமதியின்றி எந்தத் திட்டங்களுக்கும் நிதிகளைப் பிரித்துக் கொடுக்க முடியாது.

## மன்னார்த் தீவு மக்கள்

இந்த மக்களது இன்றைய பிரதான பிரச்சினை மின்சாரம் இல்லாமை, போக்குவரத்துச் சீர்கேடு, பொருளாதாரத் தடை, வியாபாரத் தொழில்களில் ஈடுபடுவதற்கான கட்டுப்பாடுகள் - உதாரணமாக கடல்வலயத் தடைச் சட்டம்-, கால்நடைகளை வளர்ப்பதற்கான பாதுகாப்பின்மை என்பனவாகும். இக் கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டு, இவை சீர்செய்யப்பட்டால் மட்டுமே, தமது பிரச்சினைகள், கஷ்டங்கள் தீரும் என இப்பகுதி மக்கள் நம்புகின்றனர்.

வடபகுதி கடல்வலையத் தடைச் சட்டத்தினால் மட்டும் 800குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 3500பேர் பாதிப்படைந்துள்ளனர். பேசாலையில் 34வீடுகளையும், வங்காலையில் 50 வீடுகளையும் இராணுவமும் பொலிசும் சேதப்படுத்தியதுடன், அவற்றில் அத்துமீறிக் குடியேறியுமுள்ளனர். இதனால் சொந்த இடங்களை விட்டு வெளியேறிய மக்கள் நலன்புரி நிலையங்களிலேயே தொடர்ந்தும் வாழ வேண்டிய நிலை உள்ளது.

மன்னார் நகரத்தின் பாவனைக்காக மூன்று ஜெனரேட்டர்கள் இருந்தன. இவற்றுள் இரண்டு பழுதடைந்து போக, ஒன்றை மட்டும் பாவித்து, மாலை 6.30மணி முதல் 10மணி வரை சுழற்சி முறையிலான மின்சாரம் வழங்கப்படுகின்றது. இந்நடைமுறை நகரத்துக்குள் மட்டுமே நடைபெறுகின்றது. தாழ்பாடு, எழுத்தூர், எருக்கலம்பிட்டி ஆகிய கிராமங்களில் மின்விநியோகம் முற்று முழுதாய்ப் பாதிக்கப்பட்டுள்ளது.

90களில் அகதிகள் இந்தியாவுக்குச் செல்லும் பொழுது, தமது படகுகளிலேயே சென்றனர். இப்படகுகள் அனைத்தும் இந்தியக்கரைகளில் உள்ளன. சுமார் 140வரையான இந்தப் படகுகளை மீளப்பெற்றுக் கொள்ள முடியுமானால் தமது தொழில்களை மீள ஆரம்பிப்பதற்கு பெரும் உதவியாக இருக்கும் என பாதிப்படைந்த மக்கள் கூறினர்.

''யாழ்ப்பாணத்திலேயே பற்றறி 70ரூபாதான். ஆனால் இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள, எமது பிரதேசத்தில் மட்டும் பற்றறி 140 ரூபா'' என அங்கலாய்த்தார் [illegible]நவர். இன்னொருவரோ மன்னார்த் த[illegible]விலுள்ள இராணுவ அதிகாரியிடம் கேட்டால் பல பொருட்களுக்குப் 'பாஸ்' தேவையில்லை என்பார். ஆனால் கற்பிட்டியிலுள்ள கடற்படையினர் எல்லாப் பொருட்களுக்கும் 'பாஸ்' கேட்கின்றனர். இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள திருமலை, மட்டக்களப்பு, வவுனியா பிரதேசங்களுக்குப் —

பொருளாதாரத்தடை [illegible]
அதேபோல் கட்டு[illegible]
மன்னார் தீவுக்கு ம[illegible]
ரத்தடை அமுல்படு[illegible]
காரணம் என்ன'' எ[illegible]
டார். காரணத்தை [illegible]
மன்னார்த்தீவில் [illegible]
யாழ்.மாவட்டத்தை[illegible]
அதிகாரிகளினது [illegible]
லைக்கிடமானதே. [illegible]
கத் தங்குமிடங்களி[illegible]
S.P ஆ[illegible]ார் த[illegible]
களேடுவாகை அ[illegible]
னர். இதனால் இரா[illegible]
பின் போது யாழ்ப்[illegible]
வர்கள் என்பதற்கா[illegible]
ணத்து அதிகாரிக[illegible]
கென அழைத்துச் [illegible]
னர். இந்த அரச [illegible]
குடும்பத்தினரைப் [illegible]
வதாயின் தமது [illegible]
2500 ரூபாயை பே[illegible]
டும் செலவு செய்[illegible]
மட்டுமில்லை ஆ[illegible]
கிளாளியைக் கடக்[illegible]
சாங்க அதிபர் கூட[illegible]

அரசாங்கத்தரப்பு தகவல்களின்படி 11.9.84 முதல், மன்னார் தீவில் மட்டும் 72 பேர்கள் வரை காணாமல் போயுள்ளனர். ஆனால் இத்தொகை இதைவிட பல மடங்கு அதிகமானது என மனித உரிமைகள் தொடர்பாக அக்கறை கொண்டவர்கள் தெரிவித்தனர்.




## காணாமல் போன கணவரைத் தேடும் மனவுறுதி கொண்ட இளம் மனைவி

என்னுடைய பெயர் அருள்ஜோதி சின்னராசா, வயது 24. எம்முடைய தொழில், கடற்தொழில். எனக்கு இரண்டு பிள்ளைகளும் இருக்கிறார்கள். 90 இல் யுத்தம் தொடங்க, பேசாலை அகதி முகாமுக்குப் போனோம். எனது கணவரான ராஜதுரை சின்னராசா 13.1.91 அன்று மன்னாருக்குப் பஸ்ஸில் போனார். போகும் வழியில் சோதனைச் சாவடியில் வைத்து இறக்கப்பட்டதை பஸ்ஸில் இருந்த அனைவரும் கண்டனராம். இதனைக் கேள்விப்பட்டதும் சோதனைச் சாவடிக்குச் சென்றேன். அங்கு, ''தள்ளாடி இராணுவ முகாமுக்கு கொண்டு போனதாக'' கூறினார்கள். உடனேயே இராணுவ முகாமுக்குச் சென்றேன். எனது கணவர் அங்கே இருப்பதாகக் கூறினார்கள். இரண்டு நாட்களில் விடுவதாகவும் கூறினார்கள். I.C.R.C யிடம் முறையிட்டோம். I.C.R.C யினர் சென்று விசாரித்த போது, அப்படி ஒருவரும் அங்கு இல்லை எனக்கூற, இவர்களும் தொடர்ந்து தேடுவதை விட்டு விட்டார்கள்.

எனக்குச் சொந்த வீடு இல்லை. உழைப்பு இல்லை. அப்பா இல்லை. அம்மா இந்தியாவில். அக்கா என்னோடு இருக்கிறா. அக்காவின் கணவரும் இறந்து விட்டார். அவவுக்கும் ஒரு பிள்ளை இருக்கிறது. தேவையான போது பாக்குச் சீவிச் சீவிப்போம். இப்பொழுது அதுவும் இல்லை. தரும் நிவாரணமும் காணாது. என்ன செய்வது? எப்படி வாழ்வது? என்று தெரியாமல் இருக்கின்றோம்.

இராணுவ முகாமில் இருந்து விடுதலையாகி ஒருவர் வந்தார். அவரிடம் சென்று விசாரித்து விட்டு இப்பொழுதுதான் வந்தேன். அவர் கூறினார். ''தப்பியோட முயற்சிக்கையில் சுட்டுவிட்டார்களாம்''. ஆனால் அவர் இருக்கிறார் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது. தொடர்ந்து நான்கு வருடமாகத் தேடுவதைப்போல, தொடர்ந்தும் தேடுவேன்.

## எமக்குப் பின்னால் வந்தவர் மாயமாக மறைந்தார்

''11.3.94 அன்று காலை, ஏழு மணியளவில் பேசாலை அகதிகள் முகாமில் இருந்து , நாம் ஒரு பத்தோ, பதினைந்தோ பேரளவில், தொழிலுக்குப் போய்க் கொண்டிருந்தோம். நாம் சென்ற வீதியில் ஒரு வளைவு உண்டு. அந்த வளைவின் தொடக்கத்திலும், முடிவிலுமாக இரண்டு சோதனைச் சாவடிகள் உண்டு.



வாழ்வைத் தேடி-

நாமும் பைத்[illegible]

### மன்னார் அகதிக[illegible]

| |
|---|
| மன்னாரில் இராணுவத்தின் கட்டுப்பாட்டிலு[illegible] பகுதிகள் |
| பேசாலை திறந்த நிவாரண நிலையம் |
| நலன்புரி நிலையங்கள் |
| உறவினர் நண்பர்களுடன் |
| இராணுத்தின் கட்டுப்பாட்டில் இல்லாப் பகுதி[illegible] |
| மடு திறந்த நிவாரண நிலையம் |
| பாலம்பிட்டி |
| உறவினர்கள் நண்பர்களுடன் |
| பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டவர்கள் |



# ...பிரதேசமும் ... உண்மைகளும்

— பாரதி

...ல்லையெனில், ...ட்டில் உள்ள ... பொருளாதா ...படுவதற்கான ...ன்னைக் கேட் ...ம் ஆவலில்.

...ல செய்யும். ...சேர்ந்த அரச ...மையும் கவ ...களது அரசாங் ...ல்லாம் A.S.P, ...ள்ள ... இவர் ...ில் தங்கியுள்ள ...ச் சுற்றிவளைப் ...த்தைச் சேர்ந்த ...ந்த யாழ்ப்பா ... விசாரணைக் ...ல்லப்படுகின்ற ...ாரிகள் தமது ...க யாழ் செல்ல ... சம்பளத்தில் ...வரத்துக்கு மட் ...வண்டும். இது ...ன பயணம். ...வண்டும். அர

## அகதிகள்

மன்னார் மாவட்டத்தில்" ஐந்து அகதி முகாம்கள் இருக்கின்றன. மன்னார்தீவில், பேசாலை திறந்த நிவாரண நிலையம், தலை மன்னாரிலும் காட்டாஸ்பத்திரியிலும் உள்ள நலன்புரி நிலையங்கள் ஆகிய மூன்று அகதி முகாம்களும் கட்டுப்பாடற்ற

பிரதேசத்தில்.U.N.H.C.R பொறுப்பில் மடு, பாலம்பிட்டி ஆகிய மற்றைய இரு அகதி முகாம்களும் இயங்குகின்றன.

பேசாலை திறந்த நிவாரண நிலையம் மன்னார் நகரில் இருந்து 10 மைல் தொலைவில் இருக்கிறது. இங்கு உள்ளூரிலேயே இடம்பெயர்ந்து வாழும் அகதிகளும், இந்தியாவில் இருந்து வந்த அகதிகளும் இருக்கின்றனர். இந்த அகதிகளின் சொந்த இடங்களை மூன்று பிரிவாய் பிரிக்கலாம்.

❋ மன்னார் தீவைப் பிறப்பிடமாகக் கொண்டவர்கள்.

❋ இராணுவக் கட்டுப்பாடற்ற (பிரதான நிலப்பரப்பு) மன்னார் மாவட்டத்தினர்.

❋ வெளி மாவட்ட அகதிகள்

இந்த அகதி முகாமில் பாதுகாப்பை UNHCR கவனிக்க நிர்வாகத்தை கச்சேரி நடத்துகின்றது. இங்கு 718 குடும்பங்களைச் சேர்ந்த 2411 பேர் உள்ளனர். இதில் இந்தியாவில் இருந்து திரும்பி வந்தவர்கள் 450 குடும்பத்தினர். இங்கு பாடசாலைக்குச் செல்லும் மாணவர்கள் 550 பேர் உள்ளனர்.

மன்னார் தீவைப் பிறப்பிடமாக கொண்ட அகதிகளுடன் உரையாடிய போது.

''எங்களை அரசாங்கம் சொந்த இடங்களில் சென்று குடியேறும்படி கூறுகின்றது. அதாலை, எங்களுக்கு கொடுக்கும். நிவாரண உணவுப் பொருட்களைக் கூட நிறுத்தும்படி அறிவித்துள்ளது. நாங்க செய்யிற தொழில், ஆடு, மாடுகளை வளர்க்கிறதும் காட்டில் மரம் வெட்டிறதும், மீன் பிடிக்கிறதும்.''

''எங்கட ஆடு மாடுகளெல்லாம், காட்டில கட்டாக்காலிகளாக திரியிதுகள். யாரும் உரிமை கோரமுடியாமல் உள்ளது; காட்டுக்குப் போய் மரம் வெட்டவோ, ஆடு, மாடுகளை மேய்க்கவோ பயம். பாதுகாப்பு இல்லை.''

இன்னுமொருவர் முந்திக் கொண்டு சொன்னார்.

''எங்கள் சொந்த இடங்களில் போய் மீளக் குடியேறட்டாம். எங்களால முடியாது. எங்களுக்கு விருப்பமும் இல்லை. நாங்க இருக்கிற இடம் எல்லாம் ஆமியின்ட கட்டுப்பாட்டில இருக்குது. ரோட்டில அடிக்கடி மாறி, மாறி பொலிஸினுடையதோ, ஆமியினுடையதோ முகாம்கள் உள்ளன. அடிக்கடி பலரை ஆமிக்காரன்கள் கொண்டு போறாங்கள் விசாரணைக்காக. UNHCR இன்ட பாதுகாப்பில இருக்கிற இந்த அகதி முகாமில இருக்கும் போதே பலர் காணாமல் போய் உள்ளனர். நாங்க எப்படி போய் எங்கட இடத்தில வாழுறது''

''எங்கட வீடுகளுக்கு அருகில் முகாம்கள் இருக்கின்றன. புலியோட சண்டை ஏற்பட்டா, நாமதான் இடையில அகப்பட வேணும்''

''எங்கட வீட்டில பொலிஸ் இருக்குது. பக்கத்துல இருந்த பல வீடுகளை பொலிஸும், இராணுவமும், அழிச்சுப் போட்டான்கள். இந்த நிலைமையில் எங்கட உயிருக்கு என்ன பாதுகாப்புங்க''

''பெயர்களை பதிவு செய்து கொண்டோம்.''

''எங்கட சொந்தக்காரங்க கடிதம் போட்டாங்க. இஞ்ச வரலாம் எண்டு எங்களுக்கும் வர ஆசை இருந்திச்சு. அப்பத்தான் UNHCRயும் அறிவித்தல் ஒன்று விட்டது. சொந்த இடங்களுக்கு திரும்பிப் போகிறவர்களுக்கு சகல உதவியும் செய்து தரப்படும் என்று எங்களுக்கு இது மேலும் நம்பிக்கை ஊட்டியது. ஒழுங்கு செய்யப்பட்ட கப்பல்களில் வந்து சேர்ந்தோம். கப்பல் சேவை ஒவ்வொரு நாளும் நடைபெறுமானால், அங்குள்ளவர்கள், எல்லாரும் வந்து சேர்ந்து விடுவார்கள். எல்லோருக்கும் சொந்த இடங்களுக்கு திரும்ப விருப்பம். ஆனா, உண்மை நிலையை தெரியாம வரப்பயப்பிடுகிறார்கள்.''

மன்னார் மாவட்டத்தின் பெரிய நிலப்பரப்பை சொந்த ஊராகக் கொண்ட ஒருவர்.

''நமக்கு எந்த விதமான நிவாரணப்



ஏக்கம்



-இழப்பு-



எதிர்பார்க்கை



வீரன் வள்ளியம்மா..

பணமும் வேண்டாம். முதலில எம்மைக் கொண்டு போய் அக்கரையில, எமது சொந்த இடத்தில விடுங்கோ'' என்றார். ''அங்கே போனா, எங்கட தொழில்களை, சுதந்திரமா செய்து கொண்டிருக்கலாம்.'' என்று மேலும் கூறினர்.

ஒரு கிழவர், தன் பங்கிற்கு.

''எங்கட பொடியன்களை கிடாய்கள் போல வளர்த்துள்ளோம். இனிக் கொண்டு போய், ஆமிக்காரனிட்ட கொடுத்து சிறைகளில பலியிட முடியாது'' என்று கூறினார்.

அரசாங்கம் இராணுவம் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசத்தில், மக்கள் விரும்பாத போதும் சென்று குடியேறக் கூறுகிறது. ஆனால் இராணுவக் கட்டுப்பாடில்லாத, பெருநிலப்பரப்பு பிரதேச மக்கள் தாம் தமது சொந்த இடங்களில் சென்று வாழ விரும்பிய போதும், அரசாங்கம் அனுப்பத் தயங்குகின்றது.

மன்னார் தீவிலுள்ள நடுக்குடாவைச் சேர்ந்த ஒருவர்,

ஒரு வாலிபனது குரல் உரமாக வந்தது. ''மின்சாரம் இல்லை. கடல் வலயத்தடைச்சட்டம் போட்டிருக்காங்க, போக்குவரத்துச் சேவை சீரழிஞ்சு போய் இருக்கு. இதனால, எங்கட தொழில்களை செய்ய முடியாம இருக்கிறோம். கூலித் தொழிலும் செய்யேலாது. கைத் தொழிலும் செய்ய முடியாது. இந்தக் கட்டுப்பாடுகளையும், தடைகளையும் அரசாங்கமும் இராணுவமும் நீக்குமாயின் எங்க சொந்த இடங்களில, எங்கட சொந்த வீட்டில போய் வாழ தயாராகவே உள்ளோம். எங்களுக்கும் அது தான் விருப்பம்''.


இன்னுமொருவர் குறுக்கிட்டு,

''இஞ்ச பாருங்க, எங்களுக்கு ஒரு மாசத்தில, ஒரு ஆளுக்கு 315 ரூபா, இரண்டு பேரண்டா 630 ரூபா, மூன்று பேரண்டா 840 ரூபா, ஐந்து பேரெண்டா 1200 ரூபா தான் நிவாரணப் பணம் தாராங்க. ஐந்து பேருக்கு மேலே பத்துப் பேர் இருந்தாலும் 1200 ரூபா தாராங்க. எப்படியுங்க வாழுறது. அதுமட்டுமில்ல, 90ம் ஆண்டுல இருந்தே இப்படித்தான் தாராங்க. ஆனா, இண்டைக்கு சாமான்களின்ட விலை, நெருப்பு விலையா ஏறிக் கொண்டு போகிறது. நிவாரணப் பணம் மட்டும் அப்படியே இருக்குது மாறாமல்''

இந்தியாவில் இருந்து வந்த அகதிகள் கூறிய பொழுது.

''தமிழ்நாட்டு, மண்டப முகாமில மூன்றரை வருடங்களாக இருந்தோம். கொடுத்த நிவாரணமோ காணாது. தொழில் செய்ய முடியாது. கட்டுப்பாடுகளும், கண்ட கண்ட பிரச்சினைகளும் அதனால எங்கட நாட்டுக்கே திரும்பி வருவதற்காக, நாங்க பல பேர் இரண்டு வருடங்களுக்கு முந்தியே

— 10



# ...பானவர்கள்



எமக்குப் பின்னால் 28 வயதுடைய ஹென்றி அலோசியஸ் என்பவர் வந்து கொண்டிருந்தார். அவருக்குப் பின்னாலும் எம்மவர் சிலர் வந்து கொண்டிருந்தனர். வளைவையும், சோதனைச் சாவடிகளையும் எல்லோரும் தாண்டி வந்தோம். ஆனால் எமக்குப் பின்னால் வந்தவரும் அவர்களுக்கு முன்னால் வந்தவருமான அலோசியஸைக் காணவில்லை. திடீரென அவர் எப்படிக் காணாமல் போனார்? இன்றுவரை அவர் தொடர்பான எந்தத்தகவலும் இல்லை.

## கையொப்பமிடச் சென்றவர்களைக் காணவில்லை

16.11.90 அன்று, 14 பேரை சந்தேகத்தின் பேரில் இராணுவத்தினர் அகதி முகாமில் இருந்து கைது செய்து கொண்டு சென்றனர். இவர்களுள் ஆறுபேர் 8.8.92 இல் விடுதலை செய்யப்பட்டனர். மிகுதி எட்டுப் பேரும் காணாமல் போய்விட்டனர். விடுதலை செய்யப்பட்டவர்களில் இருவர் ஒவ்வொரு நாளும் சென்று பொலிஸ் நிலையத்தில் கையொப்பம் இட வேண்டும். இப்படிக் கையொப்பமிடச் சென்ற ஒரு நாளில் சித்திலிங்கம், புவனேஸ்வரன் ஆகிய இருவரும் காணாமல் போய்விட்டனர். இவர்கள் இருவரும் முன்பு பூசா முகாமில் இரண்டு வருடத்தைக் கழித்து விடுதலையானவர்கள்.

காணாமல் போன எட்டுப்பேரினதும் விபரங்கள்

1.சந்தாம் பிள்ளை யேசுதாஸ்(28)
2.சோலையப்பா மகாலிங்கம் (22)
3.செபஸ்தியாம்பிள்ளை விஜயராசா (28)
4.கோவிந்தன் ரங்கன் (25)
5.சிவசம்ப ரவீந்திரன் (16)
6.ச.சிவா
8.கதிரவேலுப்பிள்ளை நாகராசா (36)

19.9.93ம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரண்டு மணியளவில் 27 வயதுடைய பிரதீபன் என்பவர் தனது வீட்டில் இருந்து புறப்பட்டுள்ளார். மன்னார் நகரில் ஐந்து மணி வரை நண்பர்கள் கண்டதாக கூறுகின்றனர்.. அதன்பின் இவரைக் காணவில்லை. இரண்டு பிள்ளைகளுக்கு தந்தையான இவர், தபாலகத்தில் ஊழியராக வேலை செய்தவர்.

நண்பரிடம் விசாரித்த போது புலனாய்வுத் துறையினர் கூட்டிச் சென்றதாகக் கூறினர். ஆனால், இராணுவத்தினரும், பொலிசாரும் தாம் பிடிக்கவில்லை யென தொடர்ந்தும் கூறுகின்றனர்.

இதேபோல 7.3.93 அன்று நகரத்துக்குச் சென்ற E.P ராஜா என்பவர் காணாமல் போயுள்ளார். இரண்டு பிள்ளைகளின் தந்தையான, 30 வயதுடைய இவரைத் தேடும் முயற்சியில் உறவினர்கள் தொடர்ந்தும் ஈடுபடுகின்றனர்.



...லாம்.....




கணவனைத் தேடி.....

...பரம்பல் நிலை

| குடும்பங்கள் | நபர்கள் |
|---|---|
| 718 | 2411 |
| 338 | 1067 |
| 1501 | 5060 |
| | |
| 6411 | 25,674 |
| 1013 | 4171 |
| 4016 | 16,861 |
| 2414 | 9212 |

நன்றி - நூலகத்திட்டம்





இந்தியாவிலிருந்து வந்த பேசாலை முகாம் அகதிகள்



செயலிழந்து போன கையுடன்... மூஸா

## இந்தியாவில் இருந்து வந்து மீளக்குடியேறியுள்ள அகதிகள் ஒரு நேர்முகம்

40 வயதுடைய் வீரன் வள்ளியம்மா என்ற பெண் இப்படிக் கூறுகின்றார்;

''நாம் இங்கிருந்து எட்டாம் மாதம் 90ம் ஆண்டு இந்தியாவுக்குட் போனோம். 94ம் ஆண்டு மார்ச் முதலாம் திகதி வந்த இரண்டாவது கப்பலில் திரும்பி வந்தோம். எனது கணவர் முன்பே இறந்துவிட்டார். எனக்கு ஆறு பிள்ளைகள். நாலு பெண்பிள்ளைகளும், இரண்டு ஆண்பிள்ளைகளும் உள்ளனர். இவர்களை எப்படியும் படிக்க வைக்க வேண்டும் என்பதே எனது ஆசை. ஆனால் அதற்கு என்னிடம் வசதி இல்லை. சொந்தமாக தொழிலும் இல்லை. கூலி வேலை செய்கிறேன். நாம் கப்பலை விட்டு இறங்கின போது, ஆயிரம் ரூபா தந்தார்கள். ஒரு மாதத்தில் இரண்டு தரம், நிவாரணப் பொருட்கள் தருவார்கள். அது எத்தற்குக் காணும்? நாங்கள் சொந்த இடத்தில் குடியேறி விட்டோம். அதற்கான பணம் இன்னும் கிடைக்கவில்லை. இராணுவ சுற்றிவளைப்பின் போது எம்மைப் பிடிக்கிறார்கள். பொலிஸ் ''பாஸ்'' இல்லை. இந்தியாவில் இருந்து வந்ததற்கான பதிவுப் பத்திரம் மட்டுமே இருக்கிறது. பொலிஸில் பதிவதற்கான விபரத்தையெல்லாம் கொடுத்திருக்கிறோம். ஆனால் இன்னும் அவர்கள் பதிந்து தரவில்லை.

முசா என்ற முஸ்லீம் அகதி 45 வயது தொழிலின்றி இருக்கும் இவர் இப்படிக் கூறினார்;

''90இல் யுத்தம் ஆரம்பமாகிய போது ஷெல் அடிபட்டதால் ஒரு கையில் தையல் போட்டார்கள். இப்போது அந்தக் கையால் ஒரு வேலையும் செய்ய முடியாது. எனக்கு ஐந்து பெண்பிள்ளைகள் இருக்கிறார்கள்.'' பெருமூச் சொன்றை விடுகிறார்! ''அதுதான் எனக்கு என்ன செய்வதென்றெ தெரியவில்லை. பெரிய கஷ்டம் தான். எப்படி வளர்க்கப் போகிறேன்? தொழில் இல்லை. கடையாவது நடத்தலாமென்றால் முதல் இல்லை. சும்மா இருக்கிறேன். பிள்ளைகளுக்கு உடுக்க உடுப்பு வாங்கிக் கொடுக்கக்கூட முடியாமல் இருக்கிறேன். இந்நிலையில் எப்படிப் படிக்க அனுப்ப முடியும்?

நானாட்டானைச் சொந்த இடமாகக் கொண்ட நஜிமா பீபி (31வயது) கூறியதாவது.

''என்னுடைய கணவா கூலி வேலை செய்கிறார். புலிகள் துரத்திவிடும் பொழுது எருக்கலம்பிட்டியில் இருந்தோம். எனக்கு இரண்டு ஆண் பிள்ளைகளும், ஒரு பெண் பிள்ளையும் இருக்கிறார்கள். முஸ்லீம்கள் எல்லாம் பயத்தினால் வெளியேறினோம். புலிகள் துரத்தாமல் விட்டிருந்தார்கள் என்றால் இங்கேயே இருந்திருப்போம். எங்களுக்கு இங்கே இருக்கத்தான் விருப்பம். புலிகள் பிழைவிட்டார்கள். ''முஸ்லீம்கள் இந்த இடத்தில இருக்கக்கூடாது. எழும்ப வேண்டும் என்றார்கள்.''

''நாங்கள் ஒரு பிழையும் விடவில்லையே'' என்றோம்.

''நீங்கள் எழும்பாவிட்டால் சுடுவோம்'' என்றார்கள்.

39 வயதான திருமதி. நிக்கலஸ் கூறிய பொழுது:

''வியாபாரம் செய்கிறோம். மூன்று ஆண் பிள்ளைகள். அவர்கள் படிக்கிறார்கள். கையில் காசு இல்லை. பிரச்சினையின் போது எருக்கலம் பிட்டியிலே போய் இருந்தோம். புலிகள் முஸ்லீம்களை வெளியேற்றியதால் நாம் தனித்து விடப்பட்டோம். ஒரு நாள் வீட்டை விட்டு வெளியேற முடியாத படி ஷெல் அடியும் பொம்மர் அடியும். அப்பா ஷெல்லடியில் இறந்தார். ராஜதுரை பாலசிங்கம் என்ற எனது தம்பியை புலிகள் சுட்டுக் கொன்றனர். இன்னொரு தம்பியை இராணுவம் சுட்டுக் கொன்றது. ஒரு தம்பியும், தங்கச்சியும் பைத்தியம் பிடித்து அலைகிறார்கள். நீங்கள் அடுத்த முறை வரும் பொழுது, சில நேரம் நான் மட்டு



நாகூர் ஆலிம்

மில்லை, நாங்க எல்லோருமே பைத்தியமா ஆனாலும் ஆகிவிடுவோம்.

நாம் மன்னாரில் கழித்த கடைசி இரவில் துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் கேட்டன. ஏதோ பிரச்சினை என நினைத்தவாறு படுத்துவிட்டோம். காலை எழும்பியபோது, ''மனநோயாளியான'' வீதியில் திரியும் ஒரு மனிதன் இரவு எட்டு மணியளவில் வீதியில் சுற்றியதால் ஆமிக்காரர்களால் சுட்டுக் கொல்லப்பட்டிருந்தார். இந்த சம்பவம் நடந்தது வியாழக்கிழமை இரவு. நாம், வெள்ளிக்கிழமை மாலை கொழும்புக்கு வரும்போது மாலை ஆறுமணி வானொலிச் செய்தியில் இப்படி ஒலிபரப்பாகிக் கொண்டிருந்தது. ''நேற்று இரவு மன்னார் நகரில் பயங்கரவாதி ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார். இவரிடமிருந்து பல இராணுவ உபகரணங்கள் கைப்பற்றப்பட்டன.

''எங்கட இடம் இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசமாகும். ஊரின் நடுவில் பொலிஸ் நிலையத்தை அமைத்துள்ளனர். வீடுகளை இடித்துள்ளனர். பள்ளிக்கூடம் இல்லை. அவசரத்துக்கு மூன்றரை மைல் பயணம் செய்தே பேசாலை வைத்தியசாலைக்குப் போக வேண்டும். எமது குமர்ப் பிள்ளைகளுக்கும், பொடியன்களுக்கும் பாதுகாப்பு யார் தருவார். எங்கட சொந்த இடத்துக்குச் செல்வதற்கு எமக்கு ஆட்சேபனையில்ல. ஆனா இந்த நிலைமையில, எம்மால் சென்று வாழ முடியாது.''

இன்னுமொருவர் கூறும் பொழுது. இவர் மீளக்குடியேறி இருப்பவர்,

''வீட்டை விட்டு வெளியே செல்லும் பொழுது, திரும்பி வருவோமா, குடும்பத்துடன் மீண்டும் சேருவோமா, என்ற சந்தேகமே எம் மனதில் நிறைந்திருக்கிறது. மீன் பிடிக்க இரவில் போக முடியாது. பேசாலையிலும் மருந்து தட்டுப்பாடு, சுகாதார வசதி இல்லை. போக்குவரத்துப் பிரச்சினை, விலைவாசி அதிகம். நாம் எப்படித் திரும்பிச் செல்வது''

மன்னார் தீவில் பெரியகடையில் மீளக் குடியேறி வசிப்பவர் ஒருவர் கூறிய பொழுது

''அகதி நிவாரணமாக சீனி, மாவு, அரிசி போன்ற பொருட்களை மட்டுமே தருகின்றனர். மண்ணெண்ணை போன்ற மற்ற ஜீவனோபாய பொருட்களை வாங்க வேண்டுமானால், தரும் பொருட்களை விற்றே வாங்க வேண்டியுள்ளது. ஏனென்டா, எங்களிட்ட பணம் இல்லை. நிவாரணப் பொருட்களை விற்றால் சாப்பிட ஒன்றுமிருக்காது. விற்காவிட்டால் பணத்திற்கு எங்கே போவது பணம் இல்லையென்றால் வேறு பொருட்களை வாங்க முடியாதே''

இவர் தொடர்ந்தும் கூறியதாவது

''கப்பலில் இருந்து இறங்கிய பொழுது 1000ரூபா தந்தார்கள். எமது சொந்த இடத்துக்குப் போனால் 2000 ரூபா தருவதாகக் கூறினார். வீட்டில் இருந்தவாறே சுயதொழில் முயற்சிகளில் ஈடுபட 4000 ரூபா தருவதாக கூறினர். ஆனால் எங்களுக்கு கடைசியாக கூறிய இரு நிவாரணமும் இன்னும் தரவில்லை. வேறு மீளக்குடியேறியவர்களுக்கு கொடுத்ததாகவும் தெரியவில்லை.''

## முஸ்லீம்களும் அவர்கள் வாழ்வும்



எதிர்காலமும் இருண்டதா..?

மன்னார் தீவிலுள்ள, டதுக்குடியிருட்ட கிராமத்திலுள்ள முஸ்லீம்கள் சிலர் 92ம் ஆண்டு மீளவந்து தமது சொந்த இடங்களில் குடியேறியுள்ளனர்.

இந்த ஊரைச் சேர்ந்த ராசூர் தாவுது லெட்டை ஆலிம் என்டவா, தன் அனுபவத்தை எம்முடன் டகிர்ந்து கொண்டார்.

''90ம் ஆண்டு 7ம் மாதம் எம்மை, எமது சொந்த இடங்களில் இருந்து, 28.10.90க்கு முன்பு வெளியேறும்படி புலிகள் கூறினர். மாற்று வழிகள் ஏதேனும் உண்டா, என யோசிக்க தவணை கேட்டோம். தரவில்லை. எமது வீடுகளை எல்லாம் உடைத்தனர். வீட்டுக் கற்களை தமக்கு டங்கர் கட்ட எடுத்துச் சென்றனர். எமது உடைமைகளை, எமது கண் முன்னாலேயே எடுத்துச் சென்றனர். நாங்கள் விரட்டி விடப்பட்டோம். உடுத்த உடுப்புடன் ஊரை விட்டுப் போனோம்.

'ஏன் போகச் சொல்கின்றீர்கள்?' என்று கேட்டோம். ''எம்முடன் ஒன்றும் கதைக்க வேண்டாம் நீங்கள் உயிர்தப்பிச் செல்லுங்கள். போகாவிட்டால் சுடுவோம்'' எனக் கூறினார்கள் என்றார்.

'சில நேரம் முஸ்லீம்களை எதிர்த்தால், தனிநாடு கிடைக்கும் என புலிகள் நினைக்கின்றனரோ என்னவோ' என்ற அபிப்பிராயம் இந்த மக்களிடம் காணப்படுகிறது.

இந்த ஊரில் 107 முஸ்லீம் குடும்பங்கள் இருந்தன. எல்லோரும் வெளியேற்றப்பட்டுள்ளார்கள். 25 குடும்பங்கள் மட்டுமே திரும்பி வந்துள்ளன. மிகுதிப் பேர் இந்தியாவிலும் கற்பிட்டியிலும் உள்ள முகாம்களில் இருக்கின்றனர்.

''எங்களுக்கு இப்பொழுது பொலிஸும் இராணுவமும் பாதுகாப்பு தருகின்றது. இப்பவெல்லாம் புலிகள் எம்மை ஒன்றும் செய்வதில்லை. இருந்தாலும் எந்த நேரம் என்ன நடக்குமோ என்ற பயம் மட்டும் உள்ளது.

சில பிரச்சினைகள் காரணமாக மன்னார் தீவில் இருந்து இரண்டு முஸ்லீம்களை புலிகள் கடத்திச் சென்றுள்ளனர். ஒருவர் மூன்று பிள்ளைகளின் தந்தையான எ.எம்.அன்வர். இவர் பின்னர் விடுதலை செய்யப்பட்டுள்ளார். ஆனால் பத்துப் பிள்ளைகளின் தந்தையான எம்.எ.சி. அபிமுகமட் மார்ச் 13ம் திகதி கடத்திச் செல்லப்பட்டவர், இன்னும் விடுவிக்கப்படவில்லை.

இவர்களது பிரதான தொழில் கடற்தொழில் சில நாளைக்கு 10 ரூபா வருமானம் கிடைக்கும். சிலநாளைக்கு 20, 30, 50 ரூபா என்றும் கிடைக்கும். ஒன்றுமே கிடைக்காமல் விடும் நாட்களும் உண்டு. இப்படி எப்படி வாழ்வது? என்கிறார் இவர்களில் ஒரு முதியவர்.

இன்னுமொருவர் கூறினார்:

''இப்பொழுது நடப்பதெல்லாம் அர்த்தமில்லாதவைகளே. அம்பாறை, மட்டக்களப்பு முஸ்லீம்கள் பிழை விட்டிருக்கலாம். அதற்காக நாங்கள் விரட்டப்பட வேணுமா? அம்பாறைப் புலிகள், முஸ்லீம்களை வெட்டிக் கொலை செய்யும் படி அறிவித்ததாக இங்குள்ள புலிகள் கூறினர். இவர்கள் அப்படிச் செய்வார்களா, செய்யமாட்டார்களா என்பது எம்மால் முடிவு செய்ய இயலாதிருந்தது. ஏனென்றால் அது நாட்டு நிலைமையிலேயே தங்கியிருக்கிறது. நாம் வடக்கு கிழக்கு மக்கள் இங்குள்ள தமிழர்களுடன் ஒற்றுமையாக வாழ்வதையே விரும்புகின்றோம். எப்படி இருந்த போதும், எமது உடமைகளைப் பறித்தது, கொள்ளையடித்தது தவறானதே.

### எருக்கலம்பிட்டி கிராம முஸ்லீம்கள்

இங்கு முஸ்லீம்கள் பெரும்பான்மையாக வாழ்ந்தனர். இங்குள்ள புலிகளை வளர்த்து விட்டவர்களும் இவர்கள் தான். 85ம் ஆண்டு, இராணுவம் தேடுதல் நடத்தி அட்டகாசம் செய்த போது கூட, புலிகளைப் பாதுகாத்தும் இருக்கிறார்கள். ஆயுதங்களைக் கூட கடத்த உதவியுள்ளார்கள். 90ம் ஆண்டு ஆரம்பத்தில் மாத்தையாவுக்கும், கரிகாலனுக்கும் இரண்டு மைல் நீளமான ஊர்வலம் நடத்தி வரவேற்றனர். சில சமயங்களில், புலிகளுக்குத் தொப்பிகளைப் போட்டு, முஸ்லீம்கள் போல மாற்றி, இராணுவத்திடம் இருந்து காப்பாற்றியவர்கள்.

இதனால் இராணுவத்தின் துன்புறுத்தல்களுக்கும் உள்ளானவர்கள் இந்த முஸ்லீம்கள். இப்படியெல்லாம் செய்த தங்களை ஏன் புலிகள் விரட்டினார்கள் என்று தான தம்மால் புரிந்து கொள்ள முடியவில்லை என்ற ஆதங்கம் எம்முடன் உரையாடியவர்களிடமும் தமிழ் மக்களிடமும் இருந்ததை அவதானிக்க முடிந்தது.

மன்னார் முஸ்லீம்கள் தொடர்பாக புதிய நிலைப்பாடுகள், புலிகளுக்கு உள்ளதாக உத்தியோக பூர்வமற்ற வட்டாரங்களில் இருந்து அறியக் கிடைத்தது. ''மன்னார் முஸ்லீம்கள் திரும்பி வருவதை விரும்புகின்றோம். ஆனால் அதை வெளிப்படையாக கூற முடியாத நிலையில் உள்ளோம்'' என மன்னார் மாவட்ட புலிகள் அறிவித்துள்ளதாக தெரியவருகிறது.

புலிகள் தாம் செய்ததைப் பிழை என உணர்ந்தும், அதை ஏற்றுக் கொள்ள அவர்களுடைய தன்மானம் விடவில்லைப் போலும். புலிகள் உத்தியோக பூர்வமாக அறிவிக்காதவரை, இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசங்களில் சென்று வாழ்வது கேள்விக் குறியானதே. இப்பொழுது, இரண்டு வருடங்களாக முஸ்லீம்களுக்கெதிராக புலிகள் ஒன்றும் செய்யவில்லை. இனியும் செய்வார்களா அல்லது செய்ய மாட்டார்களா என்று எதையும் உறுதியாக கூற முடியாத நிலையில் முஸ்லீம்கள் வாழ்கின்றனர் என்றார் ஒரு இளைஞர்.

மன்னாரில் நாம் சந்தித்த இராணுவத்திலிருந்து ஒருவர்.



இராணுவமாகிய எங்களாலேயே, **மாலை** ஆறு மணிக்குப் பிறகு. வீதியில் இறங்க முடியாமல் இருக்கின்றது. **பொலிஸார்** எப்படி **வீதியில்** இறங்கிச் சிவில் நிர்வாகத்தை நடை**முறைப்படுத்த** முடியும்? டி.பி கொழும்பில் இருந்து வாய்க்கு வந்தபடி **கதைப்பார்.** இங்கு சண்டையில் ஈடுபடுவது நாங்கள். அவர்கள் இங்கு **வந்து பார்த்தால்**தான் இங்குள்ள நிலைமை புரியும்.

நன்றி - நூலகத்திட்டம்





# இனி நமக்கென்ன?

மனெ செமிலத்தும்மா! எப்பெ மனெவந்தெ? புள்ளெடெ காசிமில்லே கடதாசியுமில்லெண்டு உம்மா தல நோம்பண்டுச் செல்லிச்சி.

என்னெ மனெ செய்ரெ? நம்மெடெ வறுமையிலெ குமருகளெல்லாம் வெளிநாட்டிற்குத் தான் போகுதுகள்.

கிளிக்குஞ்சுகள் போலெ பொண்ணுகள். கண் காணாத தேசத்திலெ என்னென்னெ கஸிடங்களெ காணுதுகளோ?

ஆருக்குத் தெரியும்?

அந்தெ நாளயிலெ எங்களுக்கு ஈன இரிக்கிர புளியந்தீவுக்குப் போகத் தெரியாது மனெ.

வாழச்சேனயிலெ பங்கிளாவடித்துறையிலெ அதான் எங்கெடெ தூரப் பயணம்.

அதுக்கும் எவ்வளவு பயந்து பயந்து போவம்.

பெற்றல் செட்டிலெ அல்வெட்டு முதலாளிர கடயில சிங்களச் சாதிகள். உடம்பெல்லாம் பய்யாந்து பெய்த்திரும்.

இண்டெய்க்கி நம்மெடெ பொம்புள்ளெகளும் சிங்களம் பேசத் துடங்கிட்டாளுகள். மாறுசாதியாப் பெய்த்தாளுகெள்!

இதெல்லாம் கடசி காலத்திரெ கோலமனெ.

என்னெமனெ? எத்தினெ பொட்டி கொண்டந்தாய்? பெருநாளைக்கு எனைக்கொரு வெள்ளப்புடவெ தந்திரு. உண்டெ பேரச் செல்லி உடுக்கன்.

என்டெ சீதேவி மகெளெ நம்மெடெ பாத்து முத்திர மகளும் வெளிநாட்டிலரிந்து வந்திரிந்தாள், நானும் போய் பாத்தெண்டி மகளெ.

அந்தெப்புள்ளெய்க்கி இப்பெ தமுள் பேசத் தெரியாதாமடி மனெ.

ஆரோ இந்தியாக்காரப் பொடியனோடெ தொடுப்பாம்! அவள் வந்தே கையோடெ அந்தெப் பொடியனும் வந்திட்டான்.

ஏதோ குமரு கரசேந்திட்டு....

அந்தெ நாளயிலெ உம்மாவாப்பா பேசித்தான் கலியாணம் காச்சியெல்லாம்....

இப்பெ அவரவர்ரெ சோடியெ அவரவரெ தேடிக்கிறாங்கெ....

ல்லாம் தலெ கீழாப் பெய்த்து.

அறவிகளெல்லாம் பொல்லாத கெட்டெட்வெனுகளாமெ மனெ. ஈன இரக்கமில்லாத் சாதிகளாம்.

மனிசருக்கிட்டெரிந்து அல்லா ஈவிரக்கத்தெ எடுத்துப் போட்டான் மனெ.

இல்லாட்டி இண்டெய்க்கி இந்தெக்கேடெல்லாம் வராது.

இந்தெ மழையப்பாரு நாலுமாசமாப்பேயிது. அல்லாட கோவப் பார்வெயிலெ பேயிது. அக்கரபத்திலெ வெள்ளாமப்புல்லெல்லாம் அழுகிப் பெய்த்தாம்.

கோழிக்காலயிலெல்லாம் வெள்ளமேறி கோழியெல்லாம் பிரண்டிட்டாங்கெ.

அந்தெ நாளயில நூறேக்கர் வயல் செஞ்செ போடிமாரெல்லாம் இண்டெய்க்கி நூறு கோழி வளக்காங்கெ....

குழப்பந்துடங்கினத்துக்குப் புறகு எல்லாம் தலெ கீழாப்போச்சி. ஆருக்கிட்டெச் செல்லுவம்.

புள்ளே! செமிலத்தும்மா பெய்த்தியாமனெ? என்னெ அவிசரம். கொஞ்செம் இரியெமனெ கதைச் சிட்டிரிப்பெம்!

மெய்தானா மனெ? இந்தெ இலெக்கிஷனோடெ நம்மெடெ ஊரெல்லாம் நல்லா வந்திருமாம்....

வோட்டுப் போடிறவங்களுக்கெல்லாம் மாவலிலெ காணியும் குடுத்து கல்லூடும் கட்டிக் குடுக்கிறயாமெ....

அதுமட்டுமில்லெ பொடிச்சி. எல்லாக் குடும்பத்துக்கும் சனசக்தியும் குடுக்கறயாம் புள்ளெ....

நேத்து மந்திரியார்ரு வந்தெ கூட்டித்திலெ சென்னயாம். நம்மெடெ பொண்டுகளெல்லாம் அதக்கேட்டு குலவெ போட்டு வெடிலும் கொளுத்தினயாம்....

தவண்டு தவண்டு போயெண்டாலும் நானும் ஒரு வோட்டுப் போடத்தாண்டி மனெவேணும்....

கடசி காலத்திலெண்டாலும் ஒரு கல்லூட்டிலெ கிடந்து சீவன் போகணும்.....

இந்தெ இலெக்கிஷனோடெ நம்மெட ஊரெல்லாம் நல்லா வந்திருமாம்....குழப்பமெல்லாம் அழிந்திருமாம்.... புலிகளெல்லாம் அழிஞ்சிருமாம்.....

குழப்பம் அமந்த கையோடெ -உச்சடிக்கல் அவுலியாக்கள்ற கபுறடிக்கு கால் நடையிலெண்டாலும் போய் வரணும் மகெளெ.....

அந்தெ நாதாக்கன்ற கபுறடியைக் கூட்டி நார்சாவும் குடுத்து -மணக்குச்சியும் கொளுத்தி வரணும்.....

கபுறடிக்குப் பக்கத்திலெதானெ போடியார்ரெ எருமமாட்டுப்பட்டி. போன குழப்பத்திலெ பட்டியோடெ சாச்சி ஆரோ ஏத்திப் போட்டானுகளாமெ.

அவனுகளும் இலெக்கிஷன் கேக்கானுகளாமே.

அந்தெ நாளயில போடியார்ரு இரிக்கக் கொள்ள

**- எஸ்.எல்.எம். ஹனீபா -**

முதியான் கண்டப் பால் வாங்கி... நோம்பு முப்பதுக்கும் வடிதயிரும் வாழப்பழமும்தான்....

எல்லா தரமட்டமாப்பெய்த்து.

புள்ளெ! செமிலத்தும்மா! இந்தெ இலக்கிஷனிலெ பதிமூணா நம்பருக்கும் பானைக்கும் போட்டா நம்மெடெ தரித்திரமெல்லாம் நம்மெள உட்டு கழிஞ்சிரும் மனெ. மெய்தானாமனெ? இலக்ஷகினுக்கு முந்தி எல்லாருக்கும் நாலாயிரம் குடுக்கச் செல்லி வந்திரிக்காம்!

போன இலெக்கிஷனிலயும் சொன்னானுகள் தான். அரசாங்கெமிண்டாபோலெ என்னெ செய்வானுகள். நம்மள ஆள்ற ராசாக்கள். அவனுகளுக்கும் ஆயிரம் சிலவு சித்தாயம்....சோலிகள்...

நாமெல்லாம் வசிலெண்டாலும் தொங்கிட்டுப்போயிருவெம். அவனுகெள் பறவக்கப்பெல்லான் போகணும்.....

படைச்செ றப்பு அவுனுகள்றெ தலயிலெ மையாலெ எழுதி நம்மெடெ தலயில கரியாலெ பூசிப் போட்டான்....

எல்லாத்திக்குமனெ தல நசீபு வேணும்.

இந்தெ முற எப்பிடியும் நாலாயிரத்தெக் குடுப்பான்கள் போலான் விளங்கிது.

எனைக்கி 'காசி கிட்டினா என்டெ சீதேவி விதானைக்கி நான் ஆயிரத்தெ குடுத்திருவென்.

சும்மா வாற காசிலெ விதானைக்கி ஆயிரத்தெக் குடுத்தா குறைஞ்சா பெய்த்திரும்? வெள்ள நிவாரணத்திலெயும் நா்னும் செய்னம்பும் ஆளுக்கு மூணு கொத்தரிசி குடுத்தெனாங்கெ மனெ. விதானெண்டாப்லெ வெள்ளமில்லையா? கூதலில்லாயா?

அந்தநாளயிலெ விதான மாரிண்டா என்னெயெல்லாம் செய்யணும்?

விதானத்தம்பி எனக்கிட்டெ வந்து யாஸீன் கிதாபுல சத்தியம் வாங்கிட்டுப் பெய்த்தாரு மனெ. பதிமூணாம் நம்பருக்கு போடச் சொல்லி....

அல்லாஹ்டெ கலத்திலெ சத்தியம் பண்ணினா மாறுபாடு செய்யப்படாது புள்ளே.

பதிமூணாம் நம்பருக்கு ஓட்டுப்போட்டா நம்மெடெ நாத்தெ ஒழுங்கெயெல்லாம் தார்ரோட்டாப் பெய்த்திருமாம்மனெ.

இனிவாசல்லெ வெள்ளம் போடாடி புள்ளெ.

கோழிக் காலயெல்லாம் வெள்ளத்திலெ மூழாது. எல்லா றோட்டுக்கும் கல்லால வாய்க்கால் கட்டி ஆத்துக்கு தண்ணி பெய்த்திரும் மனெ.

நம்மெடெ சந்தயயும் மூணு தட்டில கட்டப் போறாங்களாம்.

எம்பி செல்லிட்டாராம் மனெ. அவரு சென்னாச் சென்னதுதான்.

எல்லா முதலாளிமாரும் எம்பிர பக்கம்தான் புள்ளே....

நாமளும் அங்காலெ போனாத்தான் நார்ஸா சோறிண்டாலும் கிட்டும்.

உனக்குத் தெரியுமா மனெ? நம்மெடெ ஓடாவியார்ரெ பேத்தி ஆசியாவீவீ இரிக்காளே அவள் மட்டும் பதினெட்டு வோட்டுப் போட்டாளாம் மனெ.

அவளுக்கு மாவலிலெ காணியும் ஊடும் தர்ரெண்டு எம்பி உறுதியும் குடுத்திட்டாரர்ம்.

நீயும் ஊரிலெ இரிந்திரிக்கெ பத்து வோட்டிண்டாலும் போட்டிருப்பாய்!

கடைசி காலத்திலயாவது கல் ஊட்டு வாசல்லெ கிடந்து என்ட சீவனும் போயிரிக்கிம்.

கிட்டடியிலெ மத்த இலெக்கிஷனும் வரப் போகுதாம் எப்பிடியும் பதிமூணா நம்பருக்கும் பானைக்கும் போட்டாத்தான் நம்மெடெ கஸிடமெல்லாம் கரசேரும்....

இனி நமக்கென்ன மனெ?

ஒவ்வொரு இலெக்ஷகினிலயும் நாலாயிரமும் சனசவியயும்...

மாவலிலெ காணியும்....கல்ஊடும்....!

இனி நமக்கென்ன மனெ?

---

# ஒரு சனிக்கிழமை பின்னேரம்

**- சகன் -**

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த சகன் தற்போது பாரிஸில் வாழ்கிறார். பள்ளம் என்ற சிறுசஞ்சிகையில் வெளியான 'பஞ்சமியில் செத்தவர்களும் வாழ்வும்' என்ற இவரது முதல் சிறுகதை சீரிய விமர்சகர்களின் கவனத்தை ஈர்த்தது. இவரது சிறுகதைகள், குறுநாடகம், கவிதைகள், விமர்சனங்கள் புதுப்பாணியிலமைந்தவை. புகலிடக் கவியுலகில் இவரின் தடங்கள் தனித்துவமானவை. கிராமியப் பேச்சு, வாழ்வு என்பனவற்றைச் சுவைபட எழுத்தில் பயன்படுத்துபவர். வட்டுக்கோட்டை நாட்டுக்கூத்து அபிவிருத்திச் சங்கத்தின் முக்கிய கலைஞராக பாரிஸில் இயங்குபவர்.

நன்றி: அ.ஆ.இ சிறுகதைத் தொகுப்பு

சனிக்கிழமை நேரத்திற்கு வந்து அப்பிள் தோல் சீவிக்கொண்டிருந்த நான் BAR ல் வேலை செய்யப் போய்க் கொண்டிருக்கும் சில்வியை வைத்த கண் வாங்காது பார்த்துக் கொண்டிருக்கும் மொலூத் கிழவனை நிமிர்ந்து பார்த்துச் சிரித்தேன்.

சில்வியின் அழகில் கிழவன் எப்போதும் வாயூறித் தான் போய்விடுகிறான்.

''இவளின் வடிவுக்கு ஒரு நாள்....''

என்றபடி கிழவன் எனது தலையைத் தடவினான்.

கொக்கத்தடிக்கு குறைவான உயரம். இளமையில் திடகாத்திரமான அழகு கந்தர்வனாக இருந்திருக்க வேண்டும்.

அவனுடைய பிள்ளைகளுக்கு ஒரு நல்ல தந்தையுடன் வாழ இங்கு கொடுத்து வைக்கவில்லை என்று நான் வருந்துவதுண்டு. தூரத்துத் தண்ணீர் தாகத்துக்கு உதவாது என்பது மொலூத் கிழவனின் தத்துவம் போலும். அல்ஜீரியாவின் கபில் இனத்துக் கிழவன் இங்கு பிலிப்பைன்ஸ் மனிஷி ஒன்றை வைத்திருக்கிறான். விபச்சாரம் செய்யும் அல்ஜீரியப் பெண்ணும் கிழவனைத்தேடி ரெஸ்ரூரண்டுக்கு வருவதுண்டு. அவளுடைய ரெலிபோன் நம்பரை எனக்கு ஏற்கனவே தந்திருந்தான். இப்போது சந்தோஷமாக இருக்கும் கிழவன், இன்னும் கொஞ்ச நேரத்தில் நாயாகி விடுவான். அவனது எதிரிகள் சனிக்கிழமை பின்னேரம் ரெஸ்ரூரண்டுக்கு சாப்பிட வருபவர்கள் தான்.

''ஒரு நாளைக்கு விளக்குமாறு எடுத்துத்தான் எல்லாருக்கும் வெளுப்பேன்'' என்று சொன்னால் அது சனிக்கிழமை பின்னேரம் தான்.

ஜப்பானிய சுற்றுலாக்குழு ஒன்று இன்று ரெஸ்ரூரண்டில் பதிவு செய்திருந்தது. கிழவன் இன்று நிலத்தில் விழுந்து விடுவான்.

'சலோ', 'கொனார்', 'பெதே' என்று 'செவ்'வைப் பேசிக் கொண்டே இருந்தான். செவ்வும், பத்திரோனும் 'கம்பி'க்காரர்கள் என்று கையால் செய்து காட்டினான். அவன் செய்து காட்டிய விதத்தில் பத்திரோனும் செவ்வும் கூட அப்படிச் செய்வார்கள் என்பது சந்தேகமே. செவ்'பற்றிக்ஸ்' இளம் பெடியன்; கிழவன் பேசுவதைக் கேட்டுச் சிரித்துக் கொண்டே வேலைக்கு வந்தான்.

நேரே என்னிடம் வந்து ''உன்ர சிநேகிதன் ஆரையும் இண்டைக்குப் பிடிக்க முடியுமா கழுவுறதுக்கு'' ''ரெலிபோன் அடித்துப் பார்க்கிறேன்'' என்று கூறி விட்டு சாந்தகுமாருக்கு அடித்தேன்.

''இப்ப கழுவ வாறியா ரெஸ்ரூரண்டுக்கு'' என்று கேட்க

''விசா கேட்பானோ?'' என்றான் சாந்தன்.

''ரதி மச்சியின்ர விசாவை வாங்கிக் கொண்டு வா'' என்றேன்.

''பகிடியை விட்டிட்டு சொல்லுங்கோ அண்ணை. விசாவில்லாமை உங்கை செய்யலாமோ'' என்றான்.

''உன்ரை விசா இங்க செல்லாது.'' என்றேன்.

சாந்தன் எல்லோருக்கும் பாஸ் எழுதிக் கொடுத்து விட்டு தனக்கும் ஒன்று எழுதிக்கொண்டு போன மாதம் தான் வந்தவன்.

சாந்தன் வரக் கிழவன் சிரித்தான். சாந்தன் முதலாவது கோப்பையைப் போட்டுடைக்கும் போது எல்லோரும் சிரித்தார்கள். சாந்தன் பயந்து போய் என்னைப் பார்த்தான். கிழவன் ''மிகவும் நல்லது'' என்றான். நரகத்தில் இடர்ப்பட்டோம். வேலை முடிந்தது.

''கடைசி றெயின்-தான் இண்டைக்குப் பிடிக்கலாம். எல்லாத்தையும் தொட்டியுக்கை அடுக்கிப்போட்டு மிசினை நிப்பாட்டிப்போட்டு வா, நான் நிலத்தைக் கழுவிறன்.'' என்றேன்.

''....த்த வேலை, பேப்பர் வேலை சம்பளம் குறை வெண்டாலும் வேலை சுகம்'' என்றான் சாந்தன்.

''ரெண்டு மூண்டு நாளைக்கு கொஞ்சம் கஸ்ரமாத்தானிருக்கும். கடும் சுடு தண்ணியில கழுவாதை, வேலை கூடினால் கோப்பையைத் துடைக்காதை, அப்பிடியே தூக்கி அடுக்கு. சூட்டுக்குத் தன்பாட்டிலை காஞ்சு போடும். ஜவல் கனக்கப் பாவியாதை, கை எரிச்சுப்போடும். கண்ணுக்கும் கூடாது. தாச்சியின்ர பின்பக்கம் ஒண்டும் கழுவாதை, சும்மா துடைச்சுப்போட்டு தூக்கியெறி'' என்றேன்.

அண்ணரும் வேலை முடிந்து கடைசி றெயினுக்கு வந்திருந்தார். சாந்தனைப் பார்த்துச் சிரித்த அண்ணர்.

''எப்பிடி வேலை சுகமோ'' என்று கேட்டார்.

''ஓ......செய்யலாம்'' என்றான் சிரித்தபடியே.

நான் இரண்டு பேரையும் விட்டிட்டு தனியே இருந்த சீற்றில் இருந்து நாரியை நிமித்தினேன்.

அன்ன ஆகாரமில்லாமல் காட்டில் கடுந்தவம் செய்து கொண்டிருந்த துருவன் முன் 'உனக்கு என்ன வரம் வேண்டும்' என்று கேட்டார் கடவுள்.

'உட்காருவதற்கு எனக்கு நிரந்தரமாக ஒரு இடம் வேண்டும். அங்கிருந்து என்னை யாரும் விரட்டக் கூடாது' என்றான் துருவன். அவன் துருவன். அவன் துருவ நட்சத்திரமானான்.

நவீன அகதித் துருவர்களால் சில நிமிடத்திற்குள் இருக்கைகள் நிறைந்து விட்டது. றெயின் போய்க் கொண்டிருக்கிறது. ஆறுதலாக இருக்கிறேன் என நினைத்துக் கொண்டு கண்களை மூடிக் கொண்டிருந்தேன். இறங்குகிற ஸ்ரேசன் வருகிற நேரமாகிறது என்று மனதிற்குள் நினைக்க அண்ணர் வந்து தட்டினார்.

வழமைபோலவே பிள்ளைகள் நல்ல நித்திரை. ரதி மச்சி முழித்திருக்க வேண்டும். சற்று முன்னர்தான் கந்தசஷ்டி கவசம் படித்து முடித்திருக்கிறா போல் இருக்கிறது.

''பிள்ளைகள் தின்னும் புழைக்கடைமுனியும்
கொள்ளிவாய்ப்பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராக்கதரும்
அடியனைக்கண்டால் அலறிக்கலங்கிட
இரிசி காட்டேறி இத்துன்ப சேனையும்

எல்லிலும் இருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோடனைவரும்
விட்டாங்காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக்காரரும் சண்டாளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந்தோடிட''

ரதி... என்று வழமை போல் கதவைத் தட்டினார் அண்ணர். நான் உடுப்பை மாற்றி விட்டு குழம்பைச் சூடாக்கினேன். எல்லோரும் சாப்பிட்டு விட்டு படுத்தோம். ரெலிபோனை இழுத்து விட்டுவிட்டு.

அண்ணர் மச்சியுடன் ஒரு வார்த்தை கதைப்பதற்கு எங்கே ஓய்வு நேரம் கிடைக்கிறது. அதிகாலை வந்து படுத்து காலை எழும்பி ஓடுவதுதான்.

''என்ன நித்திரை வரயில்லையோ...ம்''

ஒரு வார்த்தை கதைத்தால் அனேகமாய் இதாய்தான் இருக்கும்.

அண்ணரின் அறைக்குள் கட்டில் சத்தம் கேட்டது. அல்லது கேட்டது போலிருந்தது. தலகணி கடித்தது. முகத்தில் ஏதோ ஊர்வது போல இருந்தது. லையிற்றைப் போட்டு தோச்ச சோட்டால் தலகணியைச் சுற்றி போர்த்தினேன். கன்னத்தை அழுத்திப் படுத்தேன். இதமாக இருந்தது.

நன்றி - நூலகத்திட்டம்





# இயக்க மோதல்களால் இழுபட்ட போராட்டம்!

# எரிட்றியா இன்றொரு தனிநாடு!!

இலங்கை-இந்திய ஒப்பந்தம் பற்றிப் பெரிதாகப் பேசுவோர் கவனிக்கத் தவறிய முக்கிய விசயத்தை இங்கு குறிப்பிடல் பொருத்தம். எரிட்றியாப் பிரச்சனையில் வெளிநாடுகளின் தலையீடு என்பது இலங்கை இந்திய விவகாரத்தை விட எத்தனையோ மடங்கு சிக்கலானது. சம்பந்தப்பட்ட நாடுகளின் எண்ணிக்கையும் அதிகம். பிரச்சினையின் பரிமாணமும் கனதியானது. அப்படியிருந்தும் உடன்படிக்கை என்று வரும் போது சம்பந்தப்பட்டவர்களே திறந்தவர்காளக இருப்பதுதான் உடன்படிக்கை வெற்றிகரமாகச் செயற்பட வழிவகுக்கும். இங்கே ELF இராணுவ ரீதியில் பலங்குறைந்த இயக்கமாக இருந்த போதும் சோவியத்தும் சிரியாவும் இந்த இயக்கத்தை முன்னிறுத்தியே எதியோப்பியா அரசுடன் சமரசத்தை ஏற்படுத்தின. இந்த அணுகுமுறை இலங்கையில் கடைப்படிக்கப்பட்டிருந்தால் மாகாணசபையைச் சட்டரீதியிலும் அரசியல் ரீதியிலும் இலங்கை அரசாங்கம் கலைத்திருக்க முடியாது போயிருக்கும். மாகாணசபையினரும் உடன்படிக்கையில் கையெழுத்திட்ட இந்தியாவிடமே ஓடிப்போக வேண்டியுமேற்பட்டிருக்காது.

1981இல் EPLF ஏழு அம்சக் கோரிக்கையை முன்வைத்தது. எரிட்றியா மக்களது விருப்பறிய சர்வசன வாக்கெடுப்பு அல்லது பொதுத்தேர்தல்; சர்வதேசக் கண்காணிப்புக்குழு; யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு; யுத்த நிறுத்த உடன்படிக்கையைச் செயற்படுத்துவதிலுள்ள சிக்கல்களைத் தீர்க்க மற்றொரு சர்வதேசக் குழு; யுத்த நிறுத்த அமுலுக்குப் பின் அரசியல் உரிமைகள் மட்டுப்படுத்தப்படக்கூடா தென்ற உத்தரவாதம்; சர்வசன வாக்கெடுப்புக்கு விடப்படும் விடயம் பூரண சுதந்திரமா அல்லது இணைப்பாட்சி/ பிராந்திய சுயாட்சியா என்றிருக்க வேண்டும்; இதில் மக்கள் எதைத் தெரிந்தெடுத்தாலும் அதை நிர்வகிப்பதற்கான நிர்வாக சபை ஒன்றைத் தெரிவதற்கான சுதந்திரத் தேர்தலை நடாத்ததுதல். இந்த ஏழுமே குறைந்த பட்சக் கோரிக்கைகள். உண்மையில் இங்கே EPLF தனது முன்னைய நிலைப்பாடான 'பூரண சுதந்திரம் என்பதிலிருந்து இறங்கி வந்து மக்கள் விருப்பப்படி நடப்பதாக உறுதியளித்திருந்தது. இதில் வேடிக்கை என்னவென்றால் முன்னர் அரசுடன் இணங்கி நின்ற ELF தற்பூோது சர்வசன வாக்கெடுப்பை விரும்பவில்லை. தாமும் EPLF உம் சேர்ந்து அரசுடன் பேசுவோம் என்று அது கூறியது.

1981 இல் சூடான் அதிபரின் முயற்சியானால் ரியூனிஸில் சந்தித்த இயக்கங்கள் தமக்கிடையே 'சகோதரக் கொலைகளை' நிறுத்துவதாக உறுதியளித்தன. குறிப்பாக, அரபுலீக் என்ற பிராந்திய அமைப்பு இயக்கங்களை ஒற்றுமைப்படுத்தி அறிக்கை ஒன்றை வெளியிடுமாறுஞ் செய்தது. ஆனாலும் பின்னர், 'டேர்க்' லிபியா, தென் யேமன் என்பவற்றின் உதவியுடன் தாக்குதலைத் தொடங்க மீண்டும் சமாதானம் எட்டிப் போய்விட்டது. இயக்கங்கள் தமக்கிடையே மோதலைத் தொடர்ந்தன. 5,000 ELF போராளிகளைச் சூடானுக்கு விரட்டிய EPLF தனது நிலையைப் பலப்படுத்திற்று. EPLF இக்காலத்தில் சில இராணுவ வெற்றிகளைச் சந்தித்தது. பிரான்சின் ஆளுங்கட்சி எரிட்றிய சுயநிர்ணய உரிமையை ஆதரிப்பதாக அறிவிக்க எதியோப்பியாவுடனான அதன் உறவு சீர்குலைந்தது.

இலங்கையில் 'வடமராச்சி ஒப்பரேசன்' போன்ற பாரிய தாக்குதல் ஒன்று 1982 இல் எரிட்றியா மீது நடாத்தப்பட்டது. 'சிவப்பு நடசத்திரத தாகுதல்' என்று இதற்குப் பெயர். ஒரு லட்சம் படையினர் EPLF மீது முற்றுகையிட்டனர். ஆரம்பத்தில் தனக்கு வெற்றியென அறிவித்த அரசாங்கம் 'எமது படையினரின் திறைமையினால் அல்ல - எரிட்றியா மக்களின் ஆதரவே வெற்றிக்குக் காரணம்''. எனப்பிரச்சாரஞ் செய்தது. ஆனால் மூன்று மாதங்கசளில் படையினர் பின்வாங்க வேண்டி நேர்ந்தது. 1984 இல் EPLF அஸ்மாராவைச் சுற்றிப் பூரண முற்றுகையைப் பலப்படுத்தியது. இக்காலப்பகுதியிலேயே படிப்படியாக வரட்சியினால் பட்டினிச் சாவுகளும் தொடங்கின. 1985 இல் அரசபடைகள் மீண்டும் தாக்கின. பின்வாங்கிய EPLF 1987 இல் மீண்டும் முன்னேறி. 18,000 வீரர்கள் இத்தடவை EPLF ஆல் கொல்லப்பட்டனர். கடற்கரையில் நான்கு பட்டினங்கள் மட்டுமே அரசின் கட்டுப்பாட்டில். இவற்றிற்கு விநியோகம் ஆகாயமார்க்கமாகவே சாத்தியமாக இருந்தது. 1989 இல் ரிக்ரே பிராந்தியத்திலும் அரசபடைகள் தோற்றன. அரசு பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க வேண்டிய நிர்ப்பந்தம்.

1982 -85க்கு இடைப்பட்ட காலத்தில் 'டேர்க்' குடன் 10 தடவைகள் EPLF இரகசியத் தொடர்பில் உடன்பாட்டுக்கு வர முயற்சித்தும் பயனற்றுப் போனதை நினைவிற் கொள்ளல் வேண்டும். 1987 இல் தானே ஒரு சர்வசன வாக்கெடுப்பை நடாத்துவதாக அரசு 'போக்குக்' காட்டியது. பூகோள அரசியலை 'கொர்ப்பச்சேவ்' தலைகீழாக மாற்றினார். இதுவரை கைகொடுத்த சோவியத் இப்போது சமரசத் தீர்வு காணும்படி எதியோப்பியாவை நெருக்கியது. வடக்கிலிருந்து தோல்விச் செய்திகள் மட்டுமே அரசுக்கிடைத்த வண்ணமிருந்தன. இப்போது கூட EPLF 'அதிகாரப் பகிர்வுக்குச் சம மதிக்கத் தயாராக இருந்தது. 1989 யூனில் 'டேர்க்' முன் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்குச் சம்மதித்தது. முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஜிம்மி கார்ட்டர் தலைமையில் பேச்சுவார்த்தை தொடங்கியது. ஆனாலும் அரசாங்கம் ''அவகாசத்தை வாங்குகிறதா'' என்ற அச்சமும் போராளிகளிடையே இருக்கவே செய்தது. இந்நிலையில் 'அநாதரட்சகனான' சோவியத் தனது ''பொம்மையைத்'' தொக்கெனக் கைவிடும் நிலை. அமெரிக்காவைப் பகைக்க முடியாத நிலையில் கொர்பச்சேவ். எதியோப்பியாவில் பல்வேறு ஆயுதக்குழுக்கள் உருவாகின.

அரசபடைகளிடையே கட்டுப்பாடு குலைந்தது. பிராந்தியங்களிலுள்ள போராளிக் குழுக்கள் இராணுவத்தை அலைக்கழித்தன. ரிக்வே பிராந்திய இயக்கமான EPRDF இன் பேராளிகள் இராணுவத்தை ஒரு புறத்தில் விரட்ட மறுபுறத்தில் EPLF எரிட்றியாவில் வெற்றிக் கொடி நாட்டியது. இராணுவச் சர்வாதிகாரிகளுக்கு இறுதியில் ஏற்படும் விளைவு 'டேர்க்'கின் தலைவரான Mengisty க்கும் கரத்திருந்தது. எரிட்றியாவின் EPLF, ஒரோமாவின் OLF, ரிக்ரேயின் EPRDF என்பன தலைநகரை நோக்கி அணிவகுக்கத் தொடங்கின. 1991 மே 21 ஆந் தேதி விமானத்தில் ஏறிய இராணுவத் தலைவர் சிம்பாவேயில் போய்க் குதித்து அரசியல் புகலிடம் பெற்றுக் கொண்டார். நாடு கிளர்ச்சிப் படைகளின் கையில்.

மே 27-28 இல் லண்டனில் ஒரு கூட்டத்தை அமெரிக்கா ஏற்பாடு செய்தது. இயக்க முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர். இரண்டு தற்காலிக அரசாங்கங்களை ஏற்படுத்துவதாக உடன்பாடு காணப்பட்டது. எரிட்றியாவை EPLF உம் மிகுதி எதியோப்பியாவை EPRDF (ரிக்கே பிராந்திய பிரிவினைப் போராளிகள்) உம் நிர்வகிப்பதாக உடன்பாடு எட்டப்பட்டது. இவ்வேளையில்தான் எதியோப்பியாவிலிருந்த யூதர்களில் 14,887 பேரை இஸ்ரேல் விமான மூலம் வரவழைத்துக் கொண்டது. தற்காலிக அரசாங்கத்தை பொறுப்பேற்ற EPLF இரண்டு வருடத்தில் சர்வசன வாக்கெடுப்பை ஐ.நா. வின் மேற்பார்வையில் நடாத்துவதாக உறுதியளித்தது.

இதன்படி 1993 ஏப்பிரல் 23-25 ஆந் தேதிகளில் கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பு நடைபெற்றது. பதிவு செய்யப்பட்ட எரிட்றியா வாக்காளர் தொகை பத்து லட்சத்து 18 ஆயிரம். இதில் இரண்டு லட்சம் பேர் வெளிநாடுகளிலிருந்தபடி வாக்களிக்க விரும்பினர் (எதியோப்பியா, சூடான், அமெரிக்கா) சர்வசன வாக்கெடுப்புப் பற்றி நம்நாட்டில் பேசுவோர் இதனையுங் கவனத்திற் கெடுப்பார்களா? வாக்களிப்பு வீதம் 98.2% ஆக இருந்தது. வாக்களிப்புக்கு விடப்பட்ட வினா இது தான்;

''எரிட்றியா சுதந்திர நாடாக இருப்பதை விரும்புகின்றீரா''?

99.8% ஆனோர் 'ஆம்' என்று வாக்களித்தனர். 1,882 பேர் மட்டுமே 'இல்லை' என்று வாக்களித்தனர். EPLF எரிட்றியத் தலைநகரான அஸ்மராவைக் கைப்பற்றிய நாளான 1991 மே 24ஐ மனதிற் கொண்டு 1993 மே 24 சுதந்திர நாளாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. சுதந்திர விழாவில் முக்கிய உரையை எதியோப்பியா ஜனாதிபதியே ஆற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது. பதிலுக்கு எரிட்றியத் தலைவரான EPLF செயலாளர் நாயகம் Isseyas Afrworki செங்கடலுக்கான பாதையை எதியோப்பியாவுக்கு என்றுமே தருவோம் என உறுதியளித்துள்ளார். இந்த ஒற்றுமையில் கபடம் எதுவுமில்லை என்பது உண்மையே.

## வெற்றியின் காரணிகள்:

எரிட்றியப் போரின் 30 வருட இழுபறிக்குக் காரணமே செங்கடலின் முக்கியத்துவமே. திருகோணமலைத் துறைமுகம் பற்றிய மிகைப்படுத்தல்களை வைத்துப் பார்த்தாலும் எரிட்றியாவின் மசாவா துறைமுகத்தின் முக்கியத்துவத்துக்கு ஈடாகாது. எரிட்றியாவை இழ்ந்ததின் மூலம் எதியோப்பியா இன்று கடல் எல்லையற்ற நாடாகிவிட்டது. இதன எதிர்காலம் எரிட்றியாவுடனான அதன் நட்புறவிலேயே தங்கியுள்ளது. செங்கடலின் இ முக்கியத்துவம் வல்லரசுகளை வலிந்தழைத்தது. சிவப்புப் புரட்சி வெற்றி பெற்ற மகிழ்ச்சியில் சோவியத், மக்களின் விருப்பை மதிக்காமல் அரசுக்கு முண்டுகொடுக்க முற்பட்டது. (ஆப்கானிஸ்தானுக்கும் இதே பாடமே) வல்லரசுப் போட்டி முடிய மக்கள் விருப்பு வென்றது. இங்கே சோவியத்தின் தோல்வி அமெரிக்காவின் வெற்றி என்று பார்ப்பதை விட மக்களது உண்மை விருப்பின் வெற்றி என்றே கூற வேண்டும். இந்த விருப்பு வெளிப்படாமல் வல்லரசுகளினால் அமுக்கப்பட்டிருந்தது.

மற்றைய சுதந்திரப் போரராட்டங்களை விட எரிட்றியாப் போர் இழுபடக் காரணம் இயக்க மோதலே என்பதில் தவறில்லை. தமக்குள்ளே மோதியமை, அரசு படைகளுடன் சேர்ந்து எரிட்றியாவில் தாக்குதல் நடாத்தியமை, சூடானின் கைப்பொம்மையாக் மாறியமை என்பவற்றால் இயக்கங்கள் 'அமீபா' போன்று பிரிந்து பிரிந்து பெருகின' ஒன்றை யொன்று விழுங்கிப் பருத்தன.

மறுபுறத்தில் இப்போரில் உற்சாகந்தரும் அம்சம் யாதெனில் எரிட்றியாவின் சனத்தொகை 35 இலட்சத்தில் (1991) 50% முஸ்லீம்களும் 50% கிறிஸ்தவர்களும் இருந்தும் கூட முஸ்லீம்களால் முன்னெடுக்கப்பட்டு அரபுலகால் ஆதரிக்கப்பட்ட போர் முடிவின் பின் வாக்கெடுப்பில் 99.8% ஆனோர் பிரிவினையை ஆதரித்து வாக்களித்திருப்தேயாகும். எல்லாக் கிறிஸ்தவர்களும் 'இல்லை' என வாக்களித்திருப்பின் எரிட்றியாயப் போர் இப்போதும் அவல நிலையில் தொடர்வதாக இருக்கும். இங்கே மதம் மக்[illegible]ளைப் பிரிக்கவில்லை. அத்றகும் மேலாக சுதந்திர விருப்பு செயற்பட்டுள்ளது.

தற்போது எரிட்றியாவின் படையில் [illegible] லட்சம் EPLF வீரர்கள். போராளிகளாக இருந்த போது EPLF இல் 30% பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது இன்னும் நான்கு வருடங்களுக்குள் அரசியலமைப்பைத் தயாரித்து பல கட்சி ஆட்சிக்கு வழிசமைப்பதாக EPLF உறுதியளித்து அதற்கான வேலைகளில் ஈடுபட்டுள்ளது. தற்போது EPLF இன் மத்திய குழுவின் உறுப்பினர்களும் வேறு 60 பேருங் கொண்ட தேசிய சபை ஆட்சியை நடாத்துகிறது. இதில் 11 உறுப்பினர்கள் பெண்கள். சபையின் தலைவர் EPLF இன் செயலாளர் நாயகம். இப்போரில் சூடானை எமது வரலாற்றில் இந்தியாவுடனும் ELF ஐ இங்கு EPRLF டனும் என்னால் ஒப்பிட முடிகிறது. மிகுதியை ஒப்பிட வேண்டியவற்றுடன் வாசகர்களே ஒப்பிட்டுக் கொள்ளுஞ் சுதந்திரத்தைப் பெறுகிறீர்கள். எரிட்றியாவை உடனடியாகவே எதியோப்பியா,, எகிப்து, இஸ்ரேல், சிரியா, ரஷ்யா, அமெரிக்கா, இத்தாலி போன்றன அங்கீகரித்துவிட்டன.

சிசைரோ

## அழுந்தி அழுத்தினும் எழுக

தோல்விகளுக்குப் பின்னால்
வருகிற கவலையில் தான் நான் கவிதை எழுதுகிறேன்.
ஒரு நீண்ட காலம்
பாலைவனத்தில் நான் திரிந்தேன்
வழி தெரியாத வான்முகடும் பாலைவனமும்
கால்சுடச்சுட ஓடி கால்களில் கொப்புளமாயின
மணல்காற்றில் சூடான மணல்கள்
என் கண்களெங்கும் அராவுப்படுகின்றன.
இந்த வலிகளுக்காக நான் என்செய்ய

தூரத்தில் வான்முகட்டில் தெரியும்
கலங்கரை விளங்கங்களும் நிழல்மரங்களும்
அருகருகே நான் வரும்போது
விலகிவிலகித் தூரமாயின

இதை விடக் கடினமானது
என்கவலைகளும் ஏக்கங்களும்




நட்சத்திரன் செவ்விந்தியன்

1991.06.10

நன்றி - நூலகத்திட்டம்





# கழுதைகளும் புல்லுக்கட்டும்

'சுபமங்களா' ஆசிரியரான **கோமல் சுவாமிநாதன்** இலங்கைக்கு விஜயம் செய்ததையொட்டி பல சுவாரசியமான சம்பவங்கள் நடந்தேறின.

**தேசிய கலை இலக்கியப் பேரவை**யின் ஏற்பாட்டில் கோமல் இலங்கைக்கு வந்திருந்தார். இலங்கையின் முக்கிய பிரமுகர்கள் சிலர் தமக்கும் அவருக்குமிடையே நெருக்கத்தை உண்டுபண்ண போட்டி போட்டுக் கொண்டு விருந்து கொடுத்தும், விழா எடுத்தும், படம் பிடித்தும், பட்டம் கொடுத்தும் கோமலைத் திக்குமுக்காட வைத்தனர். துதி பாடியும் பொழுதைப் போக்காட்டினர்.

கோமல் சுவாமிநாதன் அவர்களுக்கு வரவேற்பு விழா நடந்த அன்று, கலந்துரையாடலின் போது எழுத்தாளரான **பத்மா சோமகாந்தன்** கோமலிடம் "இலட்சுமிகரமான, அழகான 'சுபமங்களா' எனும் பெயரை எப்படித் தங்கள் சஞ்சிகைக்கு தெரிந்தெடுத்தீர்கள்?" எனும் கேள்வி கேட்டார். "சுபமங்களா எனும் பெயர் எனக்குப் பிடிக்கவில்லை. அந்த நிறுவனம் அப்பெயரைத் தந்திருந்தது. நான் அதனைப் பயன்படுத்துகிறேன்" என்றார் கோமல். பத்மா சோமகாந்தன் அசடு வழிந்தார்.

அதிக பிரதிகள் விற்பனையாகிற தமிழ் நாட்டின் பிரபல சஞ்சிகை 'சுபமங்களா' என்பதனால்தான் இப்பேர்வழிகள் கோமலைத் தலைக்கு மேல் வைத்துக் கூத்தாடுகின்றனர்.

இன்னொரு எழுத்தாளர் **நா.சோமகாந்தன்** (பத்மா சோமகாந்தனின் கணவர்) இவர் யாழ்ப்பாணத்தில் இருக்கிற போது முற்போக்கு எழுத்தாளர் மூகாமுடன் முகம் காட்டியவர். கொழும்பிற்கு வந்த பின் வண்ணத்தை மாற்றிக் கொண்டார். இலங்கை-மொரீஷியஸ் நட்புறவுச் சங்கத்தின் தலைவராக விளங்குகிறார். கடந்த 26.03.94 அன்று விபவி நிறுவனம் கோமல் சுவாமிநாதனை சிங்களக் கலைஞர்களுடன் கலந்துரையாடல் ஒன்றுக்கு அழைத்திருந்தது. மதிய போசன விருந்தளித்துக் கௌரவிப்பதாகவும் ஏற்பாடு. மதியம் ஓருமணி போல சோமகாந்தன் அவர்கள் 10 நிமிடத்தில் கோமலைக் கொண்டு வந்து விட்டு விடுவேன் என்று கூறி விட்டு இரண்டரை மணித்தியாலங்களின் பின் கோமலைக் கொண்டு வந்து விட்டார். அதுவரையும் சிங்களக் கலைஞர்கள் சாப்பிடாமல் காத்திருந்தார்கள். தேசிய கலை இலக்கியப் பேரவை செயலாளர் திரு. **ந.ரவீந்திரன்** அவர்கள் யாவரிடமும் மன்னிப்புக் கேட்டு கலைஞர்களைச் சாப்பிடுமாறு வற்புறுத்தினார். சிங்களக் கலைஞர்கள், கோமல் சுவாமிநாதன் தங்களை அவமதித்ததாகவே கருதினார்கள்.

சோமகாந்தன், இலங்கையின் பிரபல தொழிலதிபரும், மொரீஷியஸ் நாட்டுத் தூதுவரும் ஐ.தே.கவின் அபிமானியுமாகிய திரு.ஈஸ்வரன் அவர்களின் வீட்டுக்கு மதியபோசன விருந்தளிக்கக் கோமல் சுவாமிநாதன் அவர்களைக் 'கடத்திக்' கொண்டு சென்றிருக்கிறார். இங்கு கலைஞர்கள் காத்திருந்திருக்கிறார்கள்.

அடுத்த நாள் **அரங்காடிகள்** எனும் நாடக அமைப்பு, கோமல் சுவாமிநாதனுடன் தமிழ் நாடகக் கலைஞர்களை கலந்துரையாடல் ஒன்றுக்குக்கு அழைத்திருந்தது. காலை 9மணிக்கு கலந்துரையாடல் தொடங்குவதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. 10மணி ஆகி விட்டது. கோமலைக் காணவில்லை. விசாரித்ததில் விஷயம் இதுதான்; **அந்தனி ஜீவா** அவர்கள் காலைச் சாப்பாட்டுக்காக இலங்கையின் பிரபலஸ்தர்களில் ஒருவரான **யோகா பாலச்சந்திரன்** வீட்டுக்கு கோமல் சுவாமிநாதனை 'கடத்திச்' சென்று விட்டார்.

கோமல் சுவாமிநாதனும் இங்கு நடைபெறும் விருந்துபசாரங்களில் தான் திணறிப் போய் விட்டதாகக் குறிப்பிட்டார். இப்படியான சம்பவங்கள் கோமல் சுவாமிநாதன் அவர்களுக்கு கெட்ட பெயர் ஏற்படுத்தவே வழிவகுக்கும்.

இனி வரும் சுபமங்களா இதழ்களில் **சோமகாந்தன், அந்தனி ஜீவா** போன்றோரின் படைப்புகளை எதிர்பார்க்கலாம்.

இவ்வளவு 'கடத்தல்' சம்பவங்களும் நடைபெறுகிற போது, கோமல் சுவாமிநாதனை இலங்கைக்கு அழைத்து வந்திருந்த **தேசிய கலை இலக்கிய பேரவையினர்** என்ன செய்கிறார்கள்?

அருண்

# ஒறேற்றருடைய பள்ளிக்கூடம்



ஒறேற்றர் சுப்பிரமணியம் அவர்கள் பெப்.18ம் திகதி லண்டனில் காலமானார் என்கிற செய்தி கிடைத்தது.

ஏறத்தாழ இருபது வருடங்களாக அவர் அதிபராக இருந்து கட்டிவளர்த்த சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில்தான் நானும் படித்தேன் என்பதைத் தவிர எனக்கும் அவருக்கும் நேரடியான தொடர்பு ஒரு போதும் இருந்ததில்லை. ஏனெனில் அவர் இளைப்பாறி இரண்டு வருடங்களின் பின்னரேதான் எனது பிறப்பே நிகழ்ந்தது.

ஆனாலும் ஆறாவது வகுப்பிற்காக நான் முதன்முதலாகப் புத்தகப்பையுடன் ஸ்கந்தாவிற்குப் புறப்படுகின்ற அன்று எனது தந்தையார் கூறிய வார்த்தைகள் இன்னமும் ஞாபகம் இருக்கிறது; "**ஒறேற்றருடைய பள்ளிக்கூடத்தில்** சேர்த்திருக்கிறேன்; உனது வருங்காலம் நல்லதாகும்!"

ஒறேற்றர் அவர்கள் இளைப்பாறி ஏறத்தாழ பதினைந்து வருடங்களுக்குப் பிறகும் -ஏன் அது இன்றும்- ஒறேற்றருடைய பள்ளிக்கூடமாகவே எண்ணப்படுவதென்பது அவருக்கும் அப்பாடசாலைக்கும் இருந்த உறவை விளக்கப் போதுமானது.

எனது தந்தையார் ஒறேற்றர் அவர்களுடைய காலத்தில் ஸ்கந்தவரோதயாவில் படித்தவர் என்பதால் அவர் பற்றிய எனது எல்லாப்படிமங்களும் எனது தந்தையாருடாகவே எனக்குக் கிடைத்தது.

வசதியற்ற மாணவர்களுக்கு கல்வி கற்க வசதிசெய்து கொடுத்தது பற்றியும், குறிப்பாக ஒடுக்கப்பட்ட மக்கள் பாடசாலை வாசலையே மிதித்திராத, மிதிக்க அனுமதிக்காத காலத்தில் அவர்களது கல்வி குறித்து அவர் கொண்டிருந்த அக்கறை, அதற்காகச் செயற்பட்ட அவரது முனைப்பு பற்றியும்,

இதனூடாக எமது பிரதேசத்தை முன்னேற்றுவதில் அவர் கொண்டிருந்த அக்கறை பற்றியும்,

தாய்மொழி மூலம் கல்வி போதிக்கப்பட வேண்டும் என்று அவர் வலியுறுத்தி வந்தது பற்றியும்,

இலங்கையின் பூரண சுதந்திரத்தை இலக்காகக் கொண்டு செயற்பட்ட மாணவர் காங்கிரஸை உருவாக்குவதில் ஹன்டி பேரின்பநாயகத்துடன் இணைந்து செயற்பட்டமை பற்றியும்,

இன்னுமிப்படி எவ்வளவோ விடயங்கள் குறித்தும் எனது தந்தையாரும், இன்னும் பிறரும் அவ்வப்போது பேசக் கேட்டிருக்கிறேன்.

இவ்வாறான ஒரு மனிதர் ஒரு காலத்தில் அதிபராயிருந்த பாடசாலையில் படித்திருக்கிறேன் என்பது என்னைப் பெருமிதம் கொள்ள வைக்கிற அதே நேரத்தில் இன்று அவர் நம்மிடையே இல்லை என்கிற நிஜம் நெஞ்சில் தைக்கத்தான் செய்கிறது.




# ஐ.தே.கவின் அமைச்சர்களான தேவராஜ், அஸ்வர் ஆகியோரும் முற்போக்காளர்களே

அண்மையில் (27.03.94) **இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம்** எனும் அமைப்பு **இளங்கீரன்** அவர்கள் எழுதிய **'ஈழத்து முற்போக்கு இலக்கியமும் இயக்கமும்'** எனும் நூல் வெளியீட்டு விழாவொன்றினை நடாத்தியது.

வழமை போல இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் சில குத்துக்கரணங்களை அடித்தது.

வெளியீட்டு விழாவின் நிகழ்ச்சி நிரல் பின்வருமாறு: வரவேற்புரை: என். **சோமகாந்தன்**. பிரதம அதிதி உரை: மேல்மாகாண ஆளுநர் **மேதகு. எஸ். சர்வானந்தா**. சிறப்பு அதிதி உரை: முஸ்லீம் மத கலாசார ராஜாங்க அமைச்சர் கௌரவ **எம்.எச்.எம். அஸ்வர்**. வெளியீட்டுரை: இந்துமத கலாசார ராஜாங்க அமைச்சர் கௌரவ **பீ.பீ.தேவராஜ்**. வாழ்த்துரை: மொரீஷியஸ் நாட்டுக்கான தூதுவர் கௌரவ **தெ.ஈஸ்வரன்**.

தமிழர், முஸ்லீம் என்போர் மரத்தைச் சுற்றிப் படரும் கொடிகள் என இனவாதம் பேசுகிற ஐ.தே.கவின் ஆளுநரும், அமைச்சர்களும், தூதுவரும் இ.மு.எ.சவிற்கு முற்போக்காளர்களாகி விட்டனர்.

இவர்கள் தமிழர் எனத் தம்மை அழைத்துக் கொள்கின்றனர். தமிழர்களிலும் கூட முற்போக்கானவர்கள் இவர்கள். என்னே விந்தை.

இளங்கீரன் அணிந்த குல்லாய் பற்றியும் அஸ்வர் குறிப்பிட்டார். எழுத்துக்களிலும், பேச்சுக்களிலும் தீவிர மார்க்சீய முகம் காட்டிய இளங்கீரன், மத நம்பிக்கையின் அடிப்படையிலான குல்லா அணிவது குறித்து அஸ்வர் கிண்டலுடனும், மகிழ்ச்சியுடனும் குறிப்பிட்டார். முற்போக்கு எழுத்தாளர்களின் முகம் கறுத்துப் போனது.

முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் வரலாற்றில் இத்தகைய துரோகத்தனமான நிலைப்பாடு புதிதானதொன்றல்ல. அடிக்கடி செயற்படுகிற துரோகம்தான்.

சமீபத்தில் மொரீஷியஸ் நாட்டுத் தூதுவராக தெ.ஈஸ்வரன் அவர்களை நியமித்த போது இ.மு.எ.சவின் விமர்சகரான பேரா.கா.சிவத்தம்பி அவர்கள் ஈஸ்வரனை வானளாவப் புகழ்ந்து உரையாற்றினார். ஈஸ்வரன் அவர்களால் தூதுவர் பதவி சிறப்படைகிறது. ஈஸ்வரன் அவர்களே தூதுவர் பதவிக்குப் பொருத்தமானவர் என்றெல்லாம் உரையாற்றினார். பேரா. சிவத்தம்பியின் 'பிராரம்ப உசாவலின்' அளவீட்டில், ஈஸ்வரன் எவ்வகையில் இப்பாராட்டுகளுக்கெல்லாம் பொருத்தமானவர் என்பது தெளிவாக்கப்படவில்லை.

**எஸ். சர்வானந்தா, எம்.எச்.எம். அஸ்வர், பீ.பீ. தேவராஜ், தெ.ஈஸ்வரன்** இவர்கலெல்லோரும் எப்போது முற்போக்காளரானார்கள்?

எது எப்படியோ, முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் வியாபாரங்களை காட்டுகிறது.

விஜய்

# டானியல் அன்ரனி

எழுத்தாளர் டானியல் அன்ரனி கடந்த மாதம் காலமாகிவிட்டார். இவர் தனது வாழ்வில் நாற்பது வருடங்களைத் தாண்டிய நிலையில், இளவயதில் தான் நேசித்த வாழ்வையும், குடும்பத்தவரையும், சமூகத்தையும் விட்டுப் பிரிந்து விட்டார். சிறிது காலமாக நோய்வாய்ப்பட்டிருந்த இவர் கொழும்பு ஆஸ்பத்திரியில் காலமானார். இறுதிச் சடங்குகள் யாழ்ப்பாணத்தில நடந்தன.

எழுபதுகளில் யாழ்ப்பாணத்தில் தெரியவந்த புதுமுக எழுத்தாளர்களில் ஒருவராக டானியல் அன்ரனி இலக்கிய உலகினால் அறியப்பட்டார். 'முற்போக்கு' அணியினருள் ஒருவராகத் தன்னை இனங்காட்டிக் கொண்ட டானியல் அன்ரனி பல சிறுகதைகளை எழுதினார். இவரது சிறுகதைகளின் தொகுப்பான 'வலை' 1980களின் இறுதிப் பகுதியில் வெளிவந்தது.

இவர், தனது கதைகளில் தான் வாழ்ந்து, தான் நேசித்த சமூகத்தைப் படம்பிடித்துக் காட்டினார். யாழ்ப்பாணத்து நாவாந்துறைச் சூழலின் மீனவ மக்களின் வாழ்க்கைக் கோலங்களும், போராட்டங்களும், அபிலாஷைகளும் இவர் கதைகளில் இடம்பெற்றுள்ளன. தன் வாழ்வின் இறுதிக் காலகட்டங்களில், யாழ்ப்பாணத்தின் போர்க்காலச் சூழலையும், மக்கள் உணர்வுகளையும் இவர் எழுதினார்.

எழுபதுகளின் மத்தியில் யாழ்ப்பாணத்தில் தோன்றிய சிற்றிலக்கிய ஏடுகளில் ஒன்றான 'சமரின்' ஆசிரியராக இவர் விளங்கினார். இலக்கிய உலகின் முடிவுறாத விவாதமான 'உருவமா -உள்ளடக்கமா முக்கியம்' என்பதில், உள்ளடக்கத்தின் சார்பாக 'சமர்' குரல்கொடுத்தது. தனக்குச் சரியெனப்பட்டதைச் 'சமர்' நெஞ்சை நிமிர்த்தி, துணிவுடன் முன்வைத்தது. சமரின் பின்புலத்தில் 'டானியல் அன்ரனி' என்ற சுறுசுறுப்பான இளைஞர் இயங்கிக் கொண்டிருந்தார்.

மிகவும் கஷ்டமான வாழ்க்கைச் சூழ்நிலையிலும், தான் வாழ்ந்த சமூகத்தின் நலன்களுக்காகவும் இவர் அயராது உழைத்தார். இவரது சூழலில் ஒரு பிரபலமான சமூகசேவையாளராகவும் அறியப்பட்ட இவர், யாழ்மாவட்ட சனசமூக நிலையங்களின் சமாஜத்திலும் பொறுப்பு வாய்ந்த பதவி வகித்துள்ளார். விளையாட்டுத்துறையிலும் ஈடுபாடு கொண்ட டானியல் அன்ரனி உதைபந்தாட்ட வீரராகவும், பயிற்சியாளராகவும் விளங்கினார்.


வாழ்வின் இறுதிக் காலங்களில், யாழ்ப்பாணத்தின் பத்திரிகை ஒன்றில் 'ஒப்பு நோக்குநராக' பணியாற்றிய டானியல் அன்ரனி இறுதிவரை தான் வாழ்ந்த சமூகத்தை நேசித்தவர்; சமூகத்திற்காக வாழ்ந்தவர். டானியல் அன்ரனி என்ற இலக்கிய கருத்தாவை, சஞ்சிகையாளரை, சமூகசேவையாளரை 'சரிநிகர்' நினைவு கூர்கிறது.

நன்றி - நூலகத்திட்டம்



# முஸ்லீம்களின் தேசிய உணர்வின் வெளிப்பாடும் ஊசாலாடும் காங்கிரஸ் தலைமையும்

மருதூர் பஷீத்



கிழக்கிற்கும் வவுனியா நகரத்திற்குமான உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் முடிவடைந்துவிட்டன. இப்பகுதிகளின் நிர்வாக அலுவல்கள் அனைத்தும் ஆயுதப் பிரிவைச் சேர்ந்த இணைப்பதிகாரிகளின் (coordinating officers) கட்டுப்பாட்டின் கீழேயே இன்னமும் இருக்கின்ற நிலையில், ஆயுதப் படையினர் இப்பகுதிகளை எங்கும் சூழ்திருக்கின்ற நிலையில் இத்தேர்தல்கள் ''சுதந்திரமான'' முறையில் நடத்தி முடிக்கப்பட்டிருக்கின்றன.

இத்தகைய ஒரு அசாதாரண சூழலில் சட்டத்திற்குப் புறம்பான சகல வழிவகைகளையும் பாவித்து இத்தேர்தலை தனக்குச் சாதகமாக மாற்றிக் கொள்ள ஐ.தே.க அரசாங்கம் கடும் பிரயத்தனப்பட்டது. கிழக்கிலும் வவுனியா நகரிலும் தேர்தல்களை நடத்துவது மட்டுமல்ல, தமிழ், முஸ்லீம் மக்கள் பெரும்பான்மையாக வாழ்கின்ற பிரதேசங்களில் தனது வெற்றியை உறுதிப்படுத்துவதும் ஐ.தே.க.வின் முதன்மை இலக்குகளாக அமைந்திருந்தன.

எனினும் தேர்தல் முடிவுகள் ஐ.தே.கட்சியின் முகத்தில் பலமாக அறைந்திருக்கின்றன. அரசு இயந்திரத்தின் முழு ஆதரவும் பங்களிப்பும் இருந்தும், அனைத்து அராஜகங்களைப் பாவித்தும் கூட, தமிழ், முஸ்லீம் மக்கள் பெரும்பான்மையாக வாழ்கின்ற கிட்டத்தட்ட சகல பிரதேசங்களிலும் ஐ.தே.க தோல்வியடைந்துள்ளது. செல்லுபடியான மொத்தத் தமிழ், முஸ்லீம் வாக்குகளில் ஏறக்குறைய 31வீதமான வாக்குகளையும், மொத்தத் தமிழ், முஸ்லீம் வாக்குகளில் வெறும் 19.6வீத வாக்குளையுமே அதனால் பெற முடிந்திருக்கிறது. அத்தோடு மொத்த தமிழ் வாக்குகளில் கிட்டத்தட்ட 40வீதமான வாக்குகள் (125,000க்கும் கூடுதலான வாக்குகள்) திட்டமிட்டு அளிக்கப்படாமலும், நிராகரிக்கப்பட்டும் இருப்பதை அதனால் தடுக்கவும் முடியவில்லை. இவ்வாறு, இடையில் சில காலம் தன்னை மூடியிருந்த போலித் திரைகளை விலக்கிக் கொண்டு தனது சொந்த அப்பட்டமான பேரினவாத முகத்தை மீண்டும் வெளிக்காட்டிய அந்தக் கணத்திலேயே ஐ.தே.க அரசாங்கம் தமிழ், முஸ்லீம் சமூகங்களினால் உதைத்துத் தள்ளப்பட்டிருக்கிறது.

எனினும் வட-கிழக்கு முஸ்லீம்களின் அரசியல் உரிமைகளின் அடிப்படையில் நோக்கினால் இத்தேர்தல் முடிவுகள் ஐ.தே.கட்சிக்கு ஏற்படுத்தியிருக்கின்ற பாதிப்புக்கள் அத்துணை அக்கறைக்குரியதல்ல. மாறாக, வட-கிழக்கு முஸ்லீம்களின் அரசியல் எதிர்காலம், அரசியல் தலைமை என்பவற்றின் மீது ஏற்படக்கூடிய பாதிப்புகளே கவனத்திற்குரியன. இவ்வகையில், குறிப்பாக கிழக்கு மாகாண உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்ற பின்வரும் அம்சங்கள் முதன்மைக் கவனம் பெறுகின்றன.

1) சிறீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் தலைவரின் பதவி துறப்பு குறித்த சவால்
2) சிறீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் தலைமையின் கொள்கைகளில் ஏற்பட்ட மாற்றங்கள்
3) கிழக்கு முஸ்லீம்களின் தேசிய உணர்வின் வெளிப்பாடு.

## முஸ்லீம் காங்கிரஸ் தலைவரின் பதவி துறப்பு குறித்த சவால்:

அம்பாறை மாவட்டத்தில் முஸ்லீம்கள் பெரும்பான்மையாக வாழ்கின்ற ஆறு பிரதேச சபைகளில் ஒன்றில் தோல்வியடைந்தாலும், தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியைத் துறக்கப் போவதாக முஸ்லீம் காங்கிரசின் தலைவர் அறிவித்திருந்தார். தான் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற சமூகத்தின் அரசியல் உணர்ச்சிகளை, தனது நலனுக்காகவும் புகழுக்காகவும் பயன்படுத்த விளைகின்ற அஷ்ரஃப் போன்ற ஒரு அரசியல் தலைவரிடமிருந்து இதைவிட வேறு எந்தவிதமான சவாலும் வெளிப்படமுடியாது: வெறும் சட்டவாத-வார்த்தையாடல்களினால் தனது அரசியல் தலைமையைப் பேணிக்கொள்ள முயற்சிக்கின்ற முஸ்லீம் காங்கிரஸ் தலைவர் இதைவிட மோசமாகத் தனது சமூகத்தின் அரசியல் உணர்ச்சிகளை சிறுமைப்படுத்தியிருக்க முடியாது. தமக்குரிய அரசியல் உரிமைகளை வென்று கொள்ளும் இலக்கை நோக்கித் திரண்டு வருகின்ற வட,கிழக்கு முஸ்லீம்களின் அரசியல் எழுச்சியை முன்னெடுத்துச் செல்லத் திராணியற்றிருக்கின்ற முஸ்லீம் காங்கிரஸ் தலைவர் இந்த எழுச்சியை தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியின் துறப்பு எனும் அளவுக்கு தாழ்த்தியதன் மூலம் வட,கிழக்கு முஸ்லீம்களை மிக அசிங்கமாகக் கேவலப்படுத்தியிருக்கிறார்.

தனது அரசியல் பாதையில் முகம் கொடுக்கக் கூடிய யதார்த்த நிலைமைகளின் கனதியைப் பொறுத்து ஒரு அரசியல் கட்சி அல்லது அதன் தலைவர் திருப்புமுனையாக அமையக் கூடிய அரசியல் தீர்மானங்களை எடுப்பது முக்கியமான விடயம். இத்தகைய தீர்மானங்கள் அக் கட்சி பிரதிநிதித்துவப்படுத்துகின்ற சமூகத்தின் அரசியல் உணர்ச்சியை உயர்த்தவும், தேசிய அளவிலும், சர்வதேசிய ரீதியிலும் அச் சமூகத்தின் பிரச்சினைகள் கவனத்தைப் பெறவும் கூடிய விதத்தில் ஒழுங்கமைக்கப்படுகின்றன. பிரிட்டிஷ் ஆதிக்கத்திற்கு எதிரான காந்தியின் சத்தியாக்கிரகங்களும், அமெரிக்க ஆக்கிரமிப்புக்கு எதிராக வியட்னாம் பிக்குகள் தீக்குளித்தமையும், இஸ்ரேலின் ஆக்கிரமிப்புக்கு எதிராக எழுந்த பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் அன்றைய விமானக் கடத்தல்கள் மற்றும் பாலஸ்தீனியர்களின் அண்மைய 'இன்டிபாதா' போராட்டமும் சிங்கள இனவாத அடக்குமுறையிலிருந்து தமிழ் மக்களை ஒழிப்பதற்காக தமிழர் விடுதலைக் கூட்டணி முன்மொழிந்த தனிநாட்டுக் கோரிக்கையும், வட அயர்லாந்தின் விடுதலைக்காக பொபிசான்ட்சு சிறையில் உண்ணாவிரதம் இருந்து இறந்தமையும் இவ்வகையில் முக்கியத்துவம் பெற்றவை. இவற்றுக்கு மாறாக, முஸ்லீம் காங்கிரஸின் தலைவரின் பதவி துறப்பு பற்றிய இந்த அறிவிப்பு வட,கிழக்கு முஸ்லீம்களின் அரசியல் உணர்வை உயர்த்தும் நோக்கத்துடனோ அவர்களின் அரசியல் உரிமைகளை பெறுவதற்கான போராட்டத்தை தீவிரப்படுத்தும் நோக்குடன் அல்லது அவர்கள் முகம்கொடுக்கின்ற பிரச்சினைகளை வெளிஉலகுக்குத் தெரியப்படுத்தும் எண்ணத்துடனோ முன்மொழியப்படவில்லை. பதிலாக இந்தச் சவாலை, தனது சொந்த செல்வாக்கின் மீதான ஒரு சோதனையாகவே முஸ்லீம் காங்கிஸ் தலைவர் அர்த்தப்படுத்தியிருக்கிறார்.

எனினும் முழு இலங்கை முஸ்லீம்களினதும் தேசியத் தலைவர் என மகுடம் சூட்டிக் கொண்ட முஸ்லீம் காங்கிரஸின் தலைவர் கிழக்கின் **ஏனைய மாவட்டங்களைக் கைவிட்டுவிட்டு** அம்பாறை .மாவட்டத்தின் ஆறு பிரதேச சபைகளின் வெற்றிக்குள் தனது செல்வாக்கை எல்லைப்படுத்திக் கொண்டதன் மூலம் அனைத்து இலங்கை முஸ்லீம்களினதும் தேசியத் தலைவராக இருப்பதற்குத் தான் தகுதியற்றவர் என்பதையே உண்மையில் நிரூபித்திருக்கிறார்.

முஸ்லிம் காங்கிரஸ் ஒரு அரசியல் கட்சியாக பதிவு செய்யப்பட்டதிலிருந்து இந்த உள்ளூராட்சித் தேர்தல்வரை வரை தென்னிலங்கையில் மட்டுமன்றி வட-கிழக்கிலும் கூட அதன் செல்வாக்கில் ஏற்பட்டு வந்திருக்கின்ற வேகமான சரிவுப்போக்கைக் கவனத்தில் கொள்ளும் போது முஸ்லீம் காங்கிரஸ் தலைவரினது தலைமையின் பலவீனம் இன்னும் தெளிவாகப் புலப்படும். இதுவரைக்கும் இலங்கை முஸ்லீம்களின் குறிப்பாக வட-கிழக்கு முஸ்லீம்களின் -அரசியல் உரிமைகள் விடயத்தில் எவ்வித காத்திரமான பங்களிப்பையும் செய்யாததோடு தனது கட்சியையும் வழிநடத்திச் செல்லும் திறனற்றிருக்கின்ற முஸ்லீம் காங்கிரஸ் தலைவர், தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை மட்டும் அல்ல கூடவே **கட்சித் தலைமைப் பதவியையும் துறப்பது தான்** உண்மையிலேயே பொருத்தமான முடிவாக இருக்கும். இத்தகைய முடிவுதான் நேர்மையான சமூக அக்கறையுள்ள ஒரு அரசியல் தலைவருக்குரிய அதியுயர் பண்பின் வெளிப்பாடாக அமையக் கூடியது.

## முஸ்லீம் காங்கிரஸ் தலைமையின் கொள்கைகளில் ஏற்பட்ட மாற்றங்கள்:

கிழக்கு முஸ்லீம்கள் மாத்திரமன்றி தமிழ் மக்களும் கூட குழப்பமடையும் வண்ணம் முஸ்லீம் காங்கிரஸின் தேர்தல் பிரச்சாரங்கள் திடுதிடுப்பென்று மாற்றம் பெற்றன. சிங்களப் பேரினவாதம் பற்றி மிகக் கடுமையான கருத்துக்களை வெளியிட்ட முஸ்லீம் காங்கிரஸ் தலைமை ''தமிழ் பேசும் மக்கள்'' என்று முஸ்லீம்களையும் இனம் கண்டது. இவற்றை விட இன்னும்பலபடி மேலே போய் ''தமிழீழம்'' பெறுவது குறித்தும் முஸ்லீம் காங்கிரஸ் உணர்ச்சிகரமாகப் பேசியது; அத்துடன் வட-கிழக்கு இணைப்பின் அவசியம் குறித்தும் அத்தகைய இணைப்பைத் தீர்மானிக்கும் உரிமை இந்நாட்டின் ஜனாதிபதிக்கோ, பிரதமருக்கோ அல்லது சிங்கள மக்களுக்கோ இல்லை என்றும், இந்த உரிமை கிழக்கு முஸ்லீம்களுக்கே உரியது என்றும் பேசியது: இவை அனைத்துமே இதுவரை முஸ்லீம் காங்கிரஸ் தலைமை வெளிப்படுத்திய கொள்கைகளுக்கு முற்றிலும் மாறானவை.

தமிழ்க் கட்சிகள் தமது அரசியல் தீர்மானங்களிலும், தீர்வுக்கான யோசனைகளை முன்வைக்கும் போதும் ''தமிழ் பேசும் மக்கள்'' என்ற பொது வரையறைக்குள் வட-கிழக்கு முஸ்லீம்களை இணைத்த சந்தர்ப்பங்களில் எல்லாம், முஸ்லீம் காங்கிரஸ் தலைமை அதை மிகக் கடுமையாக எதிர்த்து வந்திருக்கிறது. மேலும் முஸ்லீம் காங்கிரஸ் தலைமை இதற்கு முன்னர் எந்தச் சந்தர்ப்பத்திலும் தமிழீழம் பற்றி தர்க்கரீதியாக பரிசீலிக்கவில்லை. இதைவிட வடக்கையும், கிழக்கையும் தனித்தனியாகப் பிரிப்பது சம்பந்தமான தனது வாதங்களின் போதெல்லாம் இந்த உணர்ச்சிகரமான விவகாரத்தில் கிழக்கு முஸ்லீம்களை பலிக்கடாவாக்க வேண்டாம் என்றும், அப்படியொரு முடிவை நடைமுறைப்படுத்த விரும்பினால் எந்த அவசரகால சட்டவிதிகளுக்கமைய இணைப்புக்கான அங்கீகாரத்தை ஜனாதிபதி வழங்கினாரோ அதே விதிகளைப் பாவித்து அவரே பிரிவினையையும் செய்யட்டும் என்றே முஸ்லீம் காங்கிரஸ் தலைமை இதுவரை பேசி வந்திருக்கிறது. முஸ்லீம் காங்கிரஸ் தலைமையின் இத்தகைய நிலைப்பாடுகள் இந்த உள்ளூராட்சித் தேர்தல் பிரச்சாரங்களில் முற்றாக மாறி விட்டது. இதற்கு இனப்பிரச்சினை குறித்தும் சிறுபான்மை சமூகங்கள் சம்பந்தமாகவும் ஜனாதிபதி அண்மைக்காலங்களில் வெளிப்படுத்தி வருகின்ற கருத்துக்களே காரணம் என்று முஸ்லீம் காங்கிரஸ் விளக்கம் அளித்தது. சிங்களப் பேரினவாதம் குறித்து முஸ்லீம் காங்கிரஸ் மேற்கொண்ட இத்தகைய நிலைப்பாடுகள் வட-கிழக்கு முஸ்லீம்களால் மிகுந்த கவனத்துடன் பரிசீலிக்கப்பட வேண்டிய அளவுக்கு முக்கியத்துவம் பெற்றனவையாக இருந்தன. ஒரு நாட்டில் இனவாதமானது மேலும் மேலும் ஆழமாகவும் விசாலமாகவும் பரப்பப்பட்டு வருகின்ற போது அதனோடு எவ்வித சமரசத்திற்கும் இடமில்லாது அதற்கெதிராக உறுதியாகப் 'போராடுவதொன்றே அடக்கப்பட்ட இனங்களின் விடுதலைக்குரிய சரியான மார்க்கம் என்பதை வரலாறு எப்போதும் நிரூபித்து வந்திருக்கிறது. அதே போன்று ஒரே இனவாத சக்திகளினால் ஒன்றுக்கு மேற்பட்ட சமூகங்கள் ஒடுக்குமுறைக்கு உள்ளாக்கப்படுகின்ற போது, அந்த சமூகங்களிடையே ஏற்படக் கூடிய அரசியல்ரீதியான ஒற்றுமையும் உடன்பாடுகளும், அவை தமது உரிமைகளை வென்று கொள்வதில் காத்திரமான தாக்கங்களை ஏற்படுத்தியிருக்கின்றன என்பதையும் வரலாறு வெளிபடுத்தியிருக்கிறது. நடப்புகால உதாரணமாக முஸ்லீம், கிறிஸ்தவர் வேறுபாடின்றி ''பாலஸ்தீனியர்கள்'' என்ற [illegible]துவரையறைக்குள் இணைந்து இஸ்ரேலின் இனஒடுக்குமுறைக்கு எதிராகப் போராடுவதையும், முஸ்லீம், கிறிஸ்தவர் வேறுபாடின்றி ''கறுப்பர்'' என்ற பொது வரையறைக்குள் ஐக்கியப்பட்டு அமெரிக்கா, ஐரோப்பியா நீக்ரோக்கள் நிறவெறிக்கு எதிராகப் போராடுவதையும் குறிப்பிடலாம். இந்த அர்த்தத்தில் ''தமிழ் பேசும் மக்கள்'' என்ற அடையாளத்தையும் ''தமிழீழம்'' பற்றிய கருத்தாக்கத்தையும் ஏற்றுக் கொள்ள முனைந்த முஸ்லீம் காங்கிரஸ் தலைமையின் மாற்றப்போக்கு வட-கிழக்கு முஸ்லீம்களின் அரசியல் வாழ்வில் காத்திரமான பாதிப்புகளை ஏற்படுத்தக்கூடியளவுக்கு முக்கியத்துவம் பெற்றவையாகத் தெரிந்தன.

ஆனால் இந்தக் கொள்கை மாற்றங்கள் தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்று தேர்தலில் வெற்றியடைவதை இலக்காகக் கொண்ட வெறும் அரசியல் தந்திரமே என்பதை தேர்தல் முடிந்த அடுத்த கணத்திலேயே அஷ்ரஃப் வெளிப்படுத்தியிருக்கிறார். 6.3.94ல் வெளியான The Sunday Times என்னும் ஆங்கில வாரப்பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் முஸ்லீம் காங்கிரசைத் தோற்கடிப்பதற்காக தமிழ் மக்கள் ஐ.தே.க.வுடன் இணைந்திருக்கிறார்கள் என்று சொல்லிவிட்டு அவர் பின்வருமாறு குறிப்பிட்டிருக்கிறார்.

''கிழக்குத் தமிழ் மக்கள் கிழக்கைப் பிரிப்பதற்கான அங்கீகாரத்தை அனேகமாக வழங்கியிருக்கிறார்கள். தமிழ் மக்கள் வட-கிழக்கு இணைப்பை விரும்பவில்லையானால் அந்நிலையில் நாங்களும் தனியான முஸ்லீம் மாகாணத்தை விரும்ப மாட்டோம். ஒரு இணைந்த சூழ்நிலையில் நாங்கள் முஸ்லீம் மாகாண சபையை கேட்கிறோமே தவிர வேறுவிதமாக அல்ல.''

இவ்வாறு கூறியிருப்பதன் மூலம் தமிழ் பேசும் மக்கள், தமிழீழம், வட-கிழக்கு இணைப்பு போன்ற தேர்தல்காலத்து உணர்ச்சிகரமான வார்த்தைகளையெல்லாம் Γ தலைவர் கைகழுவிவிட்டு விட்டார். உண்மையில் அவர் இந்தப் பேட்டியில், குறிப்பிட்டிருப்பதற்கு முற்றிலும் மாறாகவே தமிழ் மக்களின் வாக்களிப்பு அமைந்திருக்கிறது.

> வட-கிழக்கு முஸ்லீம்களுக்கென தனியான அதிகார அலகுக்கான அவசியம் (அது மாகாண சபையாகவோ அல்லது வேறு எந்த வடிவில் இருந்தாலும்) வட-கிழக்கு இணைப்பினால் எழுந்ததல்ல; மாறாக சிங்கள தமிழ் அடக்குமுறைகளில் இருந்து தம்மை விடுவித்துக் கொள்ள விளைகின்ற வட-கிழக்கு முஸ்லீம்களினது அரசியல் அபிலாஷைகளின் தர்க்கரீதியான விளைவாகவே இந்தத் தனியான அதிகார அலகுக்கான கோரிக்கை எழுந்திருக்கிறது. இந்த உயிர்த்துடிப்பான கோரிக்கையை வெறும் முஸ்லீம் பேரம் பேசலுக்காக பாவிப்பதற்கோ அல்லது பலவீனத்தின் காரணமாக மக்களை கைவிடும்படி கோருவதற்கோ முஸ்லீம் காங்கிரஸ் தலைவருக்கு எந்த உரிமையும் கிடையாது.

→15

நன்றி - நூலகத்திட்டம்



## முஸ்லீம் ...

கிழக்கில் தமிழ், முஸ்லீம் மக்கள் பெரும்பான்மையாக வாழ்கின்ற 27 உள்ளூராட்சி சபைகளில் வட-கிழக்கு **இணைப்பை இன்னமும் கோரி நிற்கின்ற** தமிழ் கட்சிகளுக்கு 130,807 வாக்குகளும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு 111,203 வாக்குகளுமே கிடைத்திருக்கின்றன. (ஐ.தே.கட்சிக்கு கிடைத்துள்ள இந்த வாக்குகளில் பெரும்பாலானவை முஸ்லீம் வாக்குகள் என்பது தெளிவானது.) அத்தோடு தமிழ் மக்களை வாக்களிப்பில் கலந்து கொள்ள வேண்டாம் அல்லது வாக்குச் சீட்டுக்களை பழுதாக்குங்கள் என்று கோரிக்கை விடுத்த **வட-கிழக்கு இணைப்பை வலியுறுத்துகின்ற** தமிழ் கட்சிகளின் வேண்டுகோளுக்கிணங்க 125,000க்கும் அதிகமான தமிழ் வாக்காளர்கள் வாக்களிப்பில் கலந்து கொள்ளாமலும் வாக்குகளை பழுதாக்கியும் உள்ளனர். இவற்றைவிட தேர்தலில் போது ஐ.தே.க அரசாங்கம் மேற்கொண்ட அராஜகங்களைப் பற்றி தெரிந்துள்ள முஸ்லீம் காங்கிரஸ் தலைவருக்கு பர்துகாப்பு படையினராலும், படையினருடன் இணைந்துள்ள சில தமிழ் குழுக்களினாலும் கிழக்குத் தமிழ் மக்களுக்கு விடுக்கப்பட்ட எச்சரிக்கைகளும் நிச்சயம் தெரிந்திருக்கும். இந்நிலையில் இத்தகைய அச்சுறுத்தல்களி[illegible] ஐ.தே.கட்சிக்கு கிடைக்கப் பெற்ற [illegible]ச் சொற்பமான தமிழ் வாக்குகளை, வட-கிழக்குப் பிரிவினைக்கு தமிழ் மக்கள் வழங்கியிருக்கின்ற அங்கீகாரம் என்று முஸ்லீம் காங்கிரஸ் தலைவர் முடிவுகட்டுவது அறியாமையின் விளைவல்ல. மாறாக திட்டமிட்டரீதியிலான ஒரு உள்நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டதன் விளைவு இது. **அதாவது வடக்கு கிழக்குப் பிரிவினைக்கு கிழக்கு தமிழ் மக்களைக் காரணம் காட்டுவதன் மூலம், வட-கிழக்கு முஸ்லீம்களின் அரசியல் கோரிக்கையான தனியான முஸ்லீம் மாகாணசபைக்காகப் போராடுவதை கைவிடுவதற்கு முஸ்லீம் காங்கிரஸ் தலைவர் முனைகிறார்.**

[illegible]னால் வட-கிழக்கு முஸ்லீம்களுக்[illegible]ன தனியான அதிகார அலகுக்கான அவசியம் (அது மாகாண சபையாகவோ அல்லது வேறு எந்த வடிவில் இருந்தாலும்) வட-கிழக்கு இணைப்பினால் எழுந்ததல்ல; மாறாக சிங்கள தமிழ் இணைந்த அடக்கு முறைகளில் இருந்து தம்மை விடுவித்துக் கொள்ள விளைகின்ற வட-கிழக்கு முஸ்லீம்களினது அரசியல் அபிலாஷைகளின் தர்க்கரீதியான விளைவாகவே இந்தத் தனியான அதிகார அலகுக்கான கோரிக்கை எழுந்திருக்கிறது. இந்த உயிர்த்துடிப்பான கோரிக்கையை வெறும் முஸ்லீம் பேரம் பேசலுக்காக பாவிப்பதற்கோ அல்லது பலவீனத்தின் காரணமாக மக்களை கைவிடும்படி கோருவதற்கோ முஸ்லீம் காங்கிரஸ் தலைவருக்கு எந்த உரிமையும் கிடையாது.

### கிழக்கு முஸ்லீம்களின் தேசிய உணர்வின் வெளிப்பாடு

தேர்தல் என்பது ஒரு சமூகத்தின்/ சமூகப்பிரிவின் அரசியல் கொதிநிலையை அளவிடுவதற்கான வெப்பமானியாக விளங்குகின்றது. எனினும் தேர்தல் எத்துணை சுதந்திரமாகவும், ஜனநாயகரீதியாகவும் நடத்தப்படுகின்றது என்பதை பொறுத்தே இது நடைமுறை உண்மையாகின்றது. அரசு இயந்திரமும் அதைக் கட்டுப்படுத்துகின்ற பிரிவினரும் தலையீடு செய்வதன் மூலம் தேர்தலை வெறும் கேலிக்கூத்தாக மாற்றவும் முடியும். நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தல்கள் இத்தகைய கேலிக்கூத்தாகவே மாறியிருக்கின்றது. துப்பாக்கி முனையிலான வேட்பாளர் நியமனங்களும், எச்சரிக்கை மற்றும் மிரட்டல்களும் வாக்குச்சீட்டு களவுகள், லஞ்சம், வாக்கெடுப்பு நிலையங்களில் வன்முறைத்தாக்குதல்கள் மற்றும் கள்ள வாக்குப் பதிவுகளும்....என ஒரு கேலிக்கூத்தின் மொத்த உருவம் இந்த உள்ளூராட்சித் தேர்தல்களில் வெளிப்பட்டிருக்கிறது.

இவ்வாறான ஒருநிலையிலும், கிழக்கு முஸ்லீம் வாக்காளர்களில் கிட்டத்தட்ட 39%மானோர் முஸ்லீம் காங்கிரசுக்கு வாக்களித்திருப்பது மிகுந்த முக்கியத்துவத்துக்குரியது. முஸ்லீம் காங்கிரஸ் தலைவர் தனது சொந்தத் தோல்வியை ஒப்புக்கொண்டு பாராளுமன்ற உறுப்பினர் பதவியைத் துறப்பாரோ இல்லையோ? அதை விட இங்கு கிழக்கு முஸ்லீம்களின் தேசிய உணர்வு மீண்டுமொருமுறை மிகக்காத்திரமாக வெளிப்பட்டிருக்கின்றது என்பதே முக்கியத்துவம் பெறுகின்றது. இந்த உண்மையை முஸ்லீம் காங்கிரஸ் தலைமை ஒரு போதும் புரிந்து கொள்ள மாட்டாது. 8 வருடங்களுக்கு முன்பு முஸ்லீம் காங்கிரசுக்கென வட-கிழக்கில் ஒரு வாக்காளர்களும் இருக்கவில்லை. இப்போது ஐ.தே.க.வின் இத்தனை அராஜகங்களுக்கும் மத்தியிலும் ஸ்ரீ.ல.சு.க.யின் முயற்சிகளுக்கிடையிலும் முஸ்லீம் காங்கிரஸ் 95,207 வாக்குகளைப் பெற்றிருக்கிறது என்பது ஒரு அற்புத நிகழ்வோ அல்லது முஸ்லீம் காங்கிரஸ் தலைமை மீது கிழக்கு முஸ்லீம்களுக்குள்ள அதீத வழிபாட்டின் வெளிப்பாடோ அல்ல. மாறாக இது **கிழக்கு முஸ்லீம்களின் தேசிய உணர்வின் தெளிவான வெளிப்பாடு. தமக்கென சொந்த அரசியல் அதிகாரங்களை வேண்டி நிற்கின்ற, தமது அரசியல் தலைவிதியை தமது சொந்தக் கரங்களால் எழுத முனைகின்ற தேசிய உணர்வின் வெளிப்பாடு.**

தமக்கென தனியான அதிகார அலகைப் பெற்றுத் தருவதற்கான போராட்டத்தை முஸ்லீம் காங்கிரஸ் முன்னெடுத்துச் செல்லும் என்று கிழக்கு முஸ்லீம்கள் இன்னமும் நம்புகிறார்கள். அவர்கள் முஸ்லீம் காங்கிரசைத் தமது அரசியல் உணர்வின் குவிமையமாகவே இன்னமும் கருதுகிறார்கள். ஆகவே முஸ்லீம் காங்கிரசைப் பாதுகாக்கவும், பேணவும் அவர்கள் விரும்புகிறார்கள். **அதன் தலைமையில் யார் இருந்தாலும் கட்சி பாதுகாக்கப்பட வேண்டும்** என்ற உணர்வே எந்த முஸ்லீம்களிடையேயும் மேலோங்கி இருக்கின்றது. இத்தகைய உணர்வின் வெளிப்பாடே இந்த உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள். கிழக்கு முஸ்லீம்கள் முஸ்லீம் காங்கிரஸ் தலைவர் மீது கண்மூடித்தனமான நம்பிக்கை வைக்கவில்லை. அவர்கள் இன்னமும் அஷ்ரஃப்பின் தலைமையை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்றால் அதற்குரிய ஒரே காரணம் தமது அரசியல் அபிலாஷைகளை கொள்கையளவிலேனும் ஓரளவுக்கு அவர் வெளிப்படுத்துகிறார் என்பதே.

வட-கிழக்கு முஸ்லீம்களிடையே நிலவுகின்ற அரசியல் உணர்ச்சியை முஸ்லீம் காங்கிரஸ் தலைமை மாத்திரமன்றி இத்தலைமையை எதிர்க்கின்றவர்களும் புதிய அரசியல் தலைமையாக தம்மை உருவாக்க முனைகின்றவர்களும் கூட சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. குறிப்பாக முற்போக்கு முஸ்லீம் ஐக்கிய முன்னணி என்ற பெயரிலும் சுயேட்சைக்குழுவாகவும் அம்பாறை மாவட்டத்தில் போட்டியிட்ட முஸ்லீம் பிரிவினர் இத்தேர்தலில் அடைந்திருக்கின்ற படுதோல்வி இதைத் தெளிவாகப் புலப்படுத்துகின்றது. அவர்கள் எவ்வளவுதான் முஸ்லீம் காங்கிரஸ் தலைவர்களைத் தாக்கிய போதிலும், அவை எவ்வளவுதான் உண்மை என்ற போதிலும் அவர்களால் தாம் போட்டியிட்ட இடங்களிலுள்ள முஸ்லீம்களது மிகச் சிறிய ஆதரவைக்கூடப் பெறமுடியவில்லை. ஏனெனில் கிழக்கு முஸ்லீம்களிடையே நிலவுவது முஸ்லீம் காங்கிரஸ் தலைவர் மீதான குருட்டு வழிபாடல்ல; பதிலாக தேசிய உணர்வும் இந்த உணர்வைக் கொள்கையளவிலேனும் வெளிப்படுத்துகின்ற முஸ்லீம் காங்கிரஸ் மீதான நம்பிக்கையுமே. இந்நிலையில் முஸ்லீம் காங்கிர்ஸ் தலைவர் மீது தொடுக்கப்படுகின்ற தனிப்பட்ட தாக்குதல்களினால் வட-கிழக்கு முஸ்லீம்களின் அரசியல் உணர்வில் -தேசிய உணர்வில்- எவ்வித மாற்றமும் ஏற்படப் போவதில்லை. எனவே முஸ்லீம் காங்கிரஸ் தலைமையின் பிடியிலிருந்து வட-கிழக்கு முஸ்லீம்களை விடுவித்து அவர்களை சரியான இலக்கில் வழிநடத்திச் செல்ல எவரேனும் விரும்பினால் அவர்கள் செய்ய வேண்டியது முஸ்லீம் காங்கிரஸ் தலைமை மீது தனிப்பட்ட தாக்குதல் தொடுப்பதல்ல; மாறாக வட-கிழக்கு முஸ்லீம்களின் தனியான, சொந்த அரசியல் உரிமைக்கான போராட்டத்தை உறுதியாகவும் தொடர்ச்சியாகவும் நேர்மையாகவும் முன்னெடுத்துச் செல்வதே. இத்தகைய ஒரு தலைமைக்கான தேவையை வட-கிழக்கு முஸ்லீம்கள் மட்டுமல்ல ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரசும் கூட வேண்டிநிற்கின்றது என்பதை இத்தேர்தல் வெளிப்படுத்தியிருக்கின்றது. ●

## காலம் கடந்த....

யம். இவ்விடயத்தில் தமிழ்த்தலைவர்கள் வரலாற்றுரீதியாகவே கோட்டைவிட்டிருக்கின்றார்கள். சோல்பரி அரசியல் திட்டத்தின் சிறுபான்மையோர் காப்பீடுகள் 1981 மாவட்ட அபிவிருத்திச் சபைச் சட்டம். இலங்கை இந்திய ஒப்பந்தம், 13வது திருத்தச்சட்டம் என்பன இதற்கு நல்ல உதாரணங்களாகும். இங்கு அதிகாரங்கள் எழுத்தில் மட்டும் இருந்தால் போதாது. அதனைப் பிரயோகிப்பதற்கான பாதுகாப்பும் அவசியமாகும். எமது கடந்தகாலத் தலைமைகள் எழுத்தில் அவை இருப்பதற்கு செலுத்திய கவனமளவுக்கு பிரயோகித்தலில் உள்ள பாதுகாப்பில் கவனம் செலுத்தவில்லை. இதனாலேயே அரசுக்கு ஒரு கையால் கொடுத்துவிட்டு மறுகையால் பறிக்கின்ற நிலை இலவாகியது.

எனவே அதிகாரங்களை தெளிவாக வரையறுத்து பிரயோகித்தலுக்கான பாதுகாப்பிலும் கவனம் செலுத்தி அரசியலமைப்பை உருவாக்குதல் வேண்டும். இதற்கு சுவிஸ், சோவியத் யூனியன், அமெரிக்க அரசியலமைப்புகளில் சமஸ்டி அரசுகளுக்குள்ள அதிகாரங்களை கவனத்தில் கொள்ளலாம்; எந்த வகையிலும் இந்திய அரசியலமைப்பை மாதிரியாக கொள்ளக்கூடாது. இந்திய அரசியலமைப்பு ஒரு சமஸ்டி அரசுக்குரிய அரசியலமைப்பு அல்ல. அவ் அரசியலமைப்பினால் தனது நாட்டின் தேசிய இனப்பிரச்சினையைத் தீர்த்து வைக்க முடியவில்லை. பஞ்சாப், அசாம், காஷ்மீர் பிரச்சினைகள் இதற்கு சிறப்பான உதாரணங்களாகும்.

இவ்விடயம் தொடர்பாக கவனத்தில் கொள்ள வேண்டியவையாக பின் வருவனவற்றை குறிப்பிடலாம.

1) அதிகாரப்பிரயோகத்திற்கு மத்திய அரசில் தங்கியிருக்கும் நிலை முற்றாக நீக்கப்பட வேண்டும். அதாவது அதிகார பிரயோகத்தில் ஜனாதிபதி →

## சரிநிகரின் நாட்குறிப்பு

மார்ச் -14

பருத்தித்துறை முனைப்பகுதிக் கடலில் கடந்த சனிக்கிழமை காலை 7 மணியளவில் படகில் மீன்பிடித்துக் கொண்டிருந்த இரு மீனவர்மீது கடற்படையினர் நடத்திய தாக்குதலில் மீனவர் ஒருவர் பலியானார்.

மன்னார் விடத்தல்தீவுப் பகுதியில் விடுதலைப்புலிகளின் முகாம்கள் மீது ஆகாயப்படை விமானங்கள் சனியன்று குண்டு வீச்சுத்தாக்குதலை மேற்கொண்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

மார்ச்-15

மன்னார் தாம்போதி பொலிஸ் காவல் அரண்மீது புலிகள் நடாத்திய தாக்குதலில் 2 பொலிஸார் மரணம். கொல்லப்பட்டவர்களின் தலைகள் துண்டிக்கப்பட்டு எடுத்துச் செல்லப்பட்டதாகவும் தெரியவருகின்றது.

மார்ச் -16

மன்னார்த்தீவுக்குள் புலிகள் மூன்றாவது தடவையாக மேற்கொண்ட தாக்குதல் பாதுகாப்புப்படையால் முறியடிக்கப்பட்டதாகத் தெரிகிறது.

ஆனையிறவுக்கு தென்கிழக்கே விமானப்படையினர் மேற்கொண்ட தாக்குதலால் 8 தீவிரவாதிகளின் சடலங்கள் ஏரியில் மிதந்ததாக விமானப்படை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. ஆனால் இச்சடலங்கள் அப்பாவிப் பொதுமக்களுடையதே எனத் தெரிகிறது.

மார்ச் 17

யாழ்குடாநாட்டின் மண்டைதீவில் இருந்து மேற் கொள்ளப்பட்ட ஷெல்தாக்குதலில் அப்பகுதியைச் சேர்ந்த நால்வர் பலி என அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

புத்தளம் -மன்னார்மாவட்ட எல்லைக் கரையோரப் பகுதிக்கு அப்பால் இருக்கும் குதிரைமுனைக்கு அருகில் உள்ள கடற்பகுதியில் 5 மீனவர்கள் சுட்டுக் கொலை. இவர்களைப் புலிகளே சுட்டுக் கொன்றார்கள் என அரசாங்கம் குற்றம் சாட்டி உள்ளது.

திருகோணமலை மாவட்டத்தின் மூதூர்ப்பகுதி தோப்பூர் கிராமத்தில் புலிகளுக்கும் புளொட் இயக்கத்தினருக்குமிடையே ஏற்பட்ட மோதலில் புளொட்டைச் சேர்ந்த ஒருவர் பலி.

மார்ச் 18

மட்டக்களப்பு கதிரவெளிப் பகுதியில் பதுங்கியிருந்த பாதுகாப்பு படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு 19 புலிகள் கொல்லப்பட்டதாகப் பாதுகாப்புப் பிரிவின் நடவடிக்கை தலைமைச் செயலகம் அறிவித்துள்ளது.

மார்ச் 19

கிளிநொச்சியில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த வவுனியா கமாண்டர் ரவி. இராணுவத் தலைவர் அலன் ஆகியோர் கொல்லப்பட்டதாகப் பாதுகாப்புப்படை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மட்டு மாவட்டத்தின் காந்திபுரம் பகுதியில் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த கிருஷ்ணன் கோபால் என்பவரும் பிறிதொருவரும் சுட்டுக் கொல்லப்பட்டதாக பாதுகாப்பு பிரிவின் அறிக்கை தெரிவித்துள்ளது.

மார்ச் 20

தொண்டமனாறு பெரிய மலைப்பகுதியில் இரு பொம்மர்கள், குண்டுவீச்சுத் தாக்குதல்களை நடாத்தியுள்ளன.

மார்ச் 22

ஆனையிறவுத் தாக்குதலில் 3 இராணுவத்தினரும் 25 புலிகளும் பலியானதாகவும் இருவர் காயமடைந்ததாகவும் இராணுவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மூதூரைச் சேர்ந்த வி.சிறியாவதி, கே.இராமச்சந்திரன் ஆகியோர் இனம் தெரியாதோரால் சுடப்பட்டதாகத் தெரியவருகிறது.

மார்ச் 24

வெலிஓயாவில் நடந்த மோதலில் இரண்டு தீவிரவாதிகளை படையினர் கொன்றுள்ளதாக நடவடிக்கைச் செயலகம் அறிவித்துள்ளது.

மார்ச் 25

மார்ச் 23இல் இராணுவ ஜீப் மீது பழுகாமத்தில் நடத்தப்பட்ட குண்டுவீச்சை அடுத்து அன்று இரவு 5.30-6.30ற்கிடையில் அக்கிராம மக்கள் மீது நடத்தப்பட்ட மோசமான தாக்குதல் தொடர்பாக விசாரணையை மேற்கொள்ளுமாறு தமிழர் விடுதலைக் கூட்டணி பா.உ ஜோசப் பரராஜசிங்கம் கேட்டுள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் அங்கொடவில் பாதுகாப்பு படையினருக்கும் புலிகளுக்கும் இடையில் நடைபெற்ற மோதலில் 5 புலிகள் கொல்லப்பட்டதாக உத்தியோகபூர்வ வட்டாரங்கள் தொடர்கின்றன.

மார்ச் 26

ஆனையிறவு இராணுவ முகாம் பகுதியில் நடைபெற்ற மோதலில் வன்னிமாவட்ட புலிகள் துணை அரசியல் பொறுப்பாளர் ஞானம் படுகாயம் அடைந்துள்ளார்.

புத்தளம் மாவட்ட கரையோரப் பகுதிப் பொலிஸாருக்கு அதிவேக மோட்டார் படகுகள் வழங்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மார்ச் 27

திருக்கோவில் தாளையடிவட்டை காட்டுப்பகுதியில் ரோந்து சென்ற படையினர் மீது புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் 3 இராணுவத்தினர் பலி.

மார்ச் 28

வெலிஓயா எத்தாவெருனுவெவ இராணுவ முகாம்மீது புலிகள் நடாத்திய தாக்குதலில் இரண்டு இராணுவத்தினர் பலி.

முரசுமோட்டை விமானத்தாக்குலில் 3 பேர் மரணம்.

மார்ச் 29

வெலிஓயாவில் கஜபாகுபுர புலிகள் முகாம் மீது நடாத்தப்பட்ட தாக்குதலில் முகாம் நிர்மூலமாக்கப்பட்டதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

வெலிஓயா தண்ணிமுறிப்பு குளத்தில் 9 புலிகள் பாதுகாப்புப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர் என இராணுவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மார்ச் 30

திருமலை சோமபுரவில் நடைபெற்ற மோதலில் புலிகள் தரப்பில் இருவர் கொல்லப்பட்டதாக நடவடிக்கைச் செயலகம் அறிவித்துள்ளது.

நன்றி - நூலகத்திட்டம்

REGISTERED AS A NEWS PAPER IN SRILANKA

# சரிநிகர்

## யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வருவதில் அரசுக்கு விருப்பமில்லை

இந்த அரசாங்கத்திற்கு வடக்கில் நடந்து கொண்டிருக்கும் யுத்தத்தை நிறுத்துவதில் அக்கறை கிடையாது. யுத்தம் இப்போதெல்லாம் ஒரு நாளாந்த நடைமுறையாகிவிட்டது. யுத்தத்திற்கான ஆயுதங்களைக் கொள்வனவு செய்வதில் லட்சக்கணக்காக கமிஷன் பெற்றுக் கொள்ளும் நபர்கள் இந்த யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்படுவதை எதிர்த்து வருகிறார்கள்.

தென்மாகாண சபை தேர்தலில் வெற்றி பெற்றபின், ஜனாதிபதி பதவிக்கான சுதந்திரக் கட்சி வேட்பாளர் இவரே எனக் கருதப்படும் திருமதி சந்திரிகா பத்திரிகையாளர்களிடம் பேசும் போது இவ்வாறு தெரிவித்தார். வடக்கு கிழக்குப் பிரச்சினை தொடர்பாகப் பேசும் போது அவர் மேலும் தெரிவித்ததாவது கடந்த சில காலங்களாக நடந்துவ



சந்திரிகா

ரும் யுத்தம் காரணமாக நெருக்கடிக்குள்ளாகியிருக்கும் வடக்கு கிழக்கு மாகாண மக்கள் அங்கு ஒரு அமைதியான ஜனநாயக சூழல் வருவதை எதிர்பார்க்கிறார்கள். ஒரு புறம் புலிகளின் 'அராஜகமும் மறுபுறம் அரசபடைகளின் நடவடிக்கைகளுமாக இரண்டுக்கும் நடுவில் அவர்கள் சிக்கித் தவிக்கிறார்கள். அங்குள்ள மக்களின் பிரச்சினையைத் தீர்க்க யுத்தத்தை நிறுத்தி ஒரு அரசியல் தீர்வு காணப்படுவது அவசியமாகும் இது ஒரு அரசாங்கத்தின் கடமையாகும் என்று தெரிவித்தார்.

பிரபாகரனுடன் பேசத் தயார் 'என்று பிரதமர் கூறுகிறார். ஆனால் பேசவென்று முயன்ற சபாநாயகரைப் பேசவிடாமல் தடுத்துவிட்டார்கள். இது இப்பிரச்சினை தொடர்பாக அரசுக்கு ஒரு தெளிவான நிலைப்பாடு கிடையாது என்பதினையும், இப்பிரச்சினையைத் தீர்க்க அது தயாரில்லை என்பதையுமே காட்டுகிறது!.

### ஆயுத.....

கையில் பிரயாணம் செய்ய வேண்டும் எனக் கூறி வசவுகளுடன் மேலே ஏற்றியுள்ளார்.

தொடர்ந்து இந்த புகையிரத நிலைய அதிபருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்ட 'அந்த பயணி' தான் இறங்கிச் செல்ல வேண்டிய நிலையமாகிய வெயாங்கொடை வரும் வரை அவரை இயற்கைக் கடன் கழிக்கச் செல்வதற்குக் கூட விடாமல் ஆயுதமுனையில் தடுத்து வைத்திருந்தார்.

''நீயும் ஒரு சிங்களவன் என்றபடியால் உன்னை இந்த அளவில் விட்டு வைக்கிறேன். நான் இறங்கிப் போகும் வரையில், கட்டிலில் இருந்து இறங்கவோ, கதவைத்திறந்து கொண்டு வெளியில் போகவோ முடியாது. மீறிமுயற்சி செய்வாயானால் இவைதான் உன்னோடு கதைக்கும்'' என மிரட்டிய அந்தப் பயணி தன்னிடமிருந்த கைக்குண்டையும் கைத்துப்பாக்கியையும் காட்டினாராம்.

வாயடைத்து, பீதியால் உறைந்து போன் புகையிரத நிலைய அதிபர் நெஞ்சு படபடக்க படுக்கை ஆசனத்திலேயே கிடந்தாராம். வெயாங்கொடை ரயில் வந்தடையும் வரை அசையவே இல்லையாம்.

புகையிரத நிலைய அதிபர் சங்க கூட்டத்தில் தனக்கு நேர்ந்த அவலத்தைக் கூறி ஆதங்கப்பட்டுள்ளார் அவர்,

கொழும்பிலிருந்து மதவாச்சிக்குத் திரும்பியதும் இந்த சம்பவம் தொடர்பாக வவுனியா புகையிரத நிலைய அதிபருக்கும் அவர் புகார் செய்துள்ளார்.

ஆயுதங்களோடு பிரயாணஞ் செய்த 'அந்தப் பயணி' தாண்டிக்குளம்-நொச்சிமோட்டை வீதித்தடை முகாம் பகுதியில் முக்கிய பாதுகாப்புப் புள்ளி எனத் தெரியவந்துள்ளது. இந்தச் சம்புவம் பற்றி கேள்வியுற்ற 'அந்த ஆயுதப் பயணிக்கு' வேண்டிய ஒருவர் ஆயுதபாணியின் சார்பில் மதவாச்சி புகையிரத நிலைய அதிபரிடம் தொலைபேசியில் மன்னிப்புக் கோரினாராம்.

புகையிரத நிலைய அதிபரது இடத்தில் ஒரு வடபகுதி பயணி அல்லது ஒரு வர்த்தகர் பிரயாணம் மேற்கொண்டிருந்தால்.....?

### ஹிஸ்புல்லா...

தேர்தலில் தன்னை நிலைநிறுத்துவதற்காக அவர் ஸ்ரீ.ல.சு.கயை நாடியுள்ளார் போலும்!

இதேவேளை பசீர் சேகுதாவூத் மு.கா.வில் இணைய முயன்று வருவதாகவும் தெரியவருகிறது.

ஈரோஸ் சுயேட்சைக் குழுவினூடாக பாராளுமன்றம் புகுந்த பசீர் பிரேமாவின் காலத்தில் நேரடியாகவே ஐ.தே.கவை ஆதரித்து வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. இப்போது அவரின் மரணத்திற்குப் பின் ஐ.தே.கவின் செல்வாக்கை இழந்த இவர் தேர்தல் சரிவையும் கருத்தில் கொண்டு தனது கட்சித் தாவுதலை நிர்ணயிக்கவுள்ளதாகத் தெரிகிறது. முஸ்லீம் காங்கிரசில் இருந்து ஹிஸ்புல்லா வெளியேற்றப் பட்டாலோ அல்லது வெளியேறி வேறு கட்சிகளில் சேர்ந்தாலோ அவ்விடத்தில் புகுந்து கொள்ள இவர் தயாராகி வருவதாகவும் தெரிய வருகிறது.

### காலம் கடந்த...

பாராளுமன்றம், அமைச்சரவை என்பவற்றின் தலையீடு அறவே இருக்கக்கூடாது.

2) அமெரிக்காவில் உள்ளது போன்று மத்திய அரசு. தனக்கென சில அதிகாரங்களை ஒதுக்கி விட்டு, ஏனையவை அனைத்தும் சமஸ்டி அரசிடம் கொடுக்கப்பட வேண்டும்.

3) சமஸ்டி அரசுக்கு தனக்கென சொந்த அரசியலமைப்பை உருவாக்கும் அதிகாரம் கொடுக்கப்பட வேண்டும்.

4) காணி, சட்டம் ஒழுங்கு நிதியினை பெற்றுக் கொள்ளல், வெளிநாட்டு உதவிகளைப் பெறல் என்பன தொடர்பாக முழுமையான அதிகாரம் வழங்கப்பட வேண்டும்.

5) சமஸ்டி அரசின் சம்மதமின்றி அது தொடர்பான அரசியலமைப்பின் ஏற்பாடுகளில் மாற்றம் செய்யக்கூடாது.

6) மத்திய அரசுடன் இணைந்து இருப்பது திருப்தியற்றதாக இருக்கும் பட்சத்தில் பிரிந்து தனியரசை அமைத்துக் கொள்ளும் சுயநிர்ணய உரிமை சமஸ்டி அரசுக்கு வழங்கப்பட வேண்டும்

7) சமஸ்டி அரசை கலைக்கும் உரிமை மத்திய அரசிடம் இருக்கக்கூடாது.

8) மத்திய அரசினால் நியமிக்கப்படும் ஆளுநர் பெயரளவு நிர்வாகியாகவே இருக்க வேண்டும்.

எனவே இவ்விடயங்களைக் கவனத்தில் எடுத்து அரசியலமைப்பில் அதனை ஏற்படுத்தும் போதே சுயநிர்ணய உரிமையைப் பாதுகாத்துக் கொள்ள முடியும். இல்லையேல் எமது தலைமைகள் எல்லாம் ஏமாந்த சோனகிகள் என்றே வரலாற்றில் திரும்பத் திரும்ப எழுதப்பட வேண்டி ஏற்படும்.

இறுதியாக இவ் அமர்வில் பதிலுரையாற்ற வந்த கலாநிதி செல்வகுமாரனின் கருத்தைப்பற்றி நான் எதுவும் கூறவிரும்பவில்லை: கிழக்கை வடக்குடன் இணைப்பதற்கு என்ன நியாயத்தை கூறப் போகிறீர்கள் என்று கேட்கின்ற அளவுக்கு தேசிய இனப்பிரச்சினையின் அரிச்சுவடி கூட தெரியாமல் இருக்கும் கொழும்பு தமிழ்ப் புத்திஜீவியின் கருத்து பற்றி எழுதி பக்கங்களை வீணாக்க விரும்பவில்லை. எனினும் இவர் உரைபற்றி கருத்தரங்குக்கு வந்த இருவர் பேசிக் கொண்டதை இவ்விடத்தில் கூறலாம் என்று நினைக்கின்றேன்.

''தமிழ் மக்கள் அதிகாரத்தை நிலைநிறுத்தும் போராட்டத்தில் இறங்கி எங்கேயோ நிற்கிறார்கள். இவர்கள் மாத்திரம் கிழக்கை இணைப்பதற்கு நியாயம் தேடிக் கொண்டிருக்கின்றார்கள்...' இக்கூற்றுக்கு மற்றையவர் இவ்வாறு பதில் அளித்தார்.

''இவர்கள் வடக்கு -கிழக்கு தமிழர்களின் பிரச்சினையை ஆராயவில்லை. கொழும்புத்தமிழர்களின் பிரச்சினையைத் தான் கதைக்கிறார்கள்.''

கலாநிதியின் பதிலுரைக்கு இவை போதுமென்று நினைக்கின்றேன்.

# மணிவாசகம்

### நான் பின்னாலே வருவேன்!

''சிங்கள இனத்தைக் கட்டியெழுப்பக் கூடிய நேர்மையான தலைவரொருவருக்கு ஒத்துழைப்புக் கொடுத்துச் சிங்கள இனத்தின் உரிமைகளைப் பாதுகாக்க வேண்டும். இப்பிரச்சினை தொடர்பாக ஜனாதிபதி டீ.பீ.விஜேதுங்க நேர்மையாகப் பேசுவது மகிழ்ச்சியைத் தருகிறது. அவ்வாறான தலைவரொருவர் சிங்களவர்கள் தொடர்பாக நேர்மையான உணர்வுடன், தெளிவான செயல் வழியொன்றை எடுப்பாரானால் நானும் அவர் செல்லும் பாதையில் செல்லத் தயாராகவுள்ளேன்.''

**ஹெல உருமய (சிங்களப் பாரம்பரியம்) அமைப்பாளரும், களுத்துறை மாவட்ட ஸ்ரீ.ல.சு.க பா.உ. மான திலக் கருணா ரத்ன -திவயினவில் -14.03.1994**

### ட்ரைவர் டி.பி. கண்டக்டர் நான்!

''இது றுஹுணு கடுகதி பஸ் ஆகும். நாம் வேகமாக றுஹுணுப் பிரதேசத்தை வளர்ச்சியடையச் செய்யப்போகிறோம். இந்த பஸ் வண்டியின் சாரதி ஜனாதிபதி டீ.பீ.விஜேதுங்க ஆவார். நடத்துனர் நான். நீங்களும் இந்த பஸ் வண்டியில் எம்முடன் அபிவிருத்திப் பாதையில் ஒன்று சேர்ந்து எமது பயணத்தை வெற்றி பெற வையுங்கள். இப்போது ஓடுவது எமது பஸ் மட்டுமே. மற்றைய பஸ் குற்றியின் மேல் நிற்கிறது. அதன் சாரதி வயதான காரணத்தால் இப்போது புதிய சாரதியொருவரைப் போட்டுள்ளார்கள். அவருக்கு அனுமதிப் பத்திரம் இல்லை.''

**ஸ்ரீ லங்காப் பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்க -திவயினவில்- 14.3.1994**

### அநுராவின் கிலி!

''இன்று இடதுசாரிக் கட்சிகளிடம் பாரிய சதித் திட்டம் ஒன்று உள்ளது. பண்டாரநாயக்க அம்மையாரைக் கட்சித் தலைமைப் பீடத்திலிருந்து ஒதுக்குவதற்கு முன்பு அவர்கள் என்னை ஒதுக்கச் சதி செய்தனர். அம்மையாருக்கு இவை விளங்குவது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி படுகுழியில் விழுந்த பின்பாகும்.''

**ஸ்ரீ லங்கா உயர் கல்வி அமைச்சர் அநுரா பண்டாரநாயக்க -லங்காதீபவில்- 15.3.1994**

### தொண்டமானின் வாக்குரிமையையும் பறி!

''புத்த மதம் இந்நாட்டின் அரச மதமாக்கப்பட வேண்டும். இந்நாடு சிங்களவர்களின் நாடாக ஆக்கப்பட வேண்டும். எமக்கு அதிகாரம் கிடைத்தால் தொண்டமான் போன்றவர்களின் வாக்குரிமையை இல்லாதொழிப்போம். ஸ்ரீமாவோ அம்மையாரின் குடியுரிமையை இல்லாது செய்து வாக்குரிமையை இல்லாது செய்ய முடியுமானால் தொண்டமானின் வாக்குரிமையை இல்லாதொழிக்க முடியாதது ஏன்?''

**சிங்கள மஹா சம்மத்த பூமி புத்ற கட்சியின் தலைவர் சட்டத்தரணி ஹரிஸ் சந்திர விஜேதுங்க -லங்காதீபவில்- 16.3.1994**

### சு.கட்சியின் பாராட்டு டி.பிக்கு

''சிறுபான்மையினரின் கோரிக்கைகளுக்குக் கீழ்ப்பட்டு அதிகாரத்தைப் பகி... எமது நாட்டின் சில தலைவர்கள் முயன்றது தவறாகும். அதற்கு எதிராகப் பேசிய ஒரே ஒரு அரச தலைவர் தற்போதைய ஜனாதிபதி டீ.பீ.விஜேதுங்க ஆவர்.''

**கொழும்பு மாவட்ட ஸ்ரீ.ல.சு.கப் பா.உ. பீ.ஏ.ஜினதாச நியத்தபால - திவயினவில்- 16.3.1994**

### தேரரிற்குத் தெரியாதாம்

''புலிகள் இயக்கம் ஈழத்திற்காகப் பத்துவருட காலத்துக்கும் மேலாகப் போர் புரிவது அரசாங்கத்துடன் என்றால் அக் கோரிக்கைகளை அரசாங்கத்திடம் விடுக்காது மஹா நாயக்கர்களின் தோளின் மீது சுமத்தும் இரகசியம் என்ன?

**கலாநிதி தறமிற்றிபொல றத்னசார தேரர் -லங்காதீபவில்- 17.3.1994**

### எதிர்க்கட்சிகள் புலிகளுடனா?

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி உட்பட எதிர்கட்சிகள் புலிகள் இயக்கத்துடன். சேர்ந்து மறைமுகமான இயக்கமொன்றை நடத்தி வருகிறது என்ற சந்தேகம் எழுந்துள்ளது. அதனால் நாம் கவனமாகச் செயற்பட வேண்டியுள்ளது.''

### சிங்களம் அரச மொழியா?

''தற்போது எமது நாட்டின் அரச கரும மொழி சிங்களம் எனக் கூறப்பட்டாலும் வடக்கில் சிங்களவர் எவரும் இல்லை. கிழக்கிலும் சிங்களம் இல்லை. சிங்களப் பாடசாலையொன்று கூட அங்கு இல்லை. அது மட்டுமல்ல நாட்டின் மத்தியிலும் சிங்களம் இல்லை. அப்படியாயின் இம் மாகாணங்கள் மூன்றிலும் தமிழுடன் தான் சிங்களம் அரச கரும மொழியாகியுள்ளது.''

**களனிப் பல்கலைக்கழகத்தின் கலாசாரப் பிரிவின் விரிவுரையாளர், பாணதுறே றன்கோத் விஹாராபதி பண்டித்த கஹபல சுகத்தறதன தேரர் - திவயினவில் -17.03.1994**

### றுஹுணுவின் மைந்தர்கள்

''தெற்கு புண்ணிய பூமியாகும். அதேபோல் போராட்ட பூமியும் ஆகும். அன்று எல்லாளன் உட்படத் தமிழர்களிடமிருந்து இந்நாட்டை மீட்டெடுத்து நாட்டை ஒன்றிணைப்பதற்கு, றுஹுணுவின் மைந்தனான துட்டகைமுனு அரசனால் முடிந்தது. இன்று வட கிழக்கு யுத்தத்தினால் மரணிப்பதும் அப் போராட்ட முன்னணிக்குச் சென்ற றுஹுணுவின் மைந்தர்களேயாவர்.''

**ஸ்ரீ லங்கா மேல் மாகாண சபை உப தலைவரும், மாகாண சபை ஸ்ரீ.ல.சு.க உறுப்பினருமான றெஜினோல்ட் குறே -லங்காதீபவில் -18.03.1994.**

**சீ. சாத்தனார்**

சரிநிகர் மாதமிருமுறை இதழ். இல.18/2 அலோசாலை கொழும்பு 03, இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்திற்குமான இயக்கத்தின் சார்பில் வெளியிடுபவர் ச.பாலகிருஷ்ணன். 07/04/1994